கோகுலம்


GOKULAM

டிசம்பர் '97 ரூ. 5/-





டிசம்பர் '97
மலர் : 15
இதழ் : 11



கோகுலம்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

கோகுலம் வாசகர்களான நீங்கள் அனைவருமே 'கோகுலம் சிறுவர் சங்க' உறுப்பினர்களே! உங்கள் குடியிருப்புப் பகுதியில் அல்லது பள்ளியில் கோகுலம் சிறுவர் சங்கத்தை அமைக்கலாம். இச்சிறுவர் சங்கத்தில் உங்கள் நண்பர்களையும் உறுப்பினராக்குங்கள். உங்கள் ஆசிரியர் அல்லது உங்கள் பகுதியில் உள்ள எழுத்தாளரோ, பெரியவரோ நிச்சயம் உதவுவார்கள்; வழிகாட்டுவார்கள். கோகுலம் சிறுவர் சங்கத்தைத் தொடங்கிய பின் எங்களுக்கு எழுதுங்கள்.

கோகுலம் சிறுவர் சங்கத்தில் என்னென்ன செய்யலாம்? கோகுலம் வாசிப்பு, பாடல், நாடகம், விளையாட்டு, சின்னச் சின்ன சமூகப்பணிகள் இப்படி எத்தனையோ செயல்பாடுகளில் நீங்கள் ஈடுபடலாம். பிரசுரிக்கும்படியான சிறந்த, சுவையான செயல்பாடுகள் கோகுலத்தில் இடம் பெறும். கோகுலம் சிறுவர் சங்கத்தின் நடவடிக்கைகளை மறவாமல் எழுதி அனுப்புங்கள். வேடிக்கையான நிகழ்ச்சிகளை விட்டு விடாதீர்கள்!

இந்த இதழ் அட்டைப்படத்தில் உள்ள சிறுவனும் சிறுமியும் '97 போய்கிட்டே இருக்கு; '98 வந்துக்கிட்டே இருக்கு' என்று சந்தோஷமாகக் கத்துவதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. அதுதான் கோகுலம் சுழற்கோப்பை! விவரமாகச் சொல்கிறேன்:

கோகுலம் இதழில் இடம் பெறும் வண்ணம் பல படைப்புகளையும் நீங்கள் உருவாக்கி அனுப்பலாம். பிருந்தாவனக் கதையரங்கம், பிருந்தாவனக் கவியரங்கம், ஓவியக் கூடம், கட்டுரைகள், புதிர்கள், அனுபவத் துணுக்குகள்; சிரிப்பு வெடிகள் முதலியன வெல்லாம் நீங்கள் பங்கு பெறவேண்டி உருவாக்கப்பட்ட பகுதிகள்தானே!

1998 ஜனவரி முதல் டிசம்பர் வரை எந்தப் பள்ளி மாணவர்களின் படைப்புகள் கோகுலத்தில் அதிகமாக இடம் பெறுகிறதோ, அப்பள்ளிக்கு 'கோகுலம் சுழற் கோப்பை' வழங்கப்படும். எனவே கதை, கட்டுரை முதலானவற்றை அனுப்பும்போது மறவாமல் வகுப்பு, பள்ளியின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு முழு விலாசம் எழுதவும். பின்கோடு மறவாதீர்கள்! என்ன, 1998 ஆம் ஆண்டிற்கான சுழற் கோப்பையை வெல்வதற்குத் தயாராகிவிட்டீர்களா?

அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்!

அன்புடன்

ஆசிரியர்
(கி. ராஜேந்திரன்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

கோகுலம்

டிசம்பர் 1997

இந்த இதழில்...

யாருக்கு என்ன? – போட்டி முடிவு

இந்தப் போட்டியில் வழக்கம் போல் ஏராளமான வாசகர்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலானவர்கள் சரியான விடையையே தந்திருக்கிறார்கள். எனவே பரிசுக்குரியவர்களை குலுக்கல் முறையிலேயே தேர்தெடுக்க முடிந்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்:

1. ஏ.என். பத்மப்ரியா, கோபிசெட்டிப் பாளையம்.
2. எஸ். காதர் மொய்தீன், கிருஷ்ணாம்பேட்டை, அரக்கோணம்.
3. ஆர். ராதா லட்சுமி, தென் அழகாபுரம், சேலம் மாவட்டம்.
4. என். கணேசன், மேலைச்சிவபுரி, திருமயம் தாலுகா.
5. பி. ரோஸிலின், அய்யம்பேட்டை, தஞ்சை மாவட்டம்.
6. ச. இளங்கதிர், புதுவை.
7. ஜெ. சுகுணா, மேலகரம், தென்காசி.
8. மைக்கேல் லாரன்ஸ், வேதாரண்யம், நாகை மாவட்டம்.
9. ஜெ. கனகா தேவி, திருநின்றவூர், செங்கல்பட்டு மாவட்டம்.
10. அ. அருண்குமார், தளவாய்புரம், விருதுநகர் மாவட்டம்.
11. டி. முனிலட்சுமி, மேகல சின்னம்பள்ளி, தருமபுரி மாவட்டம்.
12. எம். அருள்தாஸ், கீரலத்தூர், திருவாரூர் மாவட்டம்.
13. வி. குகன் சக்கரவர்த்தி, பேரையூர், மதுரை மாவட்டம்.
14. கே. பாலாஜி, ஜனக்புரி, புதுடில்லி.
15. எஸ். சாம் ஸ்டீபன், அகரம், சென்னை.

சரியான விடை:

1. தாத்தா – கைத்தடி, ராணுவ வீரர் – துப்பாக்கி.
2. மீன் பிடிப்பவர் – தூண்டில், ஆடு மேய்ப்பவர் - துரட்டு.
3. டெய்லர் – அளவெடுக்கும் நாடா, குரங்காட்டி – குச்சி.
4. டிரைவர் – ஸ்டியரிங், படகோட்டி – துடுப்பு
5. டாக்டர் – ஊசி, ஓவியர் – பிரஷ்.
6. பாட்டி – விசிறி, குட்டிப்பையன் – பட்டாசு.
7. குடுகுடுப்பைக்காரன் - குடுகுடுப்பை, புல்லாங்குழல் கலைஞர் - புல்லாங்குழல்.
8. விறகு வெட்டி -- கோடாரி, அம்மா - அரிவாள் மனை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



சான்டா கிளஸ்

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மென் நாடுகளில் உள்ள குழந்தைகளிடம் "உங்களுக்கு மிக மிகப் பிடித்தமானவர் பெயரை எழுதுங்கள்" என்று பொம்மைகள் தயாரிக்கும் பிரபலமான ஒரு நிறுவனம் கேட்டுக் கொண்டது. பல இலட்சம் குழந்தைகள் இதில் கலந்து கொண்டு தங்களுக்கு மிகவும் பிடித்தமான நபரின் பெயரை எழுதினர். இவை தொகுக்கப் பட்டன. தங்களுக்கு மிகவும் பிடித்தமானவர் என்று அதிக அளவிலான குழந்தைகள் யாரைக் குறிப்பிட்டிருந்தனர் தெரியுமா? அம்மாவையோ, அப்பாவையோ அல்ல. சான்டா கிளஸ் என்னும் கிறிஸ்துமஸ் தாத்தாவை!

இந்த அளவுக்கு உலகம் முழுதும் உள்ள குழந்தைகளின் மனம் கவர்ந்த இந்த கிறிஸ்துமஸ் தாத்தா எங்கே தோன்றினார். குழந்தைகளின் மனம் கவரும் அளவுக்கு எப்படி புகழடைந்தார் என்பது சுவையான வரலாறு.

கிறிஸ்துமஸ் என்று கூறியவுடனேயே மாட்டுக் கொட்டகை, குழந்தை ஏசு, தேவதூதர்கள், வெள்ளி நட்சத்திரம் என்று வரிசையாக நினைவுக்கு வருபவைகளில் கிறிஸ்துமஸ் தாத்தாவும் தவறாமல் இடம் பெற்று விடுகிறார். இவர் எப்படி நுழைந்து கொண்டார்?

கிறிஸ்துமஸ் தாத்தா தோன்றியது தங்கள் நாட்டில்தான் என்று நெதர்லாந்து மக்களும், பிரான்ஸ் மக்களும், வட அமெரிக்க மக்களும் உரிமை கொண்டாடுகிறார்கள். ஆராய்ச்சியாளர்களால் இது குறித்து உறுதியாக முடிவு எடுக்க முடியவில்லை, இன்னமும் கூட!

ஒரிஜினல் சான்டா கிளஸ் குள்ளமாக சரிந்த தொப்பையோடு இருப்பார். வெண்தாடி மீசை, தொளதொளக்கும் குடு குடுப் பாண்டி கோட்டு. அந்த முழுக்கை



குழந்தைகளின் மனதை மட்டுமல்ல, பெரியவர்களின் மனதையும் கொள்ளை கொள்ளும்படி புராதன கிறிஸ்துமஸ் தாத்தாவின் தோற்றம் இருந்தது.

கிறிஸ்துமஸ் தாத்தாவின் உடை, பனிமூடிய பிரதேசத்தில் எஸ்கிமோக்கள் அணியும் உடையே; வண்டி, வட துருவ ஆர்டிக் மக்கள் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தும் அதே பனிச் சறுக்கல் வண்டியே; வண்டியை இழுக்கும் பனிமான்கள் கூட ஆர்டிக்கின் ரெயின்டீர் எனப்பட்ட சிறப்பான கலைமான்கள் வகையே; அந்த வண்டி ஓடும்பாதை கூட உறைபனி மூடிய ஆர்டிக் சரிவே. அதனால் சான்டா கிளஸ் ஆர்டிக் பகுதியைச் சேர்ந்தவரே என்று ஒரு வாதம். இதை யாராலும் மறுக்க முடியவில்லை.

கோட்டு சிவப்பு நிறத்தில் அமைந்து வெள்ளை பார்டர் கொண்டது; கம்பளியால் செய்யப்பட்டது. இவர் நடந்து வர மாட்டார். வெண்பனியில் சறுக்கிச் செல்கிற நீண்ட வண்டியில் கையில் மணியைப் பிடித்தபடி நின்று கொண்டு வருவார். வண்டியில் அவருக்குப் பின்னால் கட்டுக் கட்டாக விதம்விதமான பரிசுப் பொட்டலங்கள் அடுக்கப்பட்டிருக்கும். இந்தச் சறுக்கு வண்டியை, வரிசைக்கு இரண்டாக ஆறு பனிமான்கள் இழுத்து வரும். பார்த்த உடனேயே,

இந்த வாதத்தை மேலும் உறுதிப்படுத்த ஒரு வலுவான பின்னணியும் இருந்தது. ஆர்டிக் பகுதி, பனிப்பாறைகள் மூடிய பகுதி. எந்த நேரமும் உயிருக்கே உலை வைக்கும் கடினமான வாழ்க்கை. பனி மூடிய சரிவுகளில் மனிதர்களோ இல்லை பனிமான்களோ எதிர்பாராமல் விழுந்து சிக்கிக் கொள்ளும் அபாயம் சர்வ சாதாரணம். இவர்களைக் காப்பாற்றவே சான்டா கிளஸ் எங்கும் நிறைந்தவராக சுற்றிக்

கொண்டிருப்பார். கையில் இருக்கும் மணியை ஒலித்துத் தான் இருப்பதை மக்களுக்கு அறிவித்து அவர்களை நம்பிக்கை இழக்க விடாமல் செய்வார். மக்களின் மனதில், குறிப்பாக ஆபத்துகளுக்கு இடையே வாழ்ந்த மக்களுக்கு இவர் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தரவல்ல பெரிய சக்தியாக விளங்கினார்.

சான்டா கிளஸ் என்ற பெயர் எப்படி வந்திருக்கக் கூடும்? சின்டிகிளாஸ் என்ற டச்சுப் பெயரே பேச்சு வழக்கில் திரிந்து சான்டா கிளஸ் ஆகியிருக்கக் கூடும் என்கிறார்கள் வல்லுனர்கள். அப்படியானால் இந்த சின்டி கிளாஸ் என்பவர் யார்? துருக்கியில் Myra என்ற தேவாலயத்தில் இதே பெயரில் ஓர் ஆர்ச் பிஷப் இருந்திருக்கிறார். மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட இவர், மக்களின் குறைகளைத் தீர்க்க அரும்பணி ஆற்றினார். குறிப்பாக அனாதைக் குழந்தைகளுக்கும், திருமணமாகாது கைவிடப்பட்ட பெண்களுக்கும் ஆதரவு தர அவர் பெரிதும் பாடுபட்டார். இவர் தான் தன்னை யாரென்று வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்க சான்டா கிளஸ் வேடமணிந்து, தவிக்கும் மக்களுக்கு அவர்களின் துயரைத் துடைக்க அவர்கள் அறியாமல் இரவோடு இரவாக வந்து, அவர்கள் வீட்டு வாசற்படியில் பரிசுப் பொருள்களை வைத்துப் போவார். இந்தப் பரிசுகள் அவர்களுக்குத் தேவைப்படும் மருந்துப் பண்டங்களாகவோ, துணிகளாகவோ, உணவு வகைகளாகவோ, திருமண மோதிரங்களாகவோ பணமாகவோ, குழந்தைகள் விளையாடக் கூடிய பொருள்களாகவோ இருக்கும். இப்படிப்பட்ட நல்லவரை யார்தான் விரும்ப மாட்டார்கள்?

ஆர்ச் பிஷப் சின்டிகிளாஸ்தான் மாறு வேடத்தில் வந்து உதவுகிறார் என்பது மிக உறுதியாகத் தெரியாவிட்டாலும், அவரைத் தவிர வேறு யாருக்கும் இத்தகைய உதவிகளைச் செய்யும் அளவுக்கு இரக்கமோ, பணவசதியோ இல்லை என்பதால், அவரேதான் செய்கிறார் மக்கள் உறுதியாக நம்பினர். நாளடைவில் நாமும் மக்களுக்கு உதவ வேண்டும் என்று விழைந்த பலரும், சான்டா கிளஸ் வேட மணிந்தே இதைச் செய்ய முற்பட்டதால் சான்டா கிளஸ்ஸின் புகழ் மற்ற நாடுகளுக்கும் வேகமாகப் பரவியது. ஆதரவு இல்லாதவர்களுக்கு உதவ வந்தவர்கள் எல்லாம் சான்டா கிளஸ் ஆக மாறி, ஆதரவுக் கரம் நீட்டினர். இது ஒரு இயக்கம் போலவே எல்லா நாடுகளுக்கும் பரவியது. மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. நெதர்லாந்திலிருந்து வட அமெரிக்கா, அங்கிருந்து பிரிட்டன், பிறகு பிரான்ஸ் இப்படி ஐரோப்பா முழுவதும், உலகம் முழுவதும் சான்டாகிளஸ் கிறித்துவ மக்களிடையே நிலையான இடத்தைப் பெற்றார். சான்டா கிளஸ்ஸின் தொண்டுப் பணிகளோடு, அவரது தோற்றமும் மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றது.


கிறிஸ்துமஸ் வாழ்த்து மடல்களில், நாள்காட்டிகளில், பரிசுப் பெட்டிகளில், பல வண்ணங்களில் கிறிஸ்துமஸ் தாத்தா இடம் பெற்றுள்ளார். புராதன கிறிஸ்துமஸ் வருகைப் பாடல்களில் இவருக்கு இடம் இல்லை. ஆனால் புதிதாக புனையப்படும்

"உலகம் அழியவே அழியா தூங்கறேன்."

"எப்படிச் சொல்றே?"

"அவ்வளோ பெரிய ரப்பருக்கு எங்கே போறது?"

— ஜி. புவனேஸ்வரி, திருநகர்.



பாடல்களில் இவருக்கு இடம் உண்டு! குழந்தைகள் பெருமகிழ்ச்சியோடு இவரை வரவேற்கிறார்கள். கிறிஸ்துமஸ் ஊர்வலங் களில் இவர் இடம் பெறுகின்றார். இவர் இல்லாமல் கிறிஸ்துமஸ் நினைப்பே வராதோ என்று எண்ணும் அளவுக்கு இவர் ஆகிவிட்டார்.

ஆனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங் களையும் விழா நிகழ்ச்சிகளையும் மேன் மேலும் பொலிய வைக்கும் ஓர் இன்றி யமையாத சக்தியாகி விட்ட கிறிஸ்துமஸ் தாத்தாவுக்கு, கிறிஸ்துமஸ் சம்பந்த மதச் சடங்குகளில் இடம் இல்லை! இவரைத் தடை செய்து விடலாமா என்று கூட எண்ணினார்கள். கிறிஸ்துமஸ் தாத்தாவின் பேரில் அளவில்லாத அன்பைச் சொரிந்து வைத்திருந்த மக்கள், குறிப்பாகக் குழந்தை கள், பதை பதைப்புடன் இப்படித் தடை ஒன்றும் போட்டு விடக் கூடாதே என்று வேண்டிக் கொண்டார்கள். நல்ல காலம், அப்படி ஏதும் தடை போடப்படவில்லை. மக்களிடையே தாத்தா பெற்றிருந்த செல்வாக்கு அவர்களை யோசிக்க வைத் தது போலும்.

கிறிஸ்துமஸ் தாத்தாவின் உடையலங் காரம், நாட்டுக்கு நாடு வேறுபட்டாலும் தாடியும் கோணக் குல்லாவும் மட்டும் மாறவே இல்லை. வண்ண பலூன்கள், பிளாஸ்டிக் ஜிகினாக்கள், தாளம் போடும் பூட்சுகள் என்று நவீன கண்டு பிடிப்புகள் எல்லாவற்றையும் இவர் தயங்காமல் ஏற்கிறார். புதுப் பொலிவு பெறுகிறார். சலங்கை கட்டி குதித்து குதித்து அந்தந்த நாட்டு மக்களின் தாய்மொழியில் பாடு கிறார். பருப்பில்லாமல் கல்யாணமா என் பது போல் கிறிஸ்துமஸ் தாத்தா இல்லாமல் கிறிஸ்துமஸா என்று எண்ணும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுவிட்ட இவர் என்றென்றும் மக்களிடையே; குறிப்பாகக் குழந்தைகளிடையே நிலைத்திருப்பார்.

தொகுப்பு : ரே



[illegible]

குறளைக் கண்டுபிடியுங்கள்!

என்றும் இன்பம் பொங்க!

எப்பொழுதும் இதயத்திலே
துன்பம் இல்லாமல் - நான்
இன்பம் பொங்க வாழ்வதற்கு
என்ன வழியோ?
இப்பொழுதே நீங்கள் அதை
எனக்குச் சொல்வீரேல் - நான்
என்றைக்குமே அந்த வழி
நடக்க முனைவேன்.

வேண்டுதல் வேண்டாமை
இல்லா தான்பதம் - நாம்
விருப்பத்தோடும் நம் மனத்தில்
பதித்துக் கொண்டாலே,
யாண்டும் யாண்டும் இடும்பை என்ப
தில்லாமல் போமாம் - நம்
அருள் முனிவர் வள்ளுவனார்
சொன்ன திருவாம்.


— ரா. பொன்ராசன்

வருவான் பார்!

எஸ். வஜ்ரவேலு

விடுமுறை என்றாலே ராமுவுக்கும் மீனாவுக்கும் கொண்டாட்டம்தான்! அவர்கள் இருவருடன் குட்டி நாய் மணியும் சேர்ந்து கொள்ளும். மூன்று பேரையும் வீட்டிலேயே பார்க்க முடியாது. தெருவில்தான் விளையாட்டு.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பயங்கர மழை. வெளியில் எங்கும் போக முடியாமல் ராமுவும் மீனாவும்



உட்கார்ந்திருந்தார்கள். பொழுதே போகவில்லை.

"அம்மா, நானும் மீனாவும் மழையிலே நனையாமல் குடையைப் பிடிச்சுக்கிட்டுப் போய் மோகன் வீட்ல விளையாடிட்டு வந்திடறோம்" என்றான் ராமு.

"மழை ரொம்ப அதிகமாயிருக்கு. வெளில எங்கேயும் போக வேண்டாம். வீட்டுக்குள்ளேயே செஸ் விளையாடுங்க" என்றார் அம்மா கண்டிப்புடன்.

"செஸ் விளையாடுற மூட் இல்லை" என்றாள் மீனா.

"ஒருத்தர் கண்ணை மூடிக்கிறேன். இன்னொருத்தர் போயி ஒளிஞ்சுக்குங்க" என்று அம்மா கூறியதும் இருவரும் சந்தோஷமாகத் தலையாட்டினார்கள்.

மீனாவின் கண்ணை அம்மா மூடிக் கொள்ள ராமுவும் மணியும் ஒளிந்து கொண்டனர்.

சிறிது நேரம் கழித்து மீனா தேடத் தொடங்கினாள். ஹால், ரூம், சமையல் அறை, குளியல் அறை என எல்லா இடங்களிலும் தேடி விட்டாள். ஆனால் ராமுவையும்

மணியையும் காணாதது குறித்து மிகவும் ஆச்சர்யப்பட்டாள். மீண்டும் ஒருமுறை தேடும்போது சமையல் அறையிலிருந்து மணி எட்டிப் பார்த்தது. வேகமாக ஓடிப் போய்ப் பிடித்துக் கொண்டாள்.

"அம்மா, ராமு எங்கே போனான்? நான் எல்லா இடமும் தேடிட்டேன். கண்டுபிடிக்க முடியலை?" என்று கெஞ்சினாள் மீனா.

நீண்ட நேரம் ஆகிவிட்டதை உணர்ந்த அம்மா ராமுவைக் கூப்பிட்டார். அப்போதும் அவன் வரவில்லை.

"இப்பப் பாரு மீனா, நான் ஒண்ணு பண்ணப் போறேன். உடனே ராமு ஓடி வரப் போறான்" என்றார் அம்மா.

மீனா ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நேத்து நீங்க ரெண்டு பேரும் தூங்கிட்ட பிறகுதான் உங்க அப்பா வந்தார். ஆபீஸ்ல ஏதோ விருந்தாம். ராமுவுக்கு பிடிச்ச பால்கோவாவும், உனக்குப் பிடிச்ச மிக்சரும் எடுத்துக்கிட்டு வந்தாரு. நீங்க தூங்கிட்டதால காலையில தரலாம்னு இருந்தேன். காலையிலேயும் கொடுக்க மறந்துட்டேன். இதோ இருக்கு. ராமு வரதுக்குள்ள எல்லாத்தையும் நீயே சாப்பிட்டுடு" என்றவுடன் ஒளிந்திருந்த ராமு வேகமாக ஓடி வந்தான்.

"இவ்வளவு நேரமா எங்கே இருந்தே ராமு?" என்றனர் இருவரும்.

"அரிசி மூட்டைக்குப் பக்கத்துல இன்னொரு அரிசி மூட்டையா சாக்கு பைக்குள்ள உட்கார்ந்திருந்தேன்" என்றான் ராமு.

"இனிமேல் அரிசி மூட்டையைக் கூட கிள்ளிப் பாக்கணும் போலருக்கு" என்றாள் மீனா.

ராமுவும் அம்மாவும் சிரித்தனர்.

பெங்குவின் பறக்குமா?

எஸ். சுஜாதா



அன்புள்ள ஆனந்த்,

உன் கடிதம் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. நேற்று தான் தேர்வு முடிந்தது. அதனால் தான் உடனே கடிதம் எழுதமுடியவில்லை. நீ கேட்டிருந்த 'பெங்குவின்' பற்றிய தகவல்களைச் சேகரிக்க விமலாவும் மிகுந்த ஆர்வத்தோடு உதவினாள்.

பறக்க இயலாத பறவைகள் எவைன்னு கேட்டால் நெருப்புக்கோழி, கிவி, ஈமுன்னு சரியாச் சொல்லிடுவே! இவைகளால் நன்றாக ஓட முடியும். ஆனால் இந்த பெங்குவினால் ஓடவும் முடியாது. தள்ளாடித் தள்ளாடி நடக்கத்தான் முடியும். இதற்குக் காரணம் பெங்குவினோட கால் அமைப்புதான். மற்ற பறவைகளைப் போல் இல்லாமல் சற்றுத் தள்ளி வளைந்து இருப்பதால் வேகமாக நடக்கவோ, ஓடவோ முடியாது!

பெங்குவின்கள் அண்டார்டிக், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற தென் பகுதிகளில்தான் வாழ்கின்றன. வட துருவத்தில் பெங்குவின்களே கிடையாது.

உன்னோட கணக்கு நோட்டு அட்டையில் இருந்த பெங்குவினின் பின்புறம் கறுப்பாகவும், அடிப்புறம் வெள்ளையாகவும், கழுத்துப் பகுதி மஞ்சளாகவும் இருந்தது இல்லையா? மறுபடியும் எடுத்துப் பார்! ஆனால் இத்துடன் நான் அனுப்பியிருக்கும் பெங்குவின் படங்களில் அடிப்புறம் நீலமாகவும், முதுகுப் புறம் கறுப்பாகவும் இருக்கிறது. இதுபோல பதினெட்டு வகைகளில் பெங்குவின்கள் இருக்கின்றன. இதில் அண்டார்டிக் பகுதிகளில் வாழ்வது அரச பெங்குவின். அரச பெங்குவினின் தாடையில் தான் மஞ்சள் நிறமிருக்கும்.

அரச பெங்குவின்தான் மிகவும் உயரமானது. கிட்டத்தட்ட ஒரு மீட்டர் உயரம் வரை இருக்கும்.

மீன், ஆக்டோபஸ், கடலில் இருக்கிற சின்னச் சின்ன உயிரினங்கள் தான் இவற்றின் உணவு.

பெங்குவின்கள் உற்றார், உறவினருடன் சேர்ந்து கூட்டமாகவே வாழ்கின்றன. குளிர் காலத்தில் கூட்டமாகக் கரைக்கு வந்து முட்டையிடுகின்றன. இவை மற்ற பறவைகளைப் போல் கூடு கட்டி முட்டை இடுவதில்லை. பனிப் பாறைகளின் மேலேயே முட்டையிட்டு அடைகாக்கும்.

பறவைகளில் பெண் பறவையோ அல்லது ஆணும் பெண்ணும் சேர்ந்தோதான் அடைகாக்கும். ஆனால்

அரச பெங்குவின்களில் ஆண் மட்டுமே அடைகாக்கின்றன. தன் பாதத்தின் மீது முட்டையை வைத்து அதன் மேல் உட்கார்ந்திருக்கும். அப்பா பெங்குவின் அடை காத்த எட்டு வாரத்தில் குஞ்சு பொரிக்கும். இந்த எட்டு வாரமும் அப்பா பெங்குவின் சாப்பிடாது! இதனால் உடலின் எடையை பெருமளவு இழந்து விடுகின்றன அப்பா பெங்குவின்கள்! முட்டை பொரிக்கும் காலம் உறைய வைக்கும் குளிராகவும் இருளாகவும் இருக்கும்.



அதுவரை அம்மா பெங்குவின் கடலுக்குச் சென்று இரை தேடும். குஞ்சு பொரிந்தவுடன் தாய் கரைக்கு வந்து உணவூட்டும். பெற்றோர் பெங்குவின்கள் குஞ்சுகள் அனைத்தையும் பாது காப்பான இடத்தில் விட்டு விட்டு கடலுக்குச் சென்று விடுகின்றன. நான்கு மாதம் கழிந்து குஞ்சுகளுக்கு நீந்துவதற்கும், இரை பிடிப்பதற்கும் கற்றுத் தருகின்றன அம்மாவும் அப்பாவும்.

இங்கு இரண்டு நாளாக தொடர்ந்து மழை! அறைக்குள் இருக்கும்போது கூட எவ்வளவு குளிர்! ஆனால் பனிப் பிரதேசங்களில் வாழும் இந்தப் பெங்குவின்களால் எப்படி குளிரில் இருந்து

அறிவியல் உண்மைகள்

✦ பெங்குவின்கள் குளிர் ரத்த பிராணி.

✦ அண்டார்டிக், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா போன்ற பகுதிகளில் வாழ்கின்றன.

✦ அரச பெங்குவின்கள் அண்டார்டிக் பகுதியில் மட்டுமே வாழ்கின்றன.

✦ அரச பெங்குவின்கள் ஒரே ஒரு முட்டையிடும். மற்ற இனங்கள் இரண்டு முட்டைகள் இடுகின்றன.

✦ அரச பெங்குவின்கள் ஒரு மீட்டர் உயரம் இருக்கும். மற்ற பெங்குவின்கள் அரை மீட்டர் உயரமே இருக்கும்.

✦ பறக்கவோ, வேகமாக நடக்கவோ இவற்றால் முடியாது.

✦ மீன், ஆக்டோபஸ் மற்றும் கடலில் வாழும் சிறிய உயிரினங்களே உணவு.

✦ அரச பெங்குவின்களில் ஆண் மட்டுமே அடைகாக்கும். அடைகாக்கும் வரை உணவருந்தாது. மற்ற வகைகளில் இரண்டும் அடைகாக்கும்.

✦ முட்டைகள் எட்டு வாரங்களில் குஞ்சு பொரிக்கும்.

✦ கூட்டமாக வாழும்.

✦ உடல் முழுவதும் சிறிய இறகுகளால் மூடப்பட்டிருக்கும். உடலிலிருந்து கொழுப்பு எண்ணெய் சுரந்து கொண்டிருப்பதால் குளிரிலிருந்து தப்ப முடிகிறது.

✦ சிறிய இறக்கைகள் நீந்தப் பயன்படுகின்றன. வால் இறகு குட்டையானது.

✦ வேகமாக நீந்தும். ஒரு முறை நீருக்குள் சென்றால் பதினெட்டு நிமிடம் வரை உள்ளிருந்து விட்டு வெளியே வரும்.

✦ கடலுக்கடியில் 265 மீட்டர் ஆழம் வரை செல்லும்.

✦ முப்பத்தி ஐந்து வருடங்கள் வரை உயிர் வாழும்.

✦ நாற்பதிலிருந்து ஐம்பது கிலோவரை எடையிருக்கும்.

✦ மிகவும் சாதுவானது. அன்பாகப் பழகக் கூடியது.

✦ அரச பெங்குவின் முதிர்ச்சியடைந்த பிறகே கழுத்துப் பகுதியில் மஞ்சள் நிறம் தோன்றும்.

✦ வழுக்கிச் செல்லக் கூடிய மீன்களைக் கூட கொக்கி போன்ற நாக்கால் சாமர்த்தியமாகப் பிடித்து விடுகின்றன பெங்குவின்கள்.

காப்பாற்றிக் கொள்ள முடிகிறது?

பெங்குவினோட உடல் முழுவதும் சின்னச் சின்ன இறகுகளால் மூடப்பட்டிருக்கும். உடல் முழுவதும் ஒருவித கொழுப்புப் பொருள் சுரந்து கொண்டேயிருக்கும். இதனால் குளிரும் பாதிக்காது. நீந்தும் போது தண்ணீரும் உள்ளே போகாது. பெங்குவின் தனது அலகால் உடலைச் சுத்தப்படுத்திக் கொள்ளும்.

இப்பறவைகளால் ஓடவோ, பறக்கவோ முடியாவிட்டாலும் அருமையாக நீந்தும். இவற்றின் இறக்கை துடுப்பு போல செயல்படுகிறது. தண்ணீருக்கடியில் பதினெட்டு நிமிடங்கள் வரை கூட இருந்து வெளியில் வரும்.

இவற்றின் எடை நாற்பதிலிருந்து ஐம்பது கிலோ வரை இருக்கும்.


பெங்குவின்கள் முப்பத்தைந்து வருடங்கள் வரை உயிர் வாழ்கின்றன.

இவை உன்னைப் போல் மிகவும் சாதுவானவை. ரொம்ப அன்பாகப் பழகக் கூடியவை.

பெங்குவினைப் பற்றி நாங்கள் சேகரித்த தகவல்களை தந்திருக்கிறேன். விமலாவுக்கு நன்றி சொல்லி கடிதம் எழுது. அடுத்த தடவை அம்மாவும் அப்பாவும் வரும்போது நீயும் வா. நம் நண்பர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகள். வேறு தகவல்கள் வேண்டும் என்றால் கடிதம் எழுது. ஹாஸ்டல் லைப்ரரியிலிருந்து எடுத்து தரேன்!

உன் ப்ரியமுள்ள அக்கா

– கங்கா



அந்த இரகசியம்

அரு. வி. சிவபாரதி

பாலு காலாண்டுத் தேர்வுக்காகப் படித்துக் கொண்டிருந்தான். அவன் வகுப்பிலேயே படிக்கும் கண்ணன் வந்தான். பாலுவும் கண்ணனும் நன்றாகப் படிக்கக்கூடியவர்கள்.

"எங்கே கிளம்பிட்டே?" என்று கேட்டான் பாலு.

"சினிமாவுக்குப் போறேன். நீயும் வர்றியா?" என்று கேட்டான் கண்ணன்.

"அடுத்த வாரம் பரீட்சை. படிக்க வேண்டாமா? ஆமாம்! நீ எல்லாப் பாடமும் படிச்சுட்டியா?" – பாலு.

"உன்னை மாதிரியா எல்லாப் பாடத்தையும் விழுந்து விழுந்து படிப்பாங்க? நான் படிக்கறதுக்கு ஒரு குறுக்கு வழி வச்சிருக்கேன்" என்றான் கண்ணன்.

"என்ன குறுக்கு வழி கண்ணா! எனக்கும் கொஞ்சம் சொல்லக் கூடாதா?" என்று கேட்டான் ஆதங்கத்துடன் பாலு.

"நான் சொல்லணும்னா, என்னோட நீயும் சினிமாவுக்கு வரணும்" என்றான் கண்ணன்.

இருவரும் சினிமாவுக்குச் சென்றனர். படம் முடிந்து திரும்பும் போது, "பாலு அந்தக் குறுக்கு வழி இதுதான். உன்னை மாதிரி எல்லாப் பாடத்தையும் கஷ்டப்பட்டுப் படிக்காமல், சில பாடங்களை மட்டும் தேர்ந்தெடுத்துப் படித்தால் போதும்" என்று நிறுத்தினான் கண்ணன்.

"அது எப்படிடா?" – பாலு.

"கடந்த ஆறு வருடங்களாக பாடத்திட்டம் மாறலை; அதனால புத்தகங்களும் மாறலே. ஆறு வருடங்களுக்கான பழைய கேள்வித்தாள்களை வைத்துப் பார்த்தால் எது, எது முக்கியமான கேள்விகள், எதை மட்டும் படிக்கணும்னு ஒரு ஐடியா கிடைக்கும். ஒரு பாடத்தில் இன்ன இன்ன கேள்விதான் வரும்னு பழைய கேள்வித்தாள்களைப் பார்த்து ஒரு லிஸ்ட் போட்டுடுப்பேன். ஒரு ஆண்டு இந்தப் பட்டியலில் இருந்து இரண்டு கேள்விகள் வந்து விட்டால், மீண்டும் அதே கேள்வியை அடுத்த ஆண்டு கேட்க மாட்டார்கள். இப்படித்தான் லிஸ்ட் போட்டுப் போட்டு என்ன வரும் என்பதைக் கண்டுபிடித்து விடுவேன். அதை மட்டும் வைத்துக் கொண்டு படித்தால் போதும். இதுதான் என் இரகசியம்" என்றான் கண்ணன்.

"எனக்கும் கொஞ்சம் குறிச்சுக்குடுடா. நானும் அதை மட்டும் படிக்கிறேன்?" – பாலு.

"நானும் நீயும் ஒண்ணாவே தயார் செய்து படிக்கலாம்" என்றான் கண்ணன்.

பாலுவுக்கு மகிழ்ச்சி. இருவரும் திட்டமிட்டபடி படித்துக் காலாண்டுத் தேர்வு எழுதினர். கண்ணன் சொன்னதைப் போல் இருவரும் நல்ல மதிப்பெண் பெற்றனர். பாலு கண்ணனுக்கு நன்றி கூறினான். இருவரும் சேர்ந்தே சுற்றினார்கள்.

நாட்கள் சென்றன. அரையாண்டுத் தேர்வு வந்தது. இருவரும் வழக்கம் போல் படித்தனர். முதல் இரண்டு தேர்வையும் திருப்தியாக எழுதினர்.

அடுத்த நாள் ஆசிரியர், வகுப்பறையில் தேர்வுக்கான வினாத்தாளைக் கொடுத்தபோது பாலுவும் கண்ணனும் அதிர்ச்சியடைந்தனர். கேள்விகள் எல்லாம் அவர்கள் எதிர்பார்க்காத, படிக்காத பாடங்களில் இருந்து கேட்கப்பட்டிருந்தன. தேர்வை முடித்து விட்டுக் கண்ணனிடம் வந்த பாலுவிற்கு, அழுகை அழுகையாக வந்தது.

"டேய் கண்ணா! நாம நினைச்ச மாதிரி கேள்வி வரலையே! நான் பெயில்



மார்க்தான் வாங்கப் போறேன்'' என்றான் பாலு.

''நானும் நினைக்கலே பாலு. இப்படி ஏமாத்திடுச்சே கேள்வித்தாள்! சரி வா நாளைய பரீட்சைக்காவது ஒழுங்காப் படிக்கலாம்.''

"எப்படி முடியும்? அரை நாள்ல எல்லாத்தையும் படிக்க முடியாது. குறுக்கு வழில படிக்க ஆரம்பிச்சதுக்கு தண்டனை போதும்!'' என்று கூறிய பாலு வீட்டை நோக்கி நடந்தான்.

அரையாண்டு விடுமுறை முடிந்து எல்லோரும் பள்ளிக்கு வந்திருந்தனர். தேர்வுத் தாள்கள் எல்லாம் கொடுக்கப்பட்டன. வகுப்பாசிரியர் வந்து, பெயில் மார்க் வாங்கினவங்களை நிற்கச் சொன்னார். பாலுவும் கண்ணனும் அழுதபடி நின்றனர். ஆசிரியருக்கே அதிர்ச்சி. பள்ளி முடிந்ததும் தன்னை வந்து பார்க்கச் சொன்னார்.

பள்ளி முடிந்ததும் இருவரும் வகுப்பாசிரியரைச் சந்தித்தனர்.

''பாலு, கண்ணன் ரெண்டு பேரும் நல்லா படிக்கக்கூடியவங்கதானே? ஏன் இப்படி மூன்று பாடத்தில் பெயிலாகியிருக்கீங்க? எனக்கே ஆச்சர்யமாயிருக்கு! ஏதாவது பிரச்சனையா?'' ஆசிரியர்தான் கேட்டார்.


பாலு அடக்க முடியாமல் நடந்ததைக் கூறினான்.

''படிக்கிறதே மார்க் வாங்கத்தான்னு முடிவு செஞ்சிருக்கீங்க. அதனால தான் குறுக்கு வழியில படிச்சிருக்கீங்க. எல்லாப் பாடத்தையும் நடத்தி எதுக்கு படிக்கச் சொல்றோம்? படிக்கிறதே அறிவை வளர்த்து, விரிவாக்கணும்னுதான். இந்தப் பாடம், இந்தக் கேள்வி முக்கியம்னு எதை வைத்து முடிவு செய்யறது? நல்லா படிச்சு அதை நம்ம வாழ்க்கையில பயன்படுத்திக்கத் தெரியணும். இனிமேலாவது எல்லாப் பாடத்தையும் படிச்சு நல்ல மாணவன்னு பெயரெடுப்பீங்கன்னு நம்பறேன். போயிட்டு வாங்க'' என்றார் ஆசிரியர்.

''சார்! இதை நாங்க அன்றைக்கே உணர்ந்திட்டோம். எங்களோட அனுபவம் மற்ற மாணவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும். இனி நாங்க நேர்மையா எல்லாத்தையும் படிச்சு, நல்ல மதிப்பெண் வாங்கிக் காட்டறோம்'' என்றனர் இருவரும்.

ஆசிரியர் நம்பிக்கையோடு சென்றார்.

குறுக்கெழுத்துப் புதிர்



ந. ரமா,
சென்னை.

இடமிருந்து வலம்

1. உலகிலேயே அதிக விக்கெட்டுகளை எடுத்த இந்தியரின் பாதி பெயர் (3)

2. கழுகு இனத்தைச் சேர்ந்த இறைச்சி தின்று வாழும் பழுப்பு நிறப் பறவை (4)

4. பொதி சுமக்க உதவும் விலங்கு (3)

12. உப்பளத்தில் உப்பை இப்படி வைத்திருப்பார்கள் (2)

14. கிரிக்கெட்டில் உலகக் கோப்பை வென்ற அண்டை நாடு (4)

மேலிருந்து கீழ்

1. முத்துச் சிப்பி வாழும் இடம் (3)

3. ஜலதோஷத்தின் அறிகுறி (4)

9. பறக்க இயலாத பறவைகளில் ஒன்று (2)

10. சமீபத்தில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலையடைந்த நகரம் (4)

11. இது மையம் கொண்டால் பெரும் சேதம் ஏற்படும் (3)

வலமிருந்து இடம்

5. வெண்டை, தக்காளி, மிளகாய் இதில் காய்க்கும் (2)

13. தண்டவாளத்தில் ஓடும் வண்டி (3)

16. கடலில் மீன் பிடிக்க உதவும் வாகனம் (3)

கீழிருந்து மேல்

5. வீடு கட்டப் பயன் படும். ஒரு மாவட்டத்தின் பாதிப் பெயரிலும் உள்ளது (4)

6. நள்ளிரவில் உணவு தேடி அலையும். இதன் அலறல் சத்தம் பயத்தை உண்டாக்கும் (3)

7. வயிற்றில் பை உள்ள ஆஸ்திரேலிய விலங்கு (4)

8. ஊறுகாய், உப்பு போட்டு வைக்க உதவும் (2)

14. நவம்பரில் பிறந்த இன்னொரு பிரதமர் (4)

15. மனிதனின் மூதாதையர் (4)

16. ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய டென்னிஸ் வீரரின் கடைசி பாதிப் பெயர் (3)

விடை : 64ஆம் பக்கம்


கிழக்குத் தெருவிற்கும் மேற்குத் தெருவிற்கும் மூன்று கிரிக்கெட் போட்டிகள் நடைபெற இருந்தன~
இரு அணித் தலைவர்களும் ~
என்னடா சங்கர் திடீர்னு ரெண்டு பசங்க ஊருக்-குப் போயிட்டாங்களே! உங்க டீம்ல இருந்தன்- எங்க டீம்ல இருந், தன்!
கதை: பி.ஆர்.பார்த்தசாரதி
படம்:
கண்ணாடி
நான் ஒரு யோசனை சொல்லட் -டுமா, மோகன்?
வெளியூர் பசங்க ரெண்டு பேர் வீட்டுக்கு வந்திருக்காங்க. நல்லா விளையாடுவாங்க...
சொல்லு!
ம்.. அவங்களையே விளையாட வைப்போமே!
அட! அதோ அவங்களே வர்றாங்க!
வணக்கம்.
கண்ணாடி போட்டவன் கோபி. இவன் பாலு!
வணக்கம்.


சங்கர், உங்கள் அணிக்கு யார் வேணும்?
கண்ணாடி போட்ட கோபியால் சரியா ஆட முடியாது!
என் அணிக்கு பாலுவை எடுத்துக் கொள்கிறேன்.
சரி நாளை, போட்டியில் சந்திப்போம்!
மறு நாள் போட்டியில்–
கண்ணாடி போட்டும் கூட இந்தப் போடு போடுறானே!
கோபி ரன்களைக் குவித்தான்!
கோபி! உன்னால் நான் கிழக்குத்தெரு அணி வெற்றி பெற முடிந்தது. வாழ்த்துக்கள்
சங்கர் கோபமாய்ப் போய்விட்டான்–
இரண்டாவது போட்டியில் மேற்குத்தெரு அணி வெற்றி பெற்றது–
சங்கர் உங்க அணிக்கு எங்க பாராட்டுக்கள்!
நன்றி! மோகன்!
அன்றிரவு சங்கர் திட்டம் போட்டான்–
நாளை எப்படியாவது வெற்றி பெற்றாகணும். ..... ம்.... ம்.. அப்படிச் செய்யலாம் வேறு வழியில்லை
நிம்மதியாகத் தூங்கிப் போனான்–



மறுநாள் - மைதானத்து பாத்ரூமில் -
கோபி முகம் கழுவும் போது, சங்கர் அவனுடைய கண்ணாடியை ஒளித்துவைத்துவிட்டான்.
கோபி வந்து -
என் கண்ணாடியைக் காணோமே!
ம்.. வெற்றி எனக்கே!
கோபி அபாரமாக ஆடி ரன்களைக் குவித்தான்
கிழக்குத் தெரு அணி வெற்றி பெற்றது!
கிழக்குத்தெரு அணியின் சார்பாக...
நன்றி சார்!
மோகன் கோப்பையைப் பெற்றான்
ஆட்ட நாயகன் - கோபி!
கோபி! கண்ணாடி இல்லாமலேயே எப்படி ஆட முடிஞ்சுது?
எனக்குப் பார்வைக் கோளாறு கிடையாது, சங்கர்! வெறும் ஃபேஷன் கிளாஸ்தான்!
ஹும்.. எனக்கு இந்தத் தோல்வி வேண்டியதுதான்!

காட்டில் முள்ளம் பன்றியொன்று மண்ணைத் தோண்டிக் கிழங்கைத் தேடிப் பறித்துத் நின்றுகொண்டிருந்தது. அவ்வழியே வந்த காட்டுப் பூனை, பன்றியிடம் "என்ன சௌக்கியமா? எப்படி வாழ்க்கை? என்று குசலம் விசாரித்துவிட்டு, "என்ன? பசி அதிகமா? காலையிலேயே கிழங்கைத் தேட ஆரம்பித்து விட்டாயே!" என்று நையாண்டி செய்தது.

தன் நண்பன் காட்டுப் பூனையைப் பார்த்து ரொம்ப நாளாயிற்றே என்று கிழங்கு தேடுவதை நிறுத்திய முள்ளம்பன்றி, "என்ன செய்வது? வயிறு ஒன்று இருக்கிறதே! சிரமப்படத்தானே வேண்டும்? உனக்குப் பரவாயில்லை. போகிற வழியிலே எலி தானாகவே உன் எதிரில் இரையாகக் கும்பிட்டு நிற்கும்' என்று பதிலுக்கு நையாண்டி செய்தது.

'வா; பேசிக் கொண்டே போகலாம்' என்று பூனை முள்ளம் பன்றியை அழைத்தது. 'அதற்கென்ன போகலாம். இதோ வந்து விட்டேன்' என்று முள்ளம் பன்றி அதன் வாய், முகம், உடலில் ஒட்டியிருந்த மண்ணை உதறித் தள்ளி விட்டுப் புறப்பட்டது.

இரு விலங்குகளும் காட்டில் தற்போது நிலவும் அமைதியில்லாத சூழ்நிலையைப் பற்றி விமர்சித்துக் கொண்டே நடந்தன. தொலைவிலிருந்து காற்றில் மிதந்து வந்த உறுமல் ஓசை இரண்டின் கவனத்தையும் கவர்ந்தது. உறுமலின் தன்மையிலிருந்து அது கரடியாரின் உறுமலாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணின. எண்ணியது போலவே பெரிய கரடி ஒன்று அவைகளை நோக்கி வருவது தெரிந்தது. கரடி வருகிற வேகம், அது பசியுடன் இருப்பதைக் காட்டியது.

அபாயம் நெருங்கி வருவதைத் தெரிந்த இரு மிருகங்களும் என்ன செய்வதென்று யோசித்தன. "எனக்கு ஒரு பயமுமில்லை. கரடிக்கு மரம் ஏறத் தெரியாது. நான் கண் மூடிக் கண் திறப்பதற்குள் அதோ, அந்த மரத்திலேறி விடுவேன். உன்னைப் பார்த்தால் தான் பரிதாபமாயிருக்கிறது. நீ என்ன செய்வாய்? எப்படித் தப்பிப்பாய்" என்று பூனை வினவியது.

"நான்தான் அகப்பட்டுக் கொண்டேன்! கடவுள் இருக்கிறார். அவர் எனக்கு ஒருவழி காட்ட மாட்டாரா?"

"சரி, சரி. நீ என்ன செய்வாயோ எனக்குத் தெரியாது. நான் மரத்தில் ஏறுகிறேன்" என்று கூறி அருகிலிருந்த மரத்திற்குத் தாவியது காட்டுப் பூனை. முள்ளம் பன்றி அதன் தலையை இலேசாக உள்ளிழுத்துத் தரையில் படுத்து அதன் உடலிலுள்ள முட்களைச் சிலிர்த்து நிறுத்திக் கிடந்தது.

பூனையும்



மு. துரைராசன்

அங்கு வந்த கரடி மரக்கிளையில் இருந்த காட்டுப் பூனையை ஆத்திரம் பொங்க ஏமாற்றத்துடன் பார்த்துப் பொருமியது. நேற்று மரத்திலிருந்து தவறி கீழே விழுந்ததில் காலில் காயம் ஏற்பட்டதால் கரடியால் மரத்தில் ஏற முடியவில்லை. 'மரத்தின் மேல் எத்தனை நேரம் இருக்க முடியும்? எப்படியும் கீழே வரத்தானே வேண்டும். அப்போது பார்த்துக் கொள்ளுகிறேன்,'' என்று தனக்குள் கறுவிக் கொண்டே முன்னம் பன்றியைப் பார்த்தது. அதன் உடலில் ஈட்டி போல் நீட்டிக் கொண்டிருந்த முட்களைப் பார்த்துப் பயந்தது. அதன் மேல் வாய் வைத்தால் அதன் முட்கள் குத்திக் கிழித்து விடும். எதற்கு வம்பு வேலை என்று அதைத் தொட அஞ்சியது. தொடாமல் அதனிடம் பேசுவது போல் அதை முகர்ந்து பார்த்து சில வினாடிகள் நின்றது. பிறகு அவ்விடத்தை விட்டு அகன்றது.

பூனை கீழே இறங்கி வந்து பன்றியிடம், "கரடி உன்னிடம் ஏதோ இரகசியம் பேசியதே! என்ன சொல்லிற்று?" என்று கேட்டது.

''ஆபத்து சமயத்தில் பூனை உன்னை கைவிட்டு விட்டு ஓடி மரத்தில் ஏறிக் கொண்டதே. எனக்கு மரம் ஏறத் தெரியாது என்ற நினைப்பில் தானே? நாங்கள் நன்றாக மரம் ஏறுவோம். மரத்தில் தொங்கும் தேனடைகளைப் பிய்த்துத் தின்போம். இத்தகைய போலி நண்பனின் சகவாசத்தைக் கைவிட வேண்டும். இனி அதனுடன் சேராதே என்றுதான் இரகசியமாகக் கூறியது" என்று பதறாமல் பதில் அளித்தது முன்னம் பன்றி. காட்டுப் பூனை தலைகுனிந்தது!





வீட்டுப்பாடம் செய்யலையா?

பாலகுமார் நான்காம் வகுப்பு படிக்கிறான். ஒரு நாள் வீட்டுப்பாடம் செய்யாமல் பள்ளிக்குச் சென்று விட்டான். வகுப்பில் ஆசிரியர் பெஞ்ச் மீது நிற்க வைத்து விட்டார். வீட்டிற்கு வந்து அழுதான். "இனிமேல் வீட்டுப் பாடம் செய்யாமல் பள்ளிக்குப் போகாதே" என்று சமாதானம் செய்து வைத்தோம். மறுநாள் மின்சார அலுவலகத்திலிருந்து வந்தவர் மின்சார பதிவு அட்டையை வாங்கி நாற்காலி மீது ஏறி நின்று எழுதிக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த பாலகுமார் "ஏன் மாமா, நீங்களும் வீட்டுப் பாடம் செய்யலையா?" என்று கேட்டானே பார்க்கலாம்!

தரங்கம்பாடி, எஸ். நாகராஜன்.




எங்கள் ஊரில் நடந்தது!

கரம், சிரம் நீட்டாதீர்!

அம்மாவுடன் நானும் தம்பியும் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தோம். அப்போது 'கரம், சிரம் புறம் நீட்டாதீர்' என்பதற்கு விளக்கம் கேட்டுக் கொண்டிருந்தான் தம்பி. அம்மாவும் விளக்கினார். உடனே அவன், "ஏன் டிரைவர் மட்டும் வண்டியை திருப்பும்போது கரத்தை புறம் நீட்டுகிறார்" என்று கேட்டானே பார்க்கலாம்!

தில்லை நகர், எஸ். விஜயலக்ஷ்மி.



மூட்டைப்பூச்சி இருக்கே!

கோடை விடுமுறைக்கு பாட்டி வீட்டிற்குச் சென்றிருந்தேன். கடுமையான வெயில். எனக்கு வியர்த்துக் கொட்டியது. "என்ன பாட்டி! நம்ம வீட்ல பேன்கூட இல்லையா?" என்று கேட்டேன். "ஏண்டா, பேன் இல்லைன்னு கூடவா கவலைப் படுவாங்க? அதிசயமாயிருக்கே! சரி, சரி நம்ம வீட்ல பேன் இல்லாட்டி என்ன? மூட்டைப்பூச்சிதான் அதிகமா இருக்கே" என்றார் பாட்டி. "பாட்டி நான் கேட்டது மின்விசிறியை" என்று விளக்கினேன். "ஏண்டா புரியற மாதிரி பேசக்கூடாதா?" என்று பாட்டி கேட்டதும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

குருசாமிபாளையம், கு.ச. செல்வராஜ்.





சாப்பிடுதா, இல்லையான்னு....

அம்மா சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தார். திடீரென ஞாபகம் வந்து "மாம்பழம் நறுக்கி எடுத்துட்டு வா" என்றார் என்னிடம். நான் பழத்தைக் கழுவி நறுக்க ஆரம்பித்தேன். சாப்பிட்டுக் கொண்டிருந்த தம்பி ஏதேதோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த அப்பா "ஏண்டா அவனை வேலை செய்ய விடாமல் தொணதொணன்னு பேசிட்டிருக்கே?" என்றார். அதற்கு "அப்பதானே அண்ணன் மாம்பழம் நறுக்கும்போது சாப்பிடுதா, இல்லையான்னு தெரியும்" என்றான்!


பத்தாம் வகுப்பு, த. வரதன்.
பின்லே மேல்நிலை பள்ளி.
மன்னார்குடி,

நான் திருடலே!

எங்கள் வீட்டில் கொய்யா மரம் இருந்தது. பக்கத்துத் தெருவில் வசிக்கும் சிறுவன் தினமும் கொய்யாவைத் திருடி சாப்பிட்டு வந்தான். இந்த விசயம் எங்களுக்குத் தெரிய வந்தது. ஒருநாள் அவன் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தபோது "இங்கே வாடா!" என்றேன் நான். அவன் முகத்தில் பயம் தெரிந்தது. என்னருகே வந்தவன் "நான் கொய்யாப் பழம் திருடவேயில்லை" என்றான். நான் கேட்காமலே பதில் கூறிய அச்சிறுவனைப் பார்த்து எல்லோரும் சிரித்தோம்!

வெள்ளை கிராமம், எம். ரவிக்குமார்.





கொடுப்பதைக் கொடு...

நான் தையற்கடைக்குச் சென்றிருந்தேன். அப்போது தையற்கடைக்காரரின் நண்பர் வந்தார். "போன வாரம் கொடுத்த துணிகளைத் தச்சு முடிச்சிட்டியா?" என்றார் அவர். கடைக்காரரும் துணிகளை எடுத்துக் கொடுத்தார். "எவ்வளவுப்பா தையற் கூலி?" என்றார். "நீ கொடுப்பதைக் கொடு" என்று நட்புணர்வுடன் கூறினார் கடைக்காரர். "இந்தா, இதுதான் என்னால முடியும்" என்று ஒரு ரூபாயை வைத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் சென்றார் நண்பர்! கடைக்காரரோ செய்வதறியாது திகைத்துப் போய் நின்றார்!


வரிக்கல் கிராமம், த. பழனி.

பலூன் உடையுமா?

கடையில் சாமான் வாங்கிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு சிறுவன் வேகமாக ஓடி வந்து பலூன் கேட்டான். கடைக்காரர் பலூனைக் கொடுத்து காசுக் கேட்டார். "இருங்க, ஊதிப் பார்த்துட்டு காசு தரேன்" என்றான். ஊதி முடித்து காசு தரும்போது "இந்த பலூன் உடையுமாங்க" என்று கேட்டான். உடனே கடைக்காரர் "உடையவே உடையாதுப்பா! ஐந்து வருடம் உத்திரவாதம்" என்று சிரித்துக் கொண்டே கூறினார். சிறுவனும் சிரித்த படியே ஓடிச் சென்றான்.

ராஜமன்னார்குடி, துரை. கார்த்திக்.





லைப்ரரிக்கு ஸ்பெல்லிங்...


எங்கள் வகுப்பில் ஒரு மாணவி படிப்பதற்கு மிகவும் சிரமப்படுவாள். சின்னச் சின்னப் பதிலைக்கூட சொல்லத் தயங்குவாள். ஒருநாள் திடீரென துணை இயக்குநர் வகுப்பறைக்குள் நுழைந்து விட்டார். அந்த மாணவியைப் பார்த்து லைப்ரரி என்ற வார்த்தைக்கு ஸ்பெல்லிங் கேட்டார். ஆசிரியரும், நாங்களும் செய்வதறியாது திகைத்தோம். ஆனால் அவளோ மிகச் சரியான ஸ்பெல்லிங்கைச் சொன்னாள். அதிகாரி வெரிகுட் என்று பாராட்டிச் சென்றார். நாங்கள் அனைவரும் வியப்படைந்தோம். ஆசிரியர் அந்த மாணவியை அழைத்து "எப்படி சரியாச் சொன்னே?" என்றார். "நூலக அறையில் தொங்கிக் கொண்டிருந்த பெயர்ப் பலகைக்கு புது பெயிண்ட் அடிப்பதற்காக கழட்டி நம்ம வகுப்பில் வச்சிருக்காங்க. அதோ பாருங்க டீச்சர், அதைப் பார்த்து தான் சொன்னேன்" என்றாள்.

புதுச்சேரி, டி.எஸ். கிருஷ்ணன்.

வெர்னியரைக் கண்டுபிடித்தவர்?

என் தோழி இரண்டு நாட்களாக பள்ளிக்கு வராததால் என் நோட்டைப் பார்த்து அவசர அவசரமாகப் பாடங்களை எழுதி முடித்தாள். மறுநாள் அந்தப் பாடத்திலிருந்து ஆசிரியர் கேள்விகள் கேட்டார். தோழியைப் பார்த்து "வெர்னியரைக் கண்டுபிடித்தது யார்?" என்று கேட்டார். பதிலுக்கு "பிரியா வெர்னியர்" என்று கூறினாள். பியரி என்பதை பிரியா என்று எழுதி அதையே மனப்பாடம் செய்து பதிலளித்து விட்டாள். ஆசிரியருக்கும் எங்களுக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

மன்னார்குடி, கே. சசிகலா.





முன்னால் போகலாமா?

பேருந்தில் நானும் நண்பனும் பயணம் செய்து கொண்டிருந்தோம். பின் பக்க படிக்கட்டில் கண்டக்டர் நின்று கொண்டிருந்தார். அடுத்த ஸ்டாப்பிங் வந்ததும் பஸ் நின்றது. சிலர் இறங்கினர். கண்டக்டர் 'முன்னால இறங்கியாச்சா போகலாமா?' என்று கேட்பதற்கு பதில் "முன்னால போகலாமா?" என்று கேட்டார். "முன்னால பஸ் போகாம அப்புறம் எப்படி சார் போகும்?" என்றான் நண்பன். பஸ் முழுவதும் சிரித்தது.


கன்னியாக்குறிச்சி,

கே.ஆர். பரமேஸ்வரன்.

DD2க்குப் போகலாம்!

டி.வியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். செய்தி முடிவடைந்ததும் கிரிக்கெட் நிகழ்ச்சி DD2ல் காணலாம் என்று போட்டார்கள். நாங்கள் சேனலை மாற்றாமல் உட்கார்ந்திருந்தோம். காமிராவை மூடாமல் இருந்ததால் செய்தி வாசித்தவர்கள் எழுந்து செல்வது தெரிந்தது. உடனே குட்டித்தம்பி ''எல்லோரும் DD2க்கு எழுந்து போறாங்க! வாங்க நாமும் போகலாம் என்றானே பார்க்கலாம்!

ராமாபுரம், எஸ். நளினி.





மாயப் பூக்கள், கௌதம் குமார், பக்.118 ரூ. 30/- கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை – 17.

கபாடகிரி மன்னர் பூபேந்திர மகிபாலர், கனவில் தான் காணும் தங்க மலரும் அழகுப் பெண்களும் நிறைந்த மரத்தைத் தான் காணும்படி செய்வோருக்குப் பாதி இராஜ்ஜியம் தருவதாகக் கூறுகிறார். அப்படியும் யாருமே முன் வராத நிலை தொடர, அரசர் அமைச்சரை சீற, அமைச்சரின் கடைசி மகன் சூர்ய குமாரன் முன் வருகிறான். தன் அசட்டு அண்ணன்களுடன் ஒரு கப்பலில் புறப்பட்டு, அண்ணன்களை ஒவ்வொரு திக்குக்கு அனுப்பி விட்டுத் தானும் தேடிக் கிளம்புகிறான். அண்ணன்கள் தங்கள் அசட்டுத் தனத்தால் அழிவைத் தேடிக் கொள்ள, சூர்யகுமார் தனது அறிவு, துணிவு இவற்றால் கோரமிக்க பயங்கர ரண பத்ரகாளி உபாசகனான மந்திரவாதியை பல அபாயங்களைச் சந்தித்து அழிக்கிறான். அவனால் சிறைப் பட்டுக் கிடக்கும் அரச குமாரிகளை விடுவித்து, அவர்கள் உதவியால் மன்னர் பூபேந்திர மகிபாலரைத் தங்கமலர் மரத்தைக் காண வைத்து, பிரிந்தவர் பலரை ஒன்று சேர வைத்து மகிழ்கிறான். பலி, பயங்கர யாகம், மந்திர தந்திரம் எல்லாம் வந்து, குழந்தைகளை மட்டுமல்ல பெரியவர்களையும் ஒரே மூச்சில் படித்து முடிக்க வைக்கிறது. மந்திர தந்திர பயங்கரங்களை ரசிப்பவர்களுக்கு இது வடை பாயச விருந்து. ஏற்கனவே தினமலர் சிறுவர் மலரில் தொடராக வெளிவந்து லட்சக்கணக்கான வாசகர்களால் படித்து மகிழப்பட்டது. இப்பொழுது அழகிய நூலாகியுள்ளது. ஷ்யாமின் உள்பக்க ஓவியங்களும் அட்டை வண்ண ஓவியமும் நூலுக்கு மெருகூட்டுகின்றன. தரமான தயாரிப்பு.


நீலக்கடல் மேலே... டாக்டர் பூவண்ணன், பக். 114, ரூ.24/- வானதி பதிப்பகம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் 5 குறுநாவல்களின் தொகுப்பு. தலைப்புக் கதையில் பணக்காரத் திமிர் பிடித்த மணியும், அவன் வகுப்புத் தோழன் ஏழை மாணிக்கமும் ஒரே கப்பலில் அந்தமான் போக நேர்கிறது. தன் பணத் திமிரைக் காட்ட நினைக்கும் மணியின் திட்டங்கள் தவிடுபொடியாக, மாணிக்கம் புகழ் பெற்று கேப்டனின் அன்புக்குப் பாத்திரமாகிறான்; மணியின் மனதையும் மாற்றுகிறான். 'செவ்வாய் மனிதன்' 1954 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது என்பது வியப்பாக உள்ளது. 'சோம்னாம்புலிசம்' மற்றவர்களை பயப்படுத்தி அதில் மகிழ்ச்சி காண்பவர்களுக்கு நல்ல சூடு. அருமையான தொகுப்பு. ஜெயராஜின் படங்கள் பேசுகின்றன. உயர்வான பதிப்பு.

ஈசாப் அறிவுக் கதைகள், அ. ஜெயக்குமார், பக். 69, ரூ.12/- உமா பதிப்பகம், 58. ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

எத்தனை முறை பார்த்திருந்தாலும் மீண்டும் மீண்டும் அலுப்புத் தட்டாமல் பார்க்க வைப்பது யானை. சிறுவரை மட்டுமல்ல, பெரியவர்களையும் கூடத் தான். யானையைப் போலவே பஞ்சதந்திரக் கதைகளும் ஈசாப் கதைகளும் எத்தனை முறை படித்தாலும் அலுக்காதவை. ஈசாப் கதைகளை வகைப்படுத்தி மிக அழகாகத் தந்துள்ளார் ஆசிரியர். அதிகமாகப் பிரபலமாகாத கதைகளையும் சேர்த்திருப்பது பாராட்டுக்குரியது. அட்டைப்படம் கண்ணைப் பறிக்கிறது. உயர்ந்த தாள். பெருமைபடக்கூடிய பதிப்பு. ஆனால் உள்ளே ஒரு படம்கூட இல்லையே! அடுத்த பதிப்பில் எதிர்பார்க்கலாமா?

— ரே



கதை : சு. கல்யாணி,
ஒன்பதாம் வகுப்பு,
சேவாசதன் பள்ளி,
தாம்பரம்.
படம் : சசி
மனம் மாறிய மன்னன்
மன்னன் வீரபாகுவுக்கு சுயபுத்தி கிடையாது. தீய சகவாசத்தால் நாடு சீரழிந்தது.
அரசவையில் ஒரு நாள் -
பக்கத்து நாட்டின் மீது போர் தொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்.
போர் தொடுக்க வேண்டிய அவசியமென்ன மன்னா? நம்மை விட படை பலமிக்கவர்களிடம் தேவையின்றி மோத வேண்டுமா?
அது பற்றி எனக்கு கவலையில்லை. என் நண்பர்கள் சொல்கிறார்கள். போருக்கு ஏற்பாடு செய்யுங்கள். இது மன்னனின் ஆணை.
மன்னா சொந்த புத்தி வேணும்!
அமைச்சரே அளந்து பேசுங்கள்!
மூளை மண்டையில் இருக்க வேண்டும். முழங்காலில் இருக்கக் கூடாது.



மாயப் பூக்கள், கௌதம் குமார், பக்.118 ரூ. 30/- கங்கை புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17.

கபாடகிரி மன்னர் பூபேந்திர மகிபாலர், கனவில் தான் காணும் தங்க மலரும் அழகுப் பெண்களும் நிறைந்த மரத்தைத் தான் காணும்படி செய்வோருக்குப் பாதி இராஜ்ஜியம் தருவதாகக் கூறுகிறார். அப்படியும் யாருமே முன் வராத நிலை தொடர, அரசர் அமைச்சரை சீற, அமைச்சரின் கடைசி மகன் சூர்ய குமாரன் முன் வருகிறான். தன் அசட்டு அண்ணன்களுடன் ஒரு கப்பலில் புறப்பட்டு, அண்ணன்களை ஒவ்வொரு திக்குக்கு அனுப்பி விட்டுத் தானும் தேடிக் கிளம்புகிறான். அண்ணன்கள் தங்கள் அசட்டுத் தனத்தால் அழிவைத் தேடிக் கொள்ள, சூர்யகுமார் தனது அறிவு, துணிவு இவற்றால் கோரமிக்க பயங்கர ரண பத்ரகாளி உபாசகனான மந்திரவாதியை பல அபாயங்களைச் சந்தித்து அழிக்கிறான். அவனால் சிறைப் பட்டுக் கிடக்கும் அரசகுமாரிகளை விடுவித்து, அவர்கள் உதவியால் மன்னர் பூபேந்திர மகிபாலரைத் தங்கமலர் மரத்தைக் காண வைத்து, பிரிந்தவர் பலரை ஒன்று சேர வைத்து மகிழ்கிறான். பலி, பயங்கர யாகம், மந்திர தந்திரம் எல்லாம் வந்து, குழந்தைகளை மட்டுமல்ல பெரியவர்களையும் ஒரே மூச்சில் படித்து முடிக்க வைக்கிறது. மந்திர தந்திர பயங்கரங்களை ரசிப்பவர்களுக்கு இது வடை பாயச விருந்து. ஏற்கனவே தினமலர் சிறுவர் மலரில் தொடராக வெளிவந்து லட்சக்கணக்கான வாசகர்களால் படித்து மகிழப்பட்டது. இப்பொழுது அழகிய நூலாகியுள்ளது. ஸ்யாமின் உள்பக்க ஓவியங்களும் அட்டை வண்ண ஓவியமும் நூலுக்கு மெருகூட்டுகின்றன. தரமான தயாரிப்பு.


நீலக்கடல் மேலே... டாக்டர் பூவண்ணன், பக். 114, ரூ.24/- வானதி பதிப்பகம், 13. தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் 5 குறுநாவல்களின் தொகுப்பு. தலைப்புக் கதையில் பணக்காரத் திமிர் பிடித்த மணியும், அவன் வகுப்புத் தோழன் ஏழை மாணிக்கமும் ஒரே கப்பலில் அந்தமான் போக நேர்கிறது. தன் பணத் திமிரைக் காட்ட நினைக்கும் மணியின் திட்டங்கள் தவிடுபொடியாக, மாணிக்கம் புகழ் பெற்று கேப்டனின் அன்புக்குப் பாத்திரமாகிறான்; மணியின் மனதையும் மாற்றுகிறான். 'செவ்வாய் மனிதன்' 1954 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது என்பது வியப்பாக உள்ளது. 'சோம்னாம் புலிசம்' மற்றவர்களை பயப்படுத்தி அதில் மகிழ்ச்சி காண்பவர்களுக்கு நல்ல சூடு. அருமையான தொகுப்பு. ஜெயராஜின் படங்கள் பேசுகின்றன. உயர்வான பதிப்பு.

ஈசாப் அறிவுக் கதைகள், அ. ஜெயக்குமார், பக். 69, ரூ.12/- உமா பதிப்பகம், 58. ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

எத்தனை முறை பார்த்திருந்தாலும் மீண்டும் மீண்டும் அலுப்புத் தட்டாமல் பார்க்க வைப்பது யானை. சிறுவரை மட்டுமல்ல, பெரியவர்களையும் கூடத் தான். யானையைப் போலவே பஞ்சதந்திரக் கதைகளும் ஈசாப் கதைகளும் எத்தனை முறை படித்தாலும் அலுக்காதவை. ஈசாப் கதைகளை வகைப்படுத்தி மிக அழகாகத் தந்துள்ளார் ஆசிரியர். அதிகமாகப் பிரபலமாகாத கதைகளையும் சேர்த்திருப்பது பாராட்டுக்குரியது. அட்டைப்படம் கண்ணைப் பறிக்கிறது. உயர்ந்த தாள். பெருமைபடக்கூடிய பதிப்பு. ஆனால் உள்ளே ஒரு படம்கூட இல்லையே! அடுத்த பதிப்பில் எதிர்பார்க்கலாமா?

— ரே



கதை : சு. கல்யாணி,
ஒன்பதாம் வகுப்பு,
சேவாசதன் பள்ளி,
தாம்பரம்.
படம் : சசி
மனம் மாறிய மன்னன்
மன்னன் வீரபாகுவுக்கு சுயபுத்தி கிடையாது. தீய சகவாசத்தால் நாடு சீரழிந்தது.
அரசவையில் ஒரு நாள் -
பக்கத்து நாட்டின் மீது போர் தொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்.
போர் தொடுக்க வேண்டிய அவசியமென்ன மன்னா? நம்மை விட படை பலமிக்கவர்களிடம் தேவையின்றி மோத வேண்டுமா?
அது பற்றி எனக்கு கவலையில்லை. என் நண்பர்கள் சொல்கிறார்கள். போருக்கு ஏற்பாடு செய்யுங்கள். இது மன்னனின் ஆணை.
மன்னா சொந்த புத்தி வேணும்!
அமைச்சரே அளந்து பேசுங்கள்!
மூளை மண்டையில் இருக்க வேண்டும். முழங்காலில் இருக்கக் கூடாது.


மனுசனுக்கு மூளை மண்டையில் இருக்கணும்.முழங் காலில் இருக்கக் கூடாது.
இப்ப பாருங்க கழுதை முடியே இல்லாம நிற்கிறது!
ஐயா! இதையே தான் என் அமைச்சரும் சொன்னார். இப்போது நான் உணர்ந்து கொண்டேன்.
மகிழ்ச்சி மன்னா!
என் அமைச்சரைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வருவேன். அவரின் உதவியோடு சிறப்பாக ஆளப் போகிறேன்.
அரசே! அமைச்சரை தாங்கள் எங்கும் தேட வேண்டாம்.
தேடாமல்?
இதோ, நான்தான் உங்கள் அமைச்சர்.
தங்களுக்குத் தந்த துன்பத்துக்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

கிறிஸ்துமஸ் வந்தது!

ரேவதி

கோன் ஐஸ்கிரீமின் கடைசி கூர்முனையை சுவைத்து முடித்தான் காணிக்கை ராஜ். அந்தோணியும் முடித்து விட்டிருந்தான்.

"என்னடா அன்டோ, ஐஸ்கிரீமை சாப்பிட்டு முடிந்ததும் என்னவோ சொல்றேன்னு சொன்னியே?" என்று நினைவு படுத்தினான் காணி.

"சொல்லத்தானே உன்னைத் தனியா கூட்டிக்கிட்டு வந்தேன்?" என்று தொடங்கிய அந்தோனி, "நம்ம பள்ளிக் கட்டட நிதிக்கு எங்க மாமா ஐம்பதாயிரம் ரூபாய் நன்கொடையாத் தரேன்னு சொல்றார்" என்று நிறுத்தினான்.

"வாவ்! எத்தனை பெரிய மகிழ்ச்சியான நல்ல செய்தி! இதை ஏன்டா பள்ளியிலேயே சொல்லலே? பாதர் எத்தனை சந்தோஷப்பட்டிருப்பார்!" கிளம்புடா... திரும்ப பள்ளிக்குப் போவோம். பாதர் வீடு திக்குப் போயிருக்க மாட்டார். இந்த செய்தியைக் கேட்டால் அவர் எப்படி மகிழ்ச்சியடைவார் தெரியுமா? கிளம்புடா...

துள்ளி எழுந்த நண்பனை பலவந்தமாக உட்காரவைத்தான் அந்தோனி.

"எங்க மாமா, சும்மா இந்த நன்கொடையைத் தரச் சம்மதிக்கலே, நிபந்தனையோட தான்."

"மூன்று ஆண்டுகளாக முடியாமல் நிற்கும் பள்ளிக் கட்டடத்தை முடிக்க ஓர் அருமையான வாய்ப்புக் கிடைச்சிருக்கு. என்ன நிபந்தனையானாலும் இதை நிறைவேற்ற வேண்டியது நம் கடமையல்லவா? அதோடு, உங்க மாமா என்ன, பழைய கால ராஜாக்கள் மாதிரி 'புலிப்பால் கொண்டுவா', 'நிலவைப் பிடித்து கொண்டு வா'ன்னா நிபந்தனை போடப் போறார்? நிபந்தனை என்னன்னு சொல்லு?"

"நீ மட்டும் மனம் வைத்தால் போதும். நிபந்தனையை நிறைவேற்றி விடலாம்."

"மறுபடியும் சஸ்பென்ஸா? சொல்லு அந்தோனி?"

"எங்க மாமாவுக்குக் குழந்தைகள் இல்லைங்கறது உனக்குத் தெரியுமல்லவா?"

"நல்லாத் தெரியும். அதனால்தானே உன் மேல் உயிரையே வைத்திருக்கிறார்? மேலே சொல்லு?"

"போன வருஷம் அவர் எங்க வீட்டுக்கு வந்தப்போ ஒருநாள், நீ என்னைப் பள்ளிக்கு அழைத்துப் போக சைக்கிளில் வந்தே...."

"இது வழக்கமானதுதானே?"

"உன் சட்டையில் கோல்டு ஸ்டாரைக் குத்தியிருந்தே..."

"என்னடா இது சஸ்பென்ஸ்! செக்ஷன் முதல் ரேங்கா வரவங்களுக்கு சில்வர்



ஸ்டாரும், வகுப்பு முதல் ரேங்குக்கு கோல்டு ஸ்டாரும் தரது நம்ம பள்ளி வழக்கம்தானே? சில்வர் ஸ்டார்ல செக்ஷனைப் போட்டு முதல் ரேங்க்னு போட்டிருப்பாங்க. கோல்டு ஸ்டார்ல, வகுப்பைப் போட்டு முதல் ரேங்க்னு போட்டிருப்பாங்க. இந்த ரெண்டு பேட்ஜையும் அடுத்த தேர்வு வரை பள்ளியில் குத்திக்கலாம். அடுத்த தேர்வில் ரேங்கை காப்பாத்திக்கிட்டா பேட்ஜ் நம்ம

கிட்டயே இருக்கும்; கோட்டை விட்டா உரியவன் கிட்ட போயிடும். இது தெரிஞ்சதுதானே?"

"நீ குத்திக்கிட்டிருந்த கோல்டு ஸ்டார் எங்க மாமாவை மயக்கிருச்சு காணி."

"அப்படின்னா?"

"கட்டட நிதிக்கு நன்கொடை வேணும்னு நான் மாமாவிடம் கேட்டப்போ அவர் என்ன சொன்னார் தெரியுமா? ஒரு தடவையாவது நீ கோல்டு ஸ்டார் வாங்கு. ஐம்பதாயிரம் நன்கொடை தரேன். இல்லேன்னா பைசா கூடத் தர மாட்டேன்னு சொல்லிட்டார்."

சொல்லி முடித்த அந்தோனிசாமி, காணிக்கைராஜின் முகத்தை ஆவலுடன் நோக்கினான். காணிக்கையின் முகத்தில் தீவிரமான சிந்தனை.

"என்னடா யோசிக்கிறே?"

"அந்தோனி, நான் முதல் ரேங்க் என்றால், இரண்டாவது ரேங்க் வாங்குபவன் நீதான். போட்டியே எனக்கும் உனக்கும் இடையிலேதான். அதனால், நான் விட்டுக் கொடுத்து உனக்கு கோல்டு ஸ்டார் கிடைக்கும்படி செய்வது பெரிய கஷ்டமல்ல..."

"அப்புறம் என்னடா தயக்கம்?"

"தயக்கமே இல்லை, அதிலும் இப்படி ஒரு நல்ல செயலுக்காக விட்டுக் கொடுப்பதை மகிழ்ச்சியாக நினைக்கிறேன். ஆனால் நான் விட்டுக் கொடுப்பது உறுதியாக உனக்குக் கிடைக்கணும்னா நீ இன்னும் கடுமையாகப் படிக்க வேண்டுமே?"



"கண்டிப்பாகப் படிப்பேன் காணி. உனக்கு அந்த சந்தேகமே வேண்டாம்."

"வரும் காலாண்டுத் தேர்வில் ஏழாம் வகுப்பின் கோல்டு ஸ்டார் உனக்குத்தான். மாமாவிடம் இப்பவே சொல்லிவை."


"இந்த உறுதிமொழி எனக்குப் போதும் காணி" என்று பரவசத்துடன் நண்பனின் கரங்களைப் பற்றிக் குலுக்கிய அந்தோனி சாமி, "உன்னுடைய விட்டுக் கொடுக்கும் பண்புக்கு எனது காணிக்கையாக நீ ரொம்ப நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கும் சேன்டா கிளாஸ் கிறிஸ்துமஸ் தாத்தா உடுப்பைத் தருகிறேன்" என்றான்.

"எனக்கே எனக்கா?"

"ஆமாம் காணி. இனிமே அது உனக்குத்தான். எனக்குச் சின்னதாகப் போய்விட்டது. உனக்குத்தான் சரியாக இருக்கும்."

மாமா, இன்னும் மூன்று மாதங்களுக்குப் பிறகு நன்கொடை தருவதாக உறுதியளித்ததை, தனது நீண்ட நாள் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுத்திக் கொண்ட தனது திறமையை மனதிற்குள் பாராட்டிக் கொண்டு பிரிந்தான் அந்தோனிசாமி.

தேர்வு நாள். வலது கை கட்டை விரலில் கட்டோடு வந்த காணிக்கைராஜைப் பார்த்து ஆசிரியர் பதறினார்.



"பம்பரம் ஆடப்போன இடத்தில், கட்டை விரலில் செங்கல் விழுந்திடுச்சு சார்" என்று நடித்துக் கண் கலங்கி, தேர்வில் தனது பின்னடைவை அறிவித்து வைத்தான் காணி.

"கர்த்தர் அருளால் இதோடு போச்சே! முடிஞ்சவரை எழுது" என்று ஊக்கப்படுத்தி அனுப்பினார் ஆசிரியர்.

எல்லாத் தேர்வுகளிலும் இரண்டு மூன்று கேள்விகளை விட்டு விட்டு, அந்தோனிசாமிக்கு முதல் ரேங்க் வாங்க இடமளித்தான் காணி. விடுமுறைக்குப் பிறகு பள்ளி திறந்தபோது அந்தோனிசாமியே, அவன் பிரிவில் முதல் ரேங்க் பெற்று சில்வர் ஸ்டாரும், வகுப்பிலும் முதல் ரேங்க்கைப் பிடித்து கோல்டு ஸ்டாரும் வாங்கியிருந்தான். பள்ளி அசெம்பிளியில் அறிவிப்புச் செய்த பள்ளி முதல்வர் அந்தோனியை அழைத்து, மேடையில் அறிமுகப்படுத்தி, கோல்டு ஸ்டார் பேட்ஜை அவன் சட்டையில் குத்தி விட்டார்; கை குலுக்கினார். கூடியிருந்த அனைவரும் கை தட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

தனியாக நண்பனைச் சந்தித்துக் கை குலுக்கினான் அந்தோனிசாமி.

"இன்னும் மூன்று மாதங்கள் வரை, கோல்டு ஸ்டார் உன்னிடம்தான் இருக்கும். மாமாவிடம் காட்டி நன்கொடை சீக்கிரம் கிடைக்க வழி பண்ணு" என்று நினைவு படுத்தினான் காணி.

"அடுத்த வேலை அதுதான்!" என்றான் அந்தோனிசாமி.

குழந்தைகள் தினம் முடிந்து கிறிஸ்துமஸ் நெருங்கிக் கொண்டிருந்தது.

"நன்கொடையை சொன்னபடி வாங்கிக் கொடுத்து விட்டாய். கிறிஸ்துமஸ் தாத்தா உடை கிடைக்குமா?" என்று ஆவலாகக் காணி கேட்டான்.

"கண்டிப்பாகக் கிடைக்கும் காணி. அதில் கொஞ்சம் எண்ணெய்க் கறை பட்டிருக்கு. ஸ்பெஷல் வாஷுக்குத் தந்திருக்கிறேன். இன்னும் பத்து நாள்ல கண்டிப்பாகக் கிடைத்துவிடும்" என்றான் அந்தோனி.


காணி நம்பிக்கையுடன் திரும்பினான். காணிக்கைராஜிடம் உறுதி வாங்கிக் கொள்ளும்போது, கிறிஸ்துமஸ் தாத்தா

உடையை அவனுக்குத் தருவதாகத்தான் இருந்தான் அந்தோனிசாமி. ஆனால், கோல்டு ஸ்டார் கிடைத்த பிறகு, அவனுக்குக் கிடைத்த பாராட்டும், அன்பும், கௌரவமும், 'ஆச்சு இவைகளையெல்லாம் அரையாண்டுத் தேர்வு முடிந்து ரிசல்ட் வந்ததும் இழக்கப் போகிறோம். இவைகளைக் காணிக்கைராஜ் தொடர்ந்து அனுபவிக்கப் போகிறான்' என்ற நினைப்பு, அந்தோணியின் மனதை மாற்றிவிட்டது. உண்மையில் இந்தப் பெருமைக்கு உரியவன் காணிக்கைதான். பள்ளிக்கு நன்கொடை கிடைக்க வேண்டும் என்ற நல்ல உணர்வில் அவன் செய்த தியாகம்தான் இதற்கெல்லாம் காரணம் என்ற நினைப்பு மறந்து விட்டது. இந்த மனநிலையில், எதற்காக சின்னதாகிப் போன தன்னுடைய கிறிஸ்துமஸ் தாத்தா உடையை அவனுக்குக் கொடுப்பது என்றும் அவன் எண்ணினான். ஏதாவது காரணத்தைச் சொல்லி கடைசிவரை இழுத்தடித்து தராமலேயே ஏமாற்றிவிட வேண்டும் என்று அவன் முடிவு செய்து கொண்டான்.

கிறிஸ்துமஸ் வாரம் தொடங்க இன்னும் ஒரு நாள்தான் இருந்தது. "லாண்டிரிக்காரன் ஏமாற்றிவிட்டான்" என்று கையை விரித்தான் அந்தோனிசாமி.

அடுத்த நாளில் இருந்து தொடர்ந்து மாலையில் கிறிஸ்துமஸ் வருகைப் பாடல்களை இசைக் கருவிகளுடன் பாடி வர இருந்தார்கள். அந்தோனிசாமி அருமையாகக் கிடார் வாசிப்பான். காணிக்கை ராஜ் கிளி, கோழி, மாடு, பூனை, குருவி மாதிரிக் கத்தி நன்றாக மிமிக்கிரி செய்வான். கிறிஸ்துமஸ் தாத்தா வேடம் போட்டுப் பாடி ஆடிக் கொண்டு வந்தால் இன்னும் சிறப்பாக இருக்குமே என்றுதான் அவன் கேட்டிருந்தான். கடைசியில் வேண்டுமென்றே அந்தோனிசாமி ஏமாற்றிவிட்டான்.

அன்று காலை அந்தோனிசாமி மாடிப் படியில இறங்கும்போது தவறி விழுந்து கால் வீங்கி விட்டது. இடது காலை மடக்கக் கூடாது; நீட்டியே இரண்டு நாட்களாவது வைத்திருக்க வேண்டும் என்று டாக்டர் கூறிவிட்டார். நண்பனை ஏமாற்றிவிட்டதற்காகத்தான் ஆண்டவன் தண்டித்து விட்டானோ என்று கலங்கினான்.



மற்றொரு சாய்ந்த கோபுரம்!

'சாய்ந்த கோபுரம் எங்குள்ளது?' என்று கேட்டால் 'பைசா நகரில்' என்றுதானே பதில் கூறு வீர்கள். ஆனால் இங்கிலாந்தில் உள்ள 'பிரிஸ்டல்' நகரிலும் ஒரு சாய்ந்த (மாதா கோயில்) கோபுரம் உள்ளது. 133 அடி உயரமுள்ள இந்த சர்ச் இப்போது செங்குத்து நிலையிலிருந்து 5 அடி சாய்ந்துள்ளது. இந்த சர்ச்சின் அடியில், அஸ்திவாரத்தில் கம்பளியும், சாக்குப் பைகளும் மட்டுமே போட்டு அதன் மீது எழுப்பப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் 1940 ம் ஆண்டு நவம்பர் 24ல் நாஜிப் படை விமானங்கள் இந்த நகரில் குண்டுகளை வீசி, பலத்த நாசம் விளைவித்தன. ஆனால் இந்த சர்ச் சாய்ந்ததே ஒழிய அழியவில்லை. இன்னும் சாய்ந்த நிலையிலேயே இருக்கிறது. இது பைசா கோபுரம் போல புகழ் பெற்றுக் கொண்டே வருகிறது. விரைவில் உலக அதிசயமாகக் கூட அறிவிக்கப்படலாம்.

— 'விந்தை விநோதங்கள்' நூலிலிருந்து

தகவல் : இ. முகமது ஹாரூன் பாஷா, வத்தலக்குண்டு.

அன்று மாலை, வாசலில் சலங்கை சத்தம் கேட்டது. படுத்தபடி கண்ணைத் திறந்து நோக்கினான் அந்தோனி. விதவிதமாக உடையணிந்து நண்பர்கள், இசைக் கருவிகளுடன் இரட்டை மாட்டு டிரக்கில் வந்து இறங்கினார்கள். அந்தோனியை அழைத்துப் போகத்தான் வந்திருந்தார்கள்.

"என்ன ஆச்சு அந்தோனி?" என்று கேட்டபடி கிறிஸ்துமஸ் தாத்தா வேடமணிந்திருந்த காணிக்கை உள்ளே வந்தான்.

"காணிக்கையா! ஏது கிறிஸ்மஸ் தாத்தா உடை?" என்று வியந்தான் அந்தோனி.

"நம்ம பிரின்ஸ்பால்தான் தந்தார். வண்டியோட்டியாக வேடம் போட்டு வந்திருப்பவர் அவர்தான்" என்றான் காணிக்கை.

"என்ன ஆச்சு அந்தோனி? விழுந்து விட்டாயாமே?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் வண்டியோட்டி உடையில் இருந்த பிரின்ஸ்பால்.

அந்தோனி விளக்கினான்.

"இடது காலைத்தானே மடக்கக் கூடாது என்று டாக்டர் கூறியிருக்கிறார்? டிரக்கில் படுக்கை தலையணி போட்டு உன்னை அப்படியே அலுங்காமல் தூக்கி வைக்கிறோம். சாய்ந்து படுத்தபடி கிடார் வாசித்துக் கொண்டு வா." உன் கிடார் இல்லாமல் கிறிஸ்துமஸ் பாடலா?" என்றான் காணிக்கை.

இப்படிப்பட்ட நண்பனுக்கா நம்பிக்கை துரோகம் பண்ணினோம் என்று கண் கலங்கினான் அந்தோனி. காணிக்கை ராஜ் படுக்கை தலையணி வைக்கப் போய் விட்டான்.


"அந்தோனி, காணிக்கைக்கு சான்டோ கிளாஸ் உடை பொருத்தமாக இருக்கு இல்லே?" என்று கேட்டார் பிரின்ஸ்பால்.

"ரொம்பப் பொருத்தமா இருக்கு" - உண்மையைச் சொன்னான் அந்தோனி சாமி.

"ஐம்பதாயிரம் நன்கொடை கிடைக்கக் காரணமா இருந்தவன் இல்லையா?"

அந்தோனி திகைப்புடன் பிரின்ஸ்பாலைப் பார்த்தான்.

"எப்படி எனக்குத் தெரிந்தது என்று பார்க்கிறாயா? வெறும் கையில் கட்டுப் போட்டுக் கொண்டு தேர்வு எழுதியதை தற்செயலாகக் கண்டு பிடித்தேன். உண்மை புரிந்தது. தகுதி இல்லாத உனக்குத் தகுதி கிடைக்க அவன் தன் திறமையை வேண்டுமென்றே குறைத்துக் காட்டி உன்னை உயர வைத்தான். எல்லாம் பள்ளியின் நன்மைக்காக! கடைசியில் வீட்டிலேயே வைத்துக் கொண்டு, லாண்டிரிக்காரன் மேல் பழி போட்டு ஏமாற்றிவிட்டாய். அது கூட அவனுக்குத் தெரியுமோ தெரியாதோ" என்றார் பிரின்ஸ்பால்.



"பையன் ஏன் அழறான்?"
"சிமெண்ட்ல புத்து கட்டித் தரணுமாம்!"
— கே. சோமசேகர்

"எனக்கும் இரண்டு நாள் முன்புதான் தெரிந்தது. லாண்டிரிக்காரன் குட்டை உடைத்து விட்டான். சரி, தருவதற்கு விருப்பமில்லை என்று தெரிந்து கொண்டேன்" என்று கூறிக் கொண்டே வந்தான் காணிக்கை.

"நான் ஏமாற்றிவிட்டதை அறிந்த பிறகுமா, என்னை விடாப்பிடியாக கிடார் வாசிக்க அழைத்துப் போக முன் வந்தே! உனக்குத்தான் எத்தனை பெரிய மனசு காணிக்கை?" என்று விம்மினான் அந்தோனி.

"ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டுன்னு கிறிஸ்து பெருமான் சொன்னதுக்கு உண்மையான பொருள் என்ன என்பதை காணிக்கை நடத்திக் காட்டி விட்டான்" என்றார் பிரின்ஸ்பால்.

இரட்டை மாட்டு டிரக் வண்டியில் வலம் வந்த கிறிஸ்துமஸ் வருகைப் பாடல் குழுவில் காணிக்கைராஜின் கிறிஸ்துமஸ் தாத்தா பாட்டும், அந்தோனிசாமியின் கிடார் வாசிப்பும் தனிச்சிறப்புடன் இருந்தன.



பிருந்தாவனக் கதையரங்கம்

புரிந்தது!



அன்று விடுமுறை. கண்ணனுக்குப் பிடித்த பூரியும் உருளைக்கிழங்கும் வைத்திருந்தார் அம்மா. ஆசையோடு சாப்பிட ஆரம்பித்தான் கண்ணன். அப்போது, “அம்மா, தாயே! பிச்சைப் போடுங்க!” என்ற குரல் கேட்டது. உடனே அம்மா இரண்டு பூரியையும் உருளைக் கிழங்கையும் எடுத்துச் சென்று போட்டு விட்டு வந்தார்.

அந்தக் காட்சியைக் கண்டதும் கண்ணனுக்கு கோபம் வந்தது.

“அம்மா! நீங்க செய்யறது உங்களுக்கே நல்லாயிருக்கா? போன வாரம் ஸ்கூலுக்கு கொண்டு போன இட்லியைச் சாப்பிடாமல் சாக்கடையில் கொட்டினேன். நீங்க கோபம் வந்து திட்டினீங்க.” சற்று நிறுத்தினான் கண்ணன்.

“ஆமாம். அதுக்கென்ன இப்ப?” - அம்மா.

“ஆனா இன்னிக்கு நீங்க மட்டும் பூரியைக் கொண்டு போய் பிச்சைக்காரனுக்குப் போடலாமா?” என்று கோபமாகக் கேட்டான் கண்ணன்.

“நீ செய்ததுக்கும், நான் செய்ததுக்கும் நிறைய வித்தியாசமிருக்கு. நீ யாருக்கும் பயன்படாமல் கீழே கொட்டினே! நானோ பசியால் வாடும் வயதான பிச்சைக்காரனுக்கு சாப்பாடு போட்டேன்” என்று விளக்கமளித்தார் அம்மா.

கண்ணனால் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அமைதியாகப் போய்ச் சாப்பிட்டான். சிறிது நேரம் தூங்கி எழுந்தான்.

பொழுது போகாமல் தோட்டத்துக்கு வந்தான் கண்ணன். சமையலறையிலிருந்து பயன்படுத்திய தண்ணீர் வீணாகக் கொட்டிக் கொண்டிருந்தது. பார்த்துக் கொண்டிருந்தவன் திடீரென்று மண்வெட்டியை எடுத்து மண்ணை வெட்டி, தென்னை மரத்துக்கு தண்ணீர் போக வழி செய்தான்.

அங்கு வந்த அம்மா, “கண்ணா என்ன செய்யறே?” என்றார்.

“நீங்க பாத்திரம் கழுவின

தண்ணீரெல்லாம் வீணாப் போகுது. தென்னை மரத்துக்குத் திருப்பி விட்டேன்" - கண்ணன்.

அம்மா அர்த்தமுடன் சிரித்தபடி சென்று விட்டார்.

அப்போதுதான் காலையில் அம்மா சொன்ன விளக்கத்தின் அர்த்தம் புரிந்தது கண்ணனுக்கு.

— சா. சந்தானலட்சுமி,
பதினோராம் வகுப்பு,
திருவண்ணாமலை.



அண்டப் புளுகன் அய்யாசாமி என்பதன் சுருக்கமே அ.பு. அய்யாசாமி. இவருக்கு இந்தப் பெயர் வைத்தது சரிதானா என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்!

ஒரு முறை அய்யாசாமி திருப்பதிக்கு நண்பர்களுடன் சென்று கொண்டிருந்தார். பஸ் வேலூர் கோட்டை வழியாகச் சென்று கொண்டிருந்தது.

அய்யாசாமி வழக்கம் போல் புளுகை அவிழ்த்து விட ஆரம்பித்தார். "வேலூர் கோட்டைக்கு செங்கல் எடுத்துக் கொடுத்ததே எங்க தாத்தாதான்" என்றார்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த நண்பர், "அய்யாசாமி இது கருங்கல் கோட்டை. இதுல எங்கே செங்கல் இருக்குது?'' என்றார்.

உடனே அய்யாசாமி ''எனக்குத் தெரியாதா? இந்தக் கோட்டையை முதல்ல செங்கல்லில்தான் கட்டினாங்க. செங்கல் கோட்டை நீண்ட நாளைக்கு உழைக்காது என்பதால் இடிச்சிட்டு அப்புறம் கருங்கல்லில் கட்டினார்கள். எங்க அப்பாதான் இந்தக் கோட்டைக்கு கருங்கல் எடுத்துக் கொடுத்தார்" என்றாரே பார்க்கலாம்!

— மு. பூபாலன்,
மூஞ்சூர்பட்டு.



இரண்டு நாட்களாக பாரியைக் காணவில்லை. பாரியின் நண்பன் பிரபு, பாரியின் அம்மா, அப்பாவைத் தேற்றிக் கொண்டிருந்தான்.

அப்போது வீட்டு வாசலில் ஒரு கடிதம் விழுந்திருந்தது. பிரபு வேகமாக ஓடிப் போய் எடுத்தான்.

''மாமா! இது பாரியோட கையெழுத்துதான். அவன் கிட்டயிருந்துதான் கடிதம் வந்திருக்கு" என்றான்.

"சீக்கிரம் நீயே பிரிச்சு படி" என்றார் பாரியின் அப்பா.

~~இ~~ அப்பாவுக்கு ~~உ~~ பாரி எழுதுவது. நீங்கள் ஒரு லட்சம் ~~அ~~ ரூபாய் கொடுத்தால் ~~ஆ~~ விட்டு விடுவதாகக் ~~ஐ~~ கூறுகிறார்கள். உடனே ஏற்பாடு ~~ஏ~~ செய்து என்னைக் காப்பாற்றுங்கள். ~~அ~~

''ஐயோ! எவ்வளவு தூரம் பயந்து போயிருந்தால் இப்படி அடிச்சு அடிச்சு எழுதியிருப்பான்'' என்று அழ ஆரம்பித்தார் பாரியின் அம்மா.

"மாமா இது பயத்துல அடிச்சு எழுதி யது இல்லை. பாரி எண்களுக்கு பதில் எழுத்தைப் போட்டு ஏதாவது விளை யாடிக் கொண்டேயிருப்பான். அவனோட டைரியை எடுத்திங்கன்னா உதவியா இருக்கும்" என்றான் பிரபு.

வேகமாக டைரியைக் கொண்டு வந்தார் பாரியின் அப்பா.

இ–3, உ–5, அ–1, ஆ–2, ஐ–9, எ– 7, ஈ–4
3512974.

"மாமா நான் கண்டுபிடிச்சுட்டேன். இது பாரி கடத்தப்பட்டிருக்கும் இடத்தின் போன் நம்பர்" என்றான் பிரபு.

தொலைபேசியின் நம்பரை வைத்து சுலபமாக முகவரியைக் கண்டுபிடித்தனர் காவலர்கள். அடுத்த அரைமணி நேரத்தில் பாரி மீட்கப்பட்டான்.

அனைவரும் பிரபுவைப் பாராட்டினர்.

"நீங்க எல்லோரும் பாரியைத்தான் பாராட்டணும். அவன்தான் புத்தி சாலித்தனமா எண்ணுக்கு பதில் எழுத் தைப் பயன்படுத்தி தன்னையே காப் பாத்திக்கிட்டான்" என்றான் பிரபு.

— சா. செல்வராஜ்,
குருசாமிபாளையம்,
நாமக்கல் மாவட்டம்.



வீரனுக்கு தன் பெயருக்கேற்றார் போல் வீரச் செயல் புரிய வேண்டுமென்ற ஆசையிருந்தது. இதற்காக எப்போதும் சுற்றுப்புறத்தை நோட்டமிட்டவாறே அலைந்து திரிந்து கொண்டிருந்தான்.

"என்ன! நான் வீரச் செயல் புரிந்து பதக்கம் வாங்கறதுக்கு வாய்ப்பே கிடைக்க மாட்டேங்கிறதே" என்று வருத்தத்துடன் கோயிலில் உட்கார்ந்திருந்தான்.

லேசாக இருட்ட ஆரம்பித்தது. அப்போது ஒரு சிறுவன் பதுங்கி, பதுங்கி சுற்றும் முற்றும் நோட்டமிட்டபடி வந்து கொண்டிருந்தான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த வீரனுக்கு சந்தோஷத்தை அடக்க முடியவில்லை. இந்தப் பையனோட கையில ஏதோ துணி சுற்றப்பட்ட பொருள் வேற இருக்குதே! ஏதாவது கடத்தல் விவகாரமாகத்தான் இருக்கும். இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி என்னுடைய திறமையை நான் காட்டப் போகிறேன் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் வீரன்.

வேகமாகச் செயல்பட்டான். அருகிலிருந்த காவல் நிலையத்திற்குச் சென்று விஷயத்தைக் கூறி கோயிலுக்கு அழைத்து வந்தான்.

அந்தச் சிறுவன் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

"சார் இவன்தான். நான் சொன்ன கடத்தல்கார பையன். பிடியுங்க" என்று பரபரத்தான் வீரன்.

காவலர் "டேய் என்ன செய்யறே? கையில என்ன வச்சிருக்கிறே?" என்று மிரட்டினார்.


பயந்த சிறுவன் "சார் நான் பக்கத்து ஊரிலிருக்கிறேன். என் பாட்டிக்கும், தாத்தாவுக்கும் இரண்டு நாட்களாக சண்டை. கோபத்தில் தாத்தா சாப் பிடாமல் கோயிலுக்கு வந்து விட்டார். பாட்டிக்குத் தெரியாமல் தூக்குச் சட்டியில் சாப்பாட்டை எடுத்துக் கிட்டு துணியால் மறைத்துக் கொண்டு வந்தேன்" என்றான்.

காவலர்களுக்கோ வீரன் மீது கடுமையான கோபம் ஏற்பட்டது. திரும்பிப் பார்த்தார் காவலர். வீரன் அங்கு இல்லை. வெகு தூரத்தில் ஓடிக் கொண்டிருந்தான்.

— த. தினேஷ்,
கீழப்பெரம்பலூர்,
பெரம்பலூர் மாவட்டம்.

பச்சைக்கல் அட்டிகை

கதை : ஜானகி முத்துக்குமார்   படம் : லலிதா




கடையில் -
ஐயா! இந்தக் கயிறு எவ்வளவு ரூபாய்?
எட்டு ரூபாய்!
கடனாத் தந்தீங்கன்னா நாளைக்கு காசு தந்திடறேன்.
வேலை எதுவும் செய்யாமல் காசு எப்படித் தருவே?
என்னை நம்புங்க. எட்டு ரூபாய்க்கு, பத்து ரூபாயாகத் திருப்பித் தந்திடறேன்.
நாளைக்கு காசு தரலே, உன்னை சும்மா விட மாட்டேன்.
கயிறுடன் திரும்பினான்.
கிணற்றடியில் -
நல்ல வேளை! அட்டிகையை யாரும் எடுக்கலே! கயித்தைக் கட்டி இறங்கிட வேண்டியதுதான்!


இறங்கும் போது -
ஐயோ! சுவத்துல மோதி கை, கால் தலையெல்லாம் வலிக்குதே!
இறங்கிக் கொண்டே -
காயம் ஏற்பட்டா என்ன? அட்டிகையை வித்து வைத்தியம் பாா்த்துக்கலாம்.
அப்போது 'டர்' என்ற சத்தத்துடன் சட்டை கிழிந்தது.
இந்தச் சட்டையை கழட்டி வீசிட்டு நல்ல பாலியஸ்டர் சட்டை வாங்கணும்!
தண்ணீரில் இறங்கினான்.
ஐயோ! தண்ணீர் பட்டவுடன் காயமெல்லாம் எரியுதே!


பச்சைக்கல் அட்டிகையை நோக்கி கையை நீட்டினான்.
என்னது! அட்டிகை தள்ளிப் போகுது!
அதிசயமா யிருக்கே! அட்டிகை, கயிறு மேல தானா ஏறுதே!
பச்சைக் கண்கள் மின்ன பூனை மியாவ் என்ற சத்தத்துடன் மேலேறியது.
ஐயோ! மோசம் போனேனே. பூனை யோட கண்களை பச்சைக்கல் அட்டிகைன்னு நினைச்சு ஏமாந்துட்டேனே!
உடம்பெல்லாம் காயம். இருந்த ஒரே சட்டையும் போச்சே!

◆ பிருந்தாவனக் கவியரங்கம், கதையரங்கம் அருமை.

மூ.தா. பிரபாகரன்,
சென்னை.

◆ போட்டிகள் எனக்கு மிகவும் பிடிக்கின்றன. கோகுலம் வாங்கினால் யார் முதலில் படிப்பது என்று சண்டை போட்டுக் கொள்வது எங்கள் வீட்டு வழக்கமாகி விட்டது.

பிந்து சாரதி, ஒன்பதாம் வகுப்பு,
யுகேஸ் சாரதி, மூன்றாம் வகுப்பு,
வியாசர்பாடி.

◆ சாதனை படைத்த கங்குலியைப் பற்றி கட்டுரை வெளியிட்டதற்கு பாராட்டுகள். இது போன்று விளையாட்டுச் செய்திகளை தொடர்ந்து எதிர்பார்க்கலாமா?

ப. மீனலோசனி,
தேரிருவேலி, இராமநாதபுரம் மாவட்டம்.

◆ குறுக்கெழுத்துப் புதிரை தொடர்ந்து வெளியிடுங்கள். சுவாரஸ்யமாக உள்ளது.

கே. ஜோசப், எட்டாம் வகுப்பு,
நெய்வேலி.

◆ 'விடை தெரியாது விழித்தவர்' கட்டுரை நேருவை பற்றி புதிய செய்தியைக் கொடுத்தது.

எம். கதீஜா,
பொன்னேரி.

◆ ஒரே வித முட்டையிலிருந்து தோன்றும் தேனீக்களில் ராணி என்றும் வேலைக்காரி என்றும் பாகுபாடு இருப்பது வியப்பைத் தந்தது! பட்டப் படிப்பு முடித்த பின்னும் கூட மணியார்டர் பார்ம் கூட நிரப்பத் தெரியாத இளைஞர்களுக்கு நல்ல பாடமாக இருந்தது 'இவ்வளவுதானா!' சிறு கதை.

கே. சுதர்சன்,
பாக்கியநாதன்
விளை, தூத்துக்குடி
மாவட்டம்.

◆ அழகியின் 'மன்னிச்சிடு கருப்பா' கதை அருமை. பகைவனுக்கும் அருள வேண்டும் என்ற கருத்தை அழகாக விளக்கியது.

என். அஞ்சுகம், பாலப்பட்டி,
நாமக்கல் மாவட்டம்.

◆ உங்களின் தீபாவளி வாழ்த்தும், தீபாவளி சிறப்பிதழும் எங்களுக்கு உற்சாகத்தை ஊட்டியது.

ப. ராமகிருஷ்ணன், காயக்காடு,
புதுக்கோட்டை மாவட்டம்.

◆ தீபாவளி சிரிப்புகளைப் படித்து வாய்விட்டுச் சிரித்தோம்.

சக்தி. சரவணன், மோகனூர்,
நாமக்கல் மாவட்டம்.

◆ தீபாவளியை பாதுகாப்பாகக் கொண்டாட, கொடுத்துள்ள குறிப்புகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன.

ஆர். ராஜாராம், பத்தாம் வகுப்பு,



எஸ்.கே.டி.ஜே. மேல் நிலைப் பள்ளி,
திருவேற்காடு, சென்னை.

◆ எப்படி? எதற்கு? ஏன்? என்ற அறிவியல் துணுக்கு பகுதி படத்துடன் நன்றாக இருந்தது. காகித டம்ளரை செய்து பார்த்தேன். என் நண்பர்களுக்கும் கற்றுத் தந்தேன்.

ந. தெய்வசிகாமணி, எட்டாம் வகுப்பு,
சிங்கம்புணரி,
சிவகங்கை மாவட்டம்.

◆ கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்பதை கனகவல்லிக்கு மட்டுமல்ல எங்களுக்கும் எடுத்துக் காட்டியது 'தவளையும் தங்கப் பந்தும்' படக்கதை.

லோகேஸ்வரி, ஆறாம் வகுப்பு,
செய்யாறு.

ஒன்பதாம் வீடு!

4. அத்தையின் பரிசு!

வெ. நல்லதம்பி



வரவேற்புப் பலகை ஓவியத்தை வரைந்தவர் கண்டிப்பாக யாரோ ஓர் ஓவிய ஆசிரியையாகத் தான் இருக்க வேண்டும் என்று அமைச்சர் எண்ணினார். அந்த அளவுக்கு அது பேசும் அழகு ஓவியமாக; முதிர்ச்சி பெற்ற ஓர் ஓவியரின் கைவண்ணமாக மிளிர்ந்தது.

அமைச்சருக்கு என்ன பதில் கூறுவது என்று தோன்றாமல் கோமதி மேடம் சற்றுத் திணறினார். முந்தைய தினத்தன்று மாலை, சித்ராவின் தந்தை பசுபதி கூறியதெல்லாம் அவரது நினைவுக்கு வந்தது. அதோடு தான் அவருக்கு அளித்த உறுதிமொழியையும் அவர் நினைத்துப் பார்த்தார்.

யாருடைய சிபாரிசும் இல்லாமல் அமைச்சரிடம் அறிமுகமாகிக் கொள்வது என்பது எத்தகைய அரிய வாய்ப்பு! வேறு யாராகவாவது இருந்தால், இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அமைச்சருடன் தொடர்பு கொள்ள இதையே வாய்ப்பாக்கிக் கொண்டு, சித்ராவின் வருங்காலம் சிறப்பாக அமைய இதையே ஓர் பொன்னான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ளத் துடிப்பார்கள்.

ஆனால், பசுபதி அப்படிப்பட்டவர் இல்லையே?

பசுபதியும் அவர் அருகே சித்ராவும் பார்வையாளர்களிடையே நடுவரிசையில் உட்கார்ந்திருப்பதைப் பெரிய மேடம் கோமதி கவனித்து விட்டார்.

இதற்குள் விழா ஆரம்பமாகி விட்டதற்கு அறிகுறியாக தமிழ்த்தாய் வாழ்த்து தொடங்கியது. அமைச்சர் உள்பட எல்லோரும் எழுந்து நின்று, பாட்டு முடிந்ததும் உட்கார்ந்து கொண்டனர்.

நிகழ்ச்சிகள் தொடங்கின.

"ஏன் மேடம்... அந்த வரவேற்புப் பலகை ஓவியத்தை வரைந்த ஓவிய ஆசிரியையை வரச் சொன்னீர்களா?" என்று இரண்டாவது முறையாக நிகழ்ச்சிகளுக்கு நடுவே கேட்டார் அமைச்சர்.

"அது மிகவும் சாதாரணமான ஓவியம்தானே சார்?

அதைப் போய் இத்தனை பெரிதாகப் பெருமைப்படுத்துகிறீர்களே!'' என்று மழுப்பிச் சிரித்தார் பெரிய மேடம்.

''அப்படிச் சொல்லாதீங்க மேடம். லைன் டிராயிங் மிகவும் கஷ்டமான முறை. கோடுகளைக் கொண்டு படம் வரைந்து அதில் உணர்ச்சிகளை வெளியிடுவது என்பது எத்தனை கடினமானது. தெரியுமா? அதை மிக இயற்கையாகச் செய்திருக்கிறார்கள்,'' என்றார் அமைச்சர்.

''அந்த வரவேற்பு ஓவியத்தில் இத்தனை



சிறப்புகள் இருப்பதை நீங்கள் கூறிய பிறகே உணரமுடிகிறது'' என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தார் பெரிய மேடம்.

அதோடு விஷயம் முடிந்து விடும் என்று நம்பினார் பெரிய மேடம். ஆனால், அமைச்சர் விடுவதாக இல்லை.

''மேடம், நான் அமைச்சராகுமுன் பள்ளி ஒன்றில் ஓவிய ஆசிரியராக இருந்தவன். அதனால் எனக்கு இதன் அருமை தெரியும். அந்த ஓவிய ஆசிரியையைக் கூப்பிடுங்கள்'' என்று மறுபடி தொடர்ந்தார் அமைச்சர்.

அவரிடமிருந்து தப்ப முடியாது என்பது உறுதியாகத் தெரிந்து விட்ட பிறகு வேறு வழி இல்லாமல் பங்கஜம் டீச்சரை அழைத்தார் பெரிய மேடம். இருவரும் பேசினர்.

''ஐயா, அந்த ஓவியத்தை வரைந்தது நீங்கள் எண்ணியிருப்பது போல ஓர் ஆசிரியை அல்ல. எட்டாவது படிக்கும் ஓர் மாணவி. பொழுது போகாமல் ஏதாவது வரைந்து கொண்டிருப்பாள். அவ்வளவுதான்'' என்று சிரித்தார் பங்கஜம் டீச்சர்.

''அப்படியா! பயிற்சி பெறாத ஓர் மாணவி. இத்தனை அழகாக ஓவியம் வரைகிறார் என்றால் அது மிகப் பெரிய ஆச்சரியம். அந்த மாணவியை நான் கண்டிப்பாகப் பார்த்துப் பாராட்ட வேண்டும். எங்கெல்லாமோ, ஊக்கி விடுவார் இன்றி பிறவிக் கலைஞர்கள் ஒளிந்து கிடக்கிறார்கள்'' என்று முடித்தார் அமைச்சர்.

''அந்த மாணவி வந்திருக்கிறாளா என்று பார்க்கிறேன்'' என்று நழுவினார் பங்கஜம் டீச்சர். கைகளால் சைகை காட்டி பசுபதியை மட்டும் தனியே வரும்படி அழைத்தார்.

பசுபதி வந்ததும், விழா மேடைக்குப் பின்னால் அழைத்துக் கொண்டு போனார் பங்கஜம் டீச்சர்.

"என்ன மேடம்?" என்று ஆவலோடு கேட்டார் பசுபதி.

"மிஸ்டர் பசுபதி, நான் கூறுவதைக் கேட்டால் வேறு பெற்றோர்களாக இருந்தால் உச்சிகுளிர்ந்து போவார்கள். நீங்கள் தான் அப்படி இல்லையே! அதனால் கண்டிப்பாகக் கோபம்தான் வரும்."

பசுபதி ஒன்றும் புரியாமல் குழம்பிப் போய் பங்கஜம் டீச்சரைப் பார்த்தார்.

வரவேற்புப் பலகை ஓவியத்தைப் பார்த்து அமைச்சாவர்கள் சொக்கிப்



விட்டார்கள். அதை வரைந்த ...வியை அழைத்து வாருங்கள். நான் ...ட்ட வேண்டும் என்று பிடிவாதமாக ...முக்கிறார்!"

...சுபதி தன் உள்ளத்தில் ஊற்றெடுத்த ...ழ்ச்சியையும் பெருமையையும் மிகவும் ...டப்பட்டு புதைத்துக் கொண்டு, முகத் ...க் காய்ந்த களிமண்ணைப் போல் ...முக்கி வைத்துக் கொண்டு, பங்கஜம் ...சரை ஏறிட்டுப் பார்த்தார்.

"சார், சத்தியமாகக் கூறுகிறோம். ...னோ இல்லை பெரிய மேடமோ, ...ல்லை மற்ற ஆசிரியர்களோ யாரும் ...த்ராவைப் பற்றிக் கூறவே இல்லை. இன்னும் கேட்டால், அவராகவே அதைப் பார்த்து மயங்கிப் போய்க் கேட்டார். அவரது பேச்சை மாற்ற நானும் பெரிய மேடமும் எத்தனையோ முயற்சி பண்ணினோம். தோல்வி எங்களுக்குத்தான்."

பசுபதி இன்னமும் களிமண் முகத்தோடேயே இருந்தார்.

"மிஸ்டர் பசுபதி, இப்பக் கூட ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. சித்ராவை அமைச்சர் பாராட்ட விரும்புகிறார் என் பதை நாங்கள் இன்னும் ஒலிபெருக்கியில் அறிவிக்கவில்லை. நீங்கள் சித்ராவை அழைத்துக் கொண்டு இந்த விழா மைதானத்தை விட்டுப் போய் விடுங்கள். உங்கள் வீட்டுக்குப் போக வேண்டாம். வேறு எங்கேயாவது போங்கள். நீங்கள் போய் சிறிது நேரம் ஆன பிறகு நாங்கள் ஒலிபெருக்கியில் அறிவிக்கிறோம். நீங்கள் இருவரும் போய் விட்டதாக எல்லோரும் கூறுவார்கள். வீட்டுக்கு ஆள் அனுப்புவதாகக் கூறுகிறோம். வீட்டிலும் நீங்கள் இருக்க மாட்டீர்கள். ஒரு நாள் அமைச்சர் வீட்டுக்கே சித்ராவையும் அவள் அப்பாவோடு அனுப்பி வைப்பதாகக கூறி சமாளித்து அமைச்சரை அனுப்பி விடுகிறோம். பிறகு என்ன? ஆறின கஞ்சி பழம் கஞ்சிதானே?" - பங்கஜம் டீச்சர் வறண்ட குரலில் தன் யோசனையைக் கூறிவிட்டு, பசுபதியின் முகத்தை ஆவலுடன் நோக்கினார்.

பசுபதி உடனே எதுவும் பேசவில்லை. இரண்டொரு நிமிடங்கள் மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவர் தீவிரமாக யோசிக்கிறார் என்பது நன்கு தெரிந்தது. பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக பங்கஜம் டீச்சரை நோக்கினார்.

மேடம், சில விஷயங்கள் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று நாம் முயற்சி செய்யலாமே தவிர, ஒரே பிடிவாதமாக இருக்கக் கூடாது. அது முரட்டுத்தனமான முட்டாள் பிடிவாதம். நான் அப்படி இருக்க விரும்பவில்லை. நான் சித்ராவை அழைத்துக் கொண்டு போகப் போவது இல்லை. நடப்பது நடக்கட்டும். நீங்கள் அறிவிப்புச் செய்யுங்கள். சித்ராவை அனுப்பி வைக்கிறேன். ஆண்டவன் விட்டபடி நடக்கட்டும்."

"சார், நன்றாக யோசித்துச் சொல்லுங்கள். அமைச்சரின் அறிமுகம் ஏற்பட்டால் அது உங்களுக்கு இன்னும் பிரச்சனைதான். நீங்களே சிக்கிக் கொள்கிறீர்கள். இதையெல்லாம் ஏதும் நடக்கவிடாமல் பண்ணிக் கொள்ளும் வழி இன்னமும் இருக்கிறது. பிறகு பள்ளியையும் எங்களையும் பழிக்காதீர்கள்!"

பசுபதி சிரித்தார். "நான் எதற்காக மேடம் உங்களை எல்லாம் பழிக்கப் போகிறேன்? கண்டிப்பாக மாட்டேன். கடவுள் கருணை இருந்தால், என் இலட்சியம் நிறைவேற அவரே துணையிருப்பார்" – கூறிவிட்டு பசுபதி தான் உட்கார்ந்த இடத்திற்கே திரும்பி விட்டார்.

நாடகம், கோலாட்டம் முடிந்தது. கரகாட்டம் தொடங்கியது. தாம்பரத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிகள் கிளிக் கரகம் வைத்து பம்பரமாகச் சுழன்றாடினர்.

அமைச்சர் தனது சிறப்புரையைத் தொடங்கி, பரிசளிக்கும் நிகழ்ச்சி பாக்கி. அறிவிப்பில், பங்கஜம் டீச்சர் குரல் கேட்டது.

"எட்டாம் வகுப்பு சித்ரா, உடனே மேடைக்கு வரவும்."


என்ன பேசிக் கொண்டார்கள் என்பது தெரியாவிட்டாலும் பங்கஜம் டீச்சர் தந்தையை அழைத்துப் போய்ப் பேசியது வரை அவளுக்குத் தெரியும். திரும்பி வந்த பிறகு பசுபதியும் அவளிடம் விவரம் ஏதும் கூறவில்லை. அதனால் திடீரென்று மேடைக்கு வரும்படி அறிவிப்பு வரவே அவள் திகைத்துப் போனாள். ஆர்வம் இருந்தபோதும் அவள் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவில்லை. அதனால் பரிசு ஏதும் கிடைத்திருக்க அவளுக்கு வாய்ப்பும் இல்லை. பின் எதற்காகக் கூப்பிடுகிறார்கள்? ஒன்றும் விளங்காமல் தந்தையைப் பார்த்தாள்.

"போயிட்டு வாம்மா. கூப்பிடறாங்க இல்லே?" என்று அனுமதித்தார் பசுபதி.

திகைப்பு நீங்காமல் சித்ரா மேடைக்குப் போனாள். "வா சித்ரா" என்று அன்போடும் பெருமிதத்தோடும் அவள் கையைப் பிடித்துக் கொண்ட பெரிய மேடம், அமைச்சரிடம் அவளை அழைத்துப் போனார்.

"ஐயா, அழகு கொஞ்சும் அந்த வரவேற்புப் பலகை ஓவியத்தை உருவாக்கிய பெருமைக்கு உரியவள் இவள்தான். பெயர் சித்ரா. என் பெருமைக்கு உரிய மாணவி" என்று அமைச்சருக்கு அறிமுகம் செய்தார் பெரிய மேடம்.

"வணக்கம் ஐயா!" –



சித்ரா திகைப்பு நீங்காமல் கை கூப்பினாள்.

"வணக்கம்மா. முதலில் நீ வரைஞ்ச ஓவியத்தைப் பார்த்தேன். மகிழ்ந்தேன். இப்போ, அந்த ஓவியத்தின் சொந்தக்காரியான உன்னைப் பார்க்கிறேன். பெருமகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய பாராட்டுகள்!'' என்று மனம் திறந்து பாராட்டினார் அமைச்சர்.

மனம் ஒரு பக்கம் மகிழ்ச்சியாலும் பெருமையாலும் குதியாட்டம் போட்டாலும், அதை மனதார அனுபவிக்க முடியாமல் அப்பாவுக்குப் பிடிக்காத எதையோ இவர்கள் செய்யப் போகிறார்கள் என்று உஷாரானாள் சித்ரா.

"யாரிடமாவது ஓவியம் கத்துக் கொள்கிறாயாம்மா" – அமைச்சர்தான் பரிவுடன் கேட்டார்.

"இல்லை ஐயா. நானே எழுதி எழுதிப் பழகிட்டதுதான்" – சித்ரா தவித்தாள்.

"பூமா ஓவியப் பயிற்சிப் பள்ளியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா சித்ரா?''

செய்தி ஏடுகளிலும், வார மாதப் பத்திரிகைகளிலும் அஞ்சல்வழியாக ஓவியப் பயிற்சி தரும் அந்தப் புகழ்பெற்ற பள்ளியைப் பற்றி சித்ரா நிறைய அறிந்து வைத்திருந்தாள். ஆயிரம் ரூபாய் பயிற்சிக் கட்டணமாம். மாதம் இருமுறை தபால் மூலம் பாடம் அனுப்பிப் பயிற்சி தருவார்களாம். இரண்டு ஆண்டு காலப் பயிற்சியாம். இரண்டாயிரம் ரூபாய்க்கு எங்கே போவது என்று சித்ரா மனமிடிந்து போயிருக்கிறாள். அதைப் பற்றித்தான் அமைச்சர் கேட்கிறார்.

"ஓவிய ஆர்வமுள்ளவர்களுக்கு நன்கு அறிமுகமான பெயர் ஆச்சே ஐயா. எனக்குத் தெரியாமல் இருக்குமா? ஆனால் அதில் சேர்ந்து பயிற்சி பெறும் அளவுக்கு எங்கப்பாவுக்கு வசதி இல்லை" – சித்ரா ஒளிவுமறைவின்றி, அடக்கமாகத் தன் நிலையைக் கூறினாள்.

அமைச்சர் சிரித்தார்.

"அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்கள் சித்ரா. ஆரம்ப காலத்தில் நானே அதில் பணியாற்றியிருக்கிறேன். உன் போன்றவர்களை மாணவியாக எடுத்துக் கொள்ள அவர்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும். உன் முகவரியை என்னிடம் கொடு. கட்டணம் இல்லாமல் உனக்குப் பயிற்சி தர நான் ஏற்பாடு செய்கிறேன். உன்னிடம் உள்ள இந்த அற்புதத் திறமை வீணாகி விடக் கூடாது.''


சித்ரா தன் வீட்டு முகவரியைத் தந்து விட்டு நன்றி கூறித் திரும்பினாள்.

"இரும்மா'' என்று கூறிய அமைச்சர், சித்ராவின் ஓவியத் திறமையைப் புகழ்ந்து பேசிவிட்டு, "பிளஸ் டூ பாஸ் பண்ணின பிறகு, உன்னை ஓவியக் கல்லூரியில் நான் சேர்ப்பேன். செலவு என்னுடையது'' என்று கூறித் தனது பேனாவை அவளுக்குப் பரிசளித்தார்.

அறிமுகம் ஆனவர்கள், ஆகாதவர்கள் என்ற பாகுபாடு இன்றி எல்லா மாணவிகளும் ஆசிரியைகளும் சித்ராவின் கைகுலுக்கிப் பாராட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். வயிற்று வலிக்காரனுக்கு மாலை போட்டால் அவன் எப்படி இருப்பானோ, அதே நிலையில் இருந்து நன்றி கூறினாள் சித்ரா.

பசுபதி எதுவுமே பேசவில்லை.

"அப்பா உங்களுக்குப் பிடிக்காதது எதையும் உங்கள் அனுமதி இல்லாமல் பண்ண மாட்டேன். அவர்களாகத்தான் கூப்பிட்டார்கள்'' என்று விசும்பினாள் சித்ரா திரும்பி வரும்போது.



"உங்க பேரு...?''
"பால விநாயகம்!''
"உங்க தொழில்?''
"பால் விநியோகம்''
– கள்ளிக்குடி குருஸ்ரீ

"பரவாயில்லைம்மா. இதெல்லாம் எனக்கு முன்பே தெரியும்" என்றார் பசுபதி.

இதற்குள் விஷயம் அம்மா மங்கைக்கு இவர்கள் இருவரும் போகுமுன்பே எட்டி விட்டது. எத்தகைய அரிய வாய்ப்பு! அம்மா, முகம் மலர அவர்களை வரவேற்றார். "அமைச்சர், தன்னுடைய பேனாவையே பரிசாகத் தந்தாராமே! பிளஸ் டு பாஸ் பண்ணின பிறகு அவரே ஓவியக் கல்லூரியில் தன் செலவில் ஓவியம் பயில வைப்பதாகக் கூறினாராமே!" என்று பெருமையுடன் கேட்டார்.

அப்பாவின் உணர்ச்சி ரேகை கூடப் படியாத இறுகிய முகத்தைக் கண்டதும், அம்மா தன் மகிழ்ச்சியையும் பெருமையையும் அதற்கு மேல் வெளியே காட்டவில்லை.

சித்ராவுக்கு சாப்பாடே வேண்டியிருக்கவில்லை. அப்பா கடிந்து கொள்வாரே என்று அவருடன் பேருக்கு உட்கார்ந்தாள்.

"சித்ரா" என்று கடினமான குரலில் அழைத்த பசுபதி, "அமைச்சர் உன்னை ஓவியக் கல்லூரியில் தன் செலவில் பயில வைப்பதாகக் கூறியதையே எண்ணிக் கொண்டிருக்காதேம்மா. அதற்கு இன்னும் முழுசாக நான்கு ஆண்டுகள் இருக்கு. தபால் மூலம் ஓவியம் பயிலத் தாமே ஏற்பாடு செய்வதாகக் கூறினாரே, அப்படி அது வந்தால், அந்தப் பயிற்சியை நீ பண்ணாதே. உன் மனம் ஓவியம் வரைய வேண்டும் என்ற துடிப்பிலிருந்து விடுபட வேண்டும்" என்று நிறுத்தினார்.

"நீங்கள் கவலையே பட வேண்டாம் அப்பா. உங்களுக்குப் பிடிக்காத ஓவியக் கலையை உங்கள் அனுமதி இன்றி கனவில் கூடப் பயில மாட்டேன். அமைச்சர் குறிப்பிட்ட அஞ்சல் வழிப் பயிற்சிப் பாடங்கள் நம் முகவரிக்குக் கண்டிப்பாக வராது. அது வந்தால்தானே நான் அந்தப் பயிற்சியை முடித்து அனுப்ப முடியும்? அதற்கு வாய்ப்பே இல்லை."

"அமைச்சரிடம் முகவரியைத் தரலே?"

"தந்தேன். ஆனால் தவறான முகவரியை! அப்படி ஒரு தெரு கிடையவே கிடையாது. அதனால் நீங்கள் கவலையே பட வேண்டாம்" என்று கூறினாள் சித்ரா.

பசுபதி திகைத்துப் போய் நின்றார். அம்மாவும் மலைத்து நின்றாள்!

அன்று சித்ராவுக்குப் பிறந்த நாள். சாதாரணமாக பசுபதி அவளுக்குப் பிறந்த நாள் பரிசாக என்ன வேண்டும் என்று கேட்டு வாங்கித் தருவார். புதிய வீட்டுக்கு அட்வான்ஸ் தந்ததாலும், வீடு மாற ஏற்பட்ட அதிகச் செலவையும் சமாளிக்க வேண்டியிருந்ததாலும் பசுபதி பணத்துக்குத் திண்டாடிக் கொண்டிருந்தார்; அதனால், அவளுக்கு என்ன வேண்டும் என்று அவர் கேட்கவில்லை. ஏற்கெனவே புதிதாக வாங்கி வைத்த யூனிபார்ம் ஒரு செட் இருந்தது. அதனால் வேறு ஏதும் புதிதாக வாங்க வேண்டாம் என்று சித்ரா, தானே அப்பாவிடம் சொல்லி விட்டாள். அம்மாவுக்குக் கூடக் கொஞ்சம் வருத்தம்தான். இருந்தாலும் நிலைமை அப்படி இருந்ததால், அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

புதிய சீருடையைப் போட்டுக் கொண்டு சித்ரா பெற்றோரை வணங்கினாள். அவளை மனமார வாழ்த்திய

***நா**ம் யாருடைய பெயரையாவது எழுதும் போது 'மிஸ்டர்' என்ற வார்த்தையை பெயருக்கு முன்னால் எழுதுவோம். ஆனால் சீனர்கள் பெயரை எழுதிவிட்டு பின்னால் தான் 'மிஸ்டர்' என்று எழுதுகிறார்கள்!'*

– எஸ். ஜெயஸ்ரீ
திருச்சி – 14.



பசுபதி, ஓர் இருபது ரூபாய் நோட்டை அவளிடம் தந்தார்.

சித்ரா புரியாமல் அவரைப் பார்த்தாள்.

"சாக்லேட் தராவிட்டால் சிநேகிதிகள் சும்மா விடுவார்களா? அதற்குத்தான் இது" என்று சிரித்த பசுபதி, "மாலையில் நானும் சீக்கிரம் வந்து விடுகிறேன். எல்லோருமாகக் கோவிலுக்குப் போய் விட்டு வரலாம்" என்றார்.

சித்ரா கிளம்பினாள். வாசலில் சைக்கிள் மணிச்சத்தம். பசுபதி விரைந்து சென்று பார்த்தார். இரண்டு நிமிஷம் பொறுத்து அவர் திரும்பிய போது அவர் கையில் ஒரு சிறிய பார்சல் இருந்தது.

"பம்பாயில் இருந்து உங்க அத்தை கூரியரில் அனுப்பியிருக்கிறாள். உன் பெயருக்குத்தான் வந்திருக்கு" என்று பார்சலை சித்ராவிடம் தந்தார் பசுபதி.

"பிறந்த நாள் பரிசாகத்தான் இருக்கும்," சீக்கிரம் பிரித்துப் பார்" என்று கூறினார் அம்மா.

அத்தைக்கு சித்ராவிடம் அளவிட முடியாத அன்பு. அவளை பம்பாயில் தன்னிடமே வைத்துக் கொள்ள ஆசைப்பட்டார். அப்பா அனுமதிக்கவில்லை.

சித்ரா பார்சலைப் பிரித்தாள். உள்ளே மேலாக ஒரு கடிதம். "நீயாக எழுதா விட்டாலும் பள்ளியில் அமைச்சர் பேனா பரிசு தந்து பாராட்டியதைப் பத்திரிகையில் படித்து அறிந்து கொண்டேன். என் பாராட்டுகள். உன்னுடைய பிறந்த நாளுக்குப் பரிசாக இதை அனுப்பியிருக்கிறேன். உன் ஓவியத் திறமை வளர இது தூண்டுகோலாக இருக்கட்டும்" என்று அத்தை எழுதியிருந்தார்.

சித்ரா அடங்காத ஆவலுடன் கீழே இருந்த சிறிய பெட்டியைப் பிரித்தாள். நான்கு வகையான பிரஷ், பன்னிரண்டு வண்ண டியூப்கள், எட்டு பென்சில்கள், வண்ணம் குழைக்கும் குழித்தட்டு எல்லாம் அடங்கிய ஓவியருக்கான கிட் (Artist kit) அது. விலை சுமார் ஐநூறு ரூபாய் இருக்கும்.

என் உணர்வுகளைப் புரிந்து கொண்டிருப்பவர் அத்தை மட்டுமே என்று மனதிற்குள் அத்தையைப் பாராட்டிக் கொண்டாள் சித்ரா.

பசுபதியின் முகத்தில்தான் ஏமாற்றம்.

"உலகமே உன்னை வருங்கால ஓவியராகப் பார்க்கும்போது, அதற்கு உதவி, ஊக்கி விட முழுமூச்சாக இருக்கும் போது நான் ஒருவன் மட்டும் எதிராக இருந்து என்ன பயன்? இந்த ஓவிய ஆர்வம் உன் படிப்புக்கு இடையூறாக இருக்காமல் பார்த்துக் கொள்," என்று ஓர் ஏமாற்றச் சிரிப்பைச் சிந்தினார் பசுபதி.

கோவிலில் அவர்களுக்கு எதிர்பாராத ஓர் அதிசயம் காத்திருப்பதை அவர் எப்படி அறிவார்?

(வளரும்)



"பாட்மின்டன்" என்று அழைக்கப்படும் பூப்பந்தாட்டம் 1850–ஆம் ஆண்டுக்கு முன் இந்தியாவிலேயே ஆடப்பட்டு வந்தது. அப்போது இவ்விளையாட்டிற்கு "பூனா" என்று பெயர். இந்த விளையாட்டைக் கண்ட ஆங்கிலேய உயர் அதிகாரிகள் சிலர் தங்கள் நாட்டிற்குச் சென்று நீள்வட்டத்தில் கைப்பிடியுடன் ஒரு மட்டை செய்து இந்த விளையாட்டை ஆர்வமாக விளையாடினார்கள். முதன் முதலில் இந்த விளையாட்டை "பாட்மின்டன்" என்ற இடத்தில் விளையாடினார்கள். பின்னர் அந்த இடத்தின் பெயரான "பாட்மின்டன்" இந்த விளையாட்டின் பெயராக நிலைத்து விட்டது.

– ரமா ராமநாதன்.

ஆதாரம் : விளையாட்டு உலகம்.



● எஸ். செந்தாமரை, வள்ளியூர்.

? காய்ச்சல் இருக்கும் போது குளிக்கக் கூடாது என்று கூறுகிறார்களே... ஏன், டாக்டர்?

! நம் உடம்பில் நோய் ஏற்படும்போது அந்த நோயின் கிருமிகளை எதிர்த்து உடல் அணுக்கள் நடத்தும் போராட்டத்தின் விளைவே 'காய்ச்சல்' என்பது. உடல் அணுக்களின் இந்தப் போராட்டத்திற்கு சக்தி தேவை. உடம்பில் இருக்கும் சக்தியை வீணாக்காமல் தக்க வைத்துக் கொண்டால்தான் விரைவில் நோய் குணமாகும். காய்ச்சல் இருக்கும்போது குளித்தால் அதற்கு சிறிதளவு சக்தி செலவாகும்; மேலும் உடலின் வெப்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டு உடல் நலம் சீர் கெடவும் வாய்ப்புண்டு. இந்தக் காரணங்களால் காய்ச்சல் இருக்கும்போது குளிக்கக் கூடாது என்று கூறுகிறார்கள், பெரியவர்கள்.



கொதிக்க வைத்த நீர் சுவையில்லாமல் இருப்பது ஏன்?

● கே. பிரஷ்னேவ், பாக்கம் கோட்டூர்.

? தண்ணீர் மூலம் மனிதர்களுக்கு வரும் நோய்கள் என்னென்ன?

! மஞ்சள் காமாலை, இளம்பிள்ளை வாதம், வயிற்றுப்போக்கு, சீதபேதி, காலரா, டைபாய்டு காய்ச்சல், குடலழற்சி, குடல் புழுக்கள், நாடாப்புழு நீர்க்கட்டி (Hydatidcyst, நரம்புச் சிலந்தி நோய் ஆகியவை தண்ணீர் மூலம் மனிதர்களுக்குப் பரவும் நோய்களில் முக்கியமானவை.

● என். ராஜலட்சுமி, மேலப்பாதி.


? ஒரு மனிதர் ஒரு தடவையில் எவ்வளவு ரத்தம் தானமாகக் கொடுக்கலாம்?

! 300 லிருந்து 450 மி.லி வரை கொடுக்கலாம்.

● கே. சுந்தர், திருச்செந்தூர்.

? நாம் அழும்போது மூக்கிலிருந்து நீர் வருவது ஏன்?

! நம் கண்களின் மேல் இமைகளின் அடியில் வெளிப்பக்க விளிம்பில் கண்ணீர்ச் சுரப்பிகள் உள்ளன. இவற்றிலிருந்து எந்நேரமும் சிறிதளவு கண்ணீர் சுரந்து கொண்டே இருக்கும். கண்களை உலர விடாமல், ஈரப்பதத்துடன் வைத்திருக்க இந்தக் கண்ணீர் உதவுகிறது. இந்தத் தேவைக்குப் போக மீதி இருக்கும் கண்ணீர், மூக்கு - கண்ணீர் நாளம் (Nasolachrymal duct) வழியாக மூக்குக் குழிக்கு எடுத்துச் செல்லப்படும். சாதாரண நேரங்களில் கண்ணீர் மிகக் குறைந்த அளவில் சுரப்பதால், மூக்குக் குழிக்கு வரும் கண்ணீர் நம் கவனத்திற்கு வருவதில்லை. அதே சமயம் நாம் அழும் போது கண்ணீர் அதிகமாகச் சுரப்பதால், மூக்கு வழியாக அது வடிவது நமக்குத்





தெரிகிறது.

● செ. ராஜ்குமார்,
மதுரை – 1.

? காசநோய் உள்ள பெண் கருவுற்றிருந்தால், அந்நோய் குழந்தையையும் பாதிக்க வாய்ப்புண்டா, டாக்டர்?

! வாய்ப்புண்டு. ஆனால், கருவுற்ற பெண் தகுந்த காசநோய் சிகிச்சையை எடுத்துக் கொண்டால் அந் நோய் குழந்தையைத் தாக்க வாய்ப்பில்லை.



● ஈ. பா. ரோகிணி, ஈரோடு.

? சிறுநீரகத்தில் கல் உள்ளது என்பதை எப்படி அறிவது? அதைப் போக்க எளிய வழி வீட்டிலேயே கடைப்பிடிக்கும்படி கூறுங்கள், டாக்டர்?



! முதுகில் விலாப்பக்கங்களில் வலி ஏற்படுவது, சிறுநீர் போகும் போது கடுப்பாக இருப்பது, சிறுநீரில் ரத்தம் கலந்து வெளியேறுவது போன்ற அறிகுறிகள் சிறுநீரகப் பாதையில் கல் இருப்பதைத் தெரியப்படுத்தும். இது தவிர வயிற்றை எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் எடுத்துப் பார்த்தால் கல் எங்கு, எப்படி, எந்த அளவில் உள்ளது என்பதை வெகுத் துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம். சிறுநீரகக் கல் மிகச் சிறிதாக இருந்தால் தினமும் சுமார் 200 மி.லி. வாழைத் தண்டு சாறை சாப்பிட்டு வர, கல் கரைந்து வெளியேறி விடும்.

● ரா. லலிதா, தக்கோலம்.

? எய்ட்ஸ் உயிர்க்கொல்லி நோயினை முற்றிலும் குணப்படுத்துவதற்கு மருந்து கண்டுபிடித்து விட்டார்களாமே? இது உண்மையா, டாக்டர்?

! உண்மையில்லை, லலிதா. எய்ட்ஸ் நோயை முற்றிலும் குணப்படுத்தக்கூடிய மருந்தை இன்றைய தேதி வரை கண்டு பிடிக்கவில்லை. மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. கூடிய விரைவிலேயே கண்டுபிடித்து விடுவார்கள் என்று நம்புவோம். அதே நேரத்தில் எய்ட்ஸுக்கு மருந்து கண்டு பிடித்து விட்டதாக போலி விளம்பரங்கள் வருகின்றன. அதை நம்பி ஏமாற வேண்டாம்.



● வெ. அருள், பனையூர்.


? கொதிக்க வைத்து ஆற வைத்த தண்ணீர் சுவையில்லாமல் இருப்பது ஏன்?


! சாதாரணமாக, சுத்தமான தண்ணீருக்கு சுவை இல்லை. நீரில் கலந்துள்ள – கரைந்துள்ள– பொருள்களால்தான் அதற்கு சுவை கிடைக்கிறது. மழை பெய்யும் போது கரியமில வாயு அதில் கலக்கிறது; தரையில் விழுந்ததும், பூமியிலுள்ள தாதுக்கள் தண்ணீரில் கரைகின்றன. அப்போது தான் அதற்கு சுவை ஏற்படுகிறது. இந்த நீரைக் கொதிக்க வைக்கும் போது, அதிலுள்ள வாயுக்கள் ஆவியாகி வெளியேறி விடுகின்றன; தாதுப் பொருள்களும் பிரிந்து பாத்திரத்தில் படிந்து விடுகின்றன. இதனால் தண்ணீர் மீண்டும் தூய்மை அடைகிறது. ஆக, சுத்தமான இந்தத் தண்ணீருக்கு சுவை இருப்பதில்லை!




டாக்டர். கு. கணேசன்


விடுகதைகளுக்கு விடை என்ன? - போட்டி














இங்கு பத்து விடுகதைகள் உள்ளன. இந்த பத்து விடுகதைகளுக்கான விடைகள் படங்களாகத் தரப்பட்டுள்ளன. இங்குள்ள படங்களில் பத்து படங்களே சரியான விடைகள். விடுகதைகளுக்கான விடைகளை எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 31.12.97. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.







1. செக்கச் சிவந்திருப்பாள்
செவ்வாழை போலிருப்பாள்
வாலும் முளைத்திருக்க
வந்திருப்பாள் சந்தையிலே.

அவள் யார்?

2. பொட்டுப் போல இலை இருக்கும்
பொரி போலப் பூ பூக்கும்
சாப்பிடக் காய் கொடுக்கும்
தின்னாத பழமோ பழம்.

அது என்ன?

3. முத்து மூடியிருக்கும்
முக்காடு போட்டிருக்கும்
முட்கள் நீண்டிருக்கும்
மிடுக்காய் வீற்றிருக்கும்.

அது என்ன?

4. வட்ட முகம் உண்டு
வாய் திறந்து பேசாது
காட்டக் கை உண்டு
கால் ஊன்றி நடக்காது.

அது என்ன?

5. வெட்ட வெளிக் காட்டுக்குள்ளே
விளக்கை வைத்துக் கொண்டு
விக்கி விக்கி அழுதுகிட்டு
விரைவாக செல்கிறாள்.

அவள் யார்?

6. வாய் இல்லை, செய்தி சொல்வேன்
ஊர் விட்டு ஊருக்குப் போவேன்.

நான் யார்?

7. வானிலே விரைந்து செல்லும்
விமானம் அல்ல
பாங்காய் பறந்து செல்லும்
பறவையும் அல்ல.

அது என்ன?

8. ஏறினால் வழுக்கும்
இலை என்றால் சுருளும்
காய் என்றால் துவர்க்கும்
பழம் என்றால் இனிக்கும்.


அது என்ன?

9. காற்றிலே பறக்கும், காற்றாடி அல்ல
சக்கரம் உண்டு, சைக்கிள் அல்ல
வண்ணங்கள் உண்டு, படமும் அல்ல.


அது என்ன?


10. மாட மாளிகையில் வசிப்பாள்
ராணி அல்ல
கூட கோபுரத்தில் இருப்பாள்
கடவுளும் அல்ல.


அவள் யார்?











ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097

அன்னை தெரசா

வேஷம் போடும் உலகத்தில்
நேசம் காட்ட வந்தவரே!
தேசம் எங்கும் தொண்டாற்ற
தென்றல் போல வந்தவரே!


பார்க்க் சகியா தொழுநோயின்
தாக்கத் தாலே நொந்தவரை,
தூக்கித் தொட்டு மருந்திட்டு;
தொண்டு பலவும் புரிந்தவரே!

ஏழை, எளியோர் எல்லோரும்
ஏற்றம் கொண்டு வாழ்ந்திடவே,
ஆடை, கல்வி, உணவெல்லாம்
அன்பில் கலந்து தந்தவரே!

அன்னை தெரசா உனைப்போல
அன்பு நெஞ்சை எல்லோரும்
என்றும் பெற்று வாழ்ந்தாலே
இன்பம் பெருகும் இந்நாட்டில்!

— திமிரி சொ. சரவணபவன்.





குருவி

சின்னஞ் சிறிய குருவியே
சிறகடித்தே நீ பறந்திடுவாய்
சுற்றிச் சுற்றி திரிந்திடுவாய்
சுவரில் ஓட்டைக் கண்டிடுவாய்
சிறுகச் சிறுக நுழைந்திடுவாய்
சீக்கிரம் கூட்டைக் கட்டிடுவாய்
பதுங்கி பதுங்கி பறந்திடுவாய்
பாடி ஆடிக் களித்திடுவாய்.

— ஜெ. மாலதி, ரெய்ச்சூர்.

மூட்டைப் பூச்சி

சுவர் இடுக்கில் இருக்குதே
சுற்றிச் சுற்றித் திரியுதே
இரவு நேரம் வந்ததே
இரத்தம் உறிஞ்சி வளர்ந்ததே
நறுக் கென்று கடித்ததே
நரக வேதனை கொடுத்ததே
உருவில் சிறிய மூட்டையே
ஊர்ந்து செய்கிறாய் சேட்டையே!

— எம். சேக் உசேன், வடகரை.



கணினி


தொலைக்காட்சிப் பெட்டியெனத்
தோற்றம் இருக்குமே
தேவையான விவரங்களைத்
திரையில் காட்டுமே!

பிளாப்பி டிஸ்க் பெயரிலே
உறையும் இருக்குமே
தொகுத்துப் பல தகவல்களைத்
தொகுத்து வைக்குமே

வேண்டாத விவரங்களை
அழிக்க உதவுமே
கல்வி வணிகம் பலவற்றையும்
கற்க உதவுமே

கம்ப்யூட்டர் அதன் பெயராம்
குறித்து வையுமே!
கணினி என்று தமிழில் அதைக்
கூறிடுவோமே!

- பூண்டிதீர்த்தேக்கம், புதிய ஜீவா.




உங்கள் நெ.1 அம்மாவை வரையுங்கள், வெல்லுங்கள்!
PUSTI Singapore Surprize
10 மகத்தான சிங்கப்பூர் பயணப் பரிசுகள்!
1008 அட்டகாசமான பரிசுகள்!
ரொம்ப ரொம்ப கலபமான, ஜாலியான போட்டி!
குழந்தைகளே, உங்கள் டிராயிங் திறமையைக் காட்டி, பரிசு வெல்லுங்கள். அம்மாவை சிங்கப்பூருக்கு விடுமுறை சமயத்தில் அழைத்துச் செல்லுங்கள்! உங்களுக்காக வேறு பல பரிசுகளும் உள்ளன! சூப்பர் 3-இன்-1, ஹெர்குலஸ் பிளஸ் சைக்கிள், கோடக் காமெரா, பர்சனல் ஸ்டீரியோ, வாட்ச்கள் போன்ற பல பரிசுகள்! இவற்றையெல்லாம் உங்களுக்குத் தருகிறது புஷ்டி பிஸ்கெட்! எனவே சீக்கிரம் கடைக்குச் சென்று, சத்தான புஷ்டி பிஸ்கெட் வாங்கி, கூடவே நுழைவுத்தாளையும் வாங்கிக் கொள்ளுங்கள். அம்மாவை படமாக வரைந்து எங்களுக்கு அனுப்புங்கள்! பரிசு கிடைக்கும், பார்த்துக் கொண்டே இருங்கள்!
கடைசி தேதி – ஜனவரி 15, 1998
ஆகவே சீக்கிரம், சீக்கிரம் !!
இந்த வாய்ப்பு தமிழகத்திலும் பாண்டிச்சேரியிலும் மட்டுமே.
PUSTI
Mass Bozell 467/97 TAM

பலூன்கள்

பலூன் என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். பலூனுக்காக அழுது, அடம் பிடித்து வாங்கி உடைத்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறதா?

புத்தாண்டு, கிறிஸ்துமஸ், பிறந்த நாள் விழா, பாராட்டு விழா என மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் விழாக்களில் பலூன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பலூன்களில்தான் எத்தனை வடிவங்கள். அப்பப்பா! ஆப்பிள், பரங்கிக்காய், சுரைக்காய், புடலங்காய், வாத்து, கோழி, பூனை போன்று எத்தனையோ வித வடிவங்கள், வண்ணங்களில் பலூன்கள் வந்து விட்டன.

சாதாரணமாக பலூன்களை நாமே காற்றை ஊதி பெரிதாக்குவோம். ஆனால் பெரிய நகரங்களில் இயந்திரத்தின் மூலம் பலூன்களில் ஹைட்ரஜன் காற்றை நிரப்புகிறார்கள். ஹைட்ரஜன், ஹீலியம் போன்ற வாயுக்கள் காற்றை விட லேசானவை. எனவே இந்த வாயுக்களால் நிரப்பப்பட்ட பலூன்கள் காற்றில் மிதக்கும். கொஞ்சம் கவனமின்றி பலூனின் நூலை விட்டீர்கள் என்றால் அதை பிடிக்கவே முடியாது. போயே போய் விடும்!

ஹைட்ரஜன் பலூன்கள் பந்தயத்திற்கு பயன்பட்டன. யாருடைய பலூன் நீண்ட தூரம் பறக்கிறதோ அவர்களே வெற்றி பெற்றவர்கள்.

பெரிய ஹைட்ரஜன் பலூன்களில் சில கருவிகளை இணைத்து வானில் பறக்க விட்டு வானிலைகளை அறிந்து கொண்டனர்.

சில காலம் சென்ற பின் பெரிய பலூனின் அடிப்புறம் கூடை ஒன்றை அமைத்தனர். இக்கூடையில் சில மனிதர்களும் நின்று கொண்டு பயணம் செய்தனர்.

கூடை பலூனின் உதவியால் போக்குவரத்து வசதிகள் இல்லாத அடர்ந்த காடுகள், பனிப்பிரதேசங்கள் போன்ற இடங்களுக்கு கடிதங்கள், செய்திகள் அனுப்பப்பட்டன. அதே போல் ராணுவத்தினரும் தங்கள் நாட்டு எல்லைக்குள் எதிரிகள் வருகிறார்களா என்று கண்காணிப்பதற்கு கூடை பலூனை பயன்படுத்திக் கொண்டனர்.

பிறகு கூடை பலூன்களில் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு நீள் வடிவமாக மாற்றப்பட்டது. இவற்றை வான் கப்பல் என்றழைத்தனர்.

இந்த வான் கப்பல்கள் போர்களிலும் பயன்படுத்தப்பட்டன. இவை எளிதில் தீப்பற்றிக் கொள்வதாலும், அதற்கு பிறகு ஆகாய விமானம் கண்டு பிடிக்கப்பட்டதாலும் வான் கப்பல்கள் வளர்ச்சியடையவில்லை. ஆனால் இன்றும் கூட வானிலை ஆராய்ச்சிகளில் வான் கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அட்டையில் :
சௌஜன்யா,
அவினாஷ்.

வண்ணப்படம் :
உத்ரா

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசுபெறும் ஆறாவது கதை

அண்ணனுடன் வருவாயா?

பி. லெட்சுமி

அம்மாவின் குரல் உரக்கக் கேட்டது. "ராகுல்! டேய் ராகுல்!"

படுக்கையறையில் படுத்திருந்த ராகுலின் காதில் அம்மா கூப்பிட்டது கேட்டாலும் அவன் அசையவில்லை! அதற்குள் அம்மாவே அவனைத் தேடிக் கொண்டு வந்து விட்டார்.

"டேய் ராகுல்... ராகுல் என்னடா இது இப்படிப் பண்றே? இப்பத்தான் அப்பா தலைவலின்னு தூங்கப் போயிருக்கிறார். டேப் ரிக்கார்டர் சத்தத்தைக் கொஞ்சம் குறைத்து வைக்கக் கூடாதா?" - அம்மாவின் குரலில் கண்டிப்பை விட கெஞ்சலே அதிகம் இருந்தது. நிலைமை அப்படி!

ராகுல் எரிமலையாக வெடித்தான். "என்னம்மா நீ! இத்தனை நாளாத்தான் ஸ்கூல் இருந்தது. இன்றுதானே லீவ். நீ என்னடாவென்றால் இன்னிக்குக் கூட பாட்டைக் கேட்க விடமாட்டேங்கறியே! இது அவருக்குத் தொந்தரவா இருந்தா அப்பாவை மாடிக்குப் போய்த் தூங்கச் சொல்லு. நான் சத்தத்தைக் குறைச்சுக்க மாட்டேன்" என்றபடி ஒலியை மேலும் அதிகமாக்கினான் ராகுல்.



அடிக்குப் பயப்படும் பிள்ளையென்றால் அடிக்கலாம். தோளுக்கு மேல் வளர்ந்தவனை என்ன செய்ய முடியும்? இது புதிது இல்லை. எப்பவுமே ராகுல் இப்படித்தான் மற்றவர்களைப் பற்றி எண்ணவே மாட்டான். அவன் குணமே அப்படித்தான். சிறு வயதிலிருந்து பாட்டி வீட்டிலேயே வளர்ந்தவன் அவன். பாட்டியும், தாத்தாவும் அளவுக்கு அதிகமாக செல்லம் கொடுத்து அவனுடைய பிடிவாத குணத்திற்கு அஸ்திவாரம் போட்டு விட்டார்கள். சாதாரண நாட்களிலாவது பரவாயில்லை. விடுமுறை வந்து விட்டால் வீட்டை ரணகளப்படுத்துவான். அவனை மாற்ற யாராலும் முடியவில்லை. பெற்ற அப்பா என்று கூடப் பார்க்காது இப்படிப் பாறாங்கல்லாக இரக்கம் கூட இல்லாமல் இருக்கிறானே என்று அம்மாவுக்கு ஒரே கவலை.

"அம்மா! இந்த அண்ணாவைப் பாரேன்" என்று அழாத குறையாக வந்தாள் ஸ்ருதி. அவள் ராகுலின் ஒரே தங்கை. ஆறாம் வகுப்பில் படிக்கிறாள். அம்மா நொந்து போன

மனத்துடன் மகளை நோக்கினார்.

"பாரம்மா! என் ஸ்கெட்ச் பென் செட்டைப் பிடிவாதமா எடுத்துக் கொண்டு விட்டான். இன்னிக்கு எனக்கு மேப் ட்ராயிங் வகுப்பு வேற இருக்கு. எப்படியாவது கேட்டு அதை அண்ணாவிடமிருந்து வாங்கிக் கொடும்மா!" - கொஞ்சம் விட்டால் ஸ்ருதி அழுது விடுவாள் போலிருந்தது.

புடலங்காயை வதக்கிக் கொண்டிருந்த அம்மா அடுப்பை பெரிசாக எரிய வைத்துவிட்டு, டேய் ராகுல்! நீ பெரியவன் இல்லையா? அவன் ஸ்கெட்சை ஏன் எடுத்தே?" என்று கோபத்துடன் கேட்டார்.

"இன்னிக்கு என் ஃப்ரெண்ட் கோகுலோட பிறந்த நாள் ஏதாவது பிரசண்டேஷன் வாங்கணும்னு நினைச்சேன். மறந்துட்டேன். ஸ்ருதியோட ஸ்கெட்ச் பேனா செட் புதுசு. அதனால அதையே அவனுக்குக் கொடுத்துடலாம்னு எடுத்துக்கிட்டேன். அதுக்கு என்னவோ இப்படி அமர்க்களப்படுத்தறாளே! வேறு



வாங்கிக் கொள்ளச் சொல்" என்று சைக்கிளில் ஏறி பள்ளிக்குப் போய் விட்டான் ராகுல். "இனிமே கடைக்குப் போய் புது செட் வாங்கிக்கிட்டுப் போறதுக்குள்ள பள்ளிக்கு நேரமாயிடும்" என்று அழுத ஸ்ருதியைத் தேற்ற அம்மா பட்டபாடு ஆண்டவனுக்கே தெரியும். ஒருவழியாக பக்கத்து வீட்டு கிர்த்தனாவிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டு போனாள் ஸ்ருதி.

"அண்ணா! அண்ணா! ப்ளீஸ் அண்ணா!" என்ற கெஞ்சல் குரல்கள் ஹாலில் கேட்டன. ராகுலின் திருவிளையாட்டாகத்தான் இருக்கும் என்று அம்மா விரைந்தார்.

அம்மாவின் தலையைக் கண்டதும், "அம்மா! பாரும்மா அண்ணனை. இன்னிக்கு டீ.வி.யிலே எங்க பள்ளில நடந்த வினாடி வினா போட்டியை ஒளி பரப்பறாங்க. நான் அதில் கலந்துக்கிட்டிருக்கேன். அதைப் பார்க்க விடாம இந்த அண்ணா டீ.வி.யை நிறுத்திட்டாம்மா! கொஞ்சம் போடச் சொல்லும்மா" என்று நரேன் கெஞ்சினான். அவன் ராகுலின் தம்பி.

"ராகுல், தம்பி இத்தனை ஆசைப்படறானே? கொஞ்சம் போடக் கூடாதா?" என்று அம்மா கேட்டதுதான் தாமதம். ராகுல் ஆத்திரத்துடன் அனல் கக்கினான்.

"நான் படிக்கும்போதுதான் இவனும் டீவி. பார்க்கணுமா? நாளைக்கு எனக்குத் தேர்வு இருக்கு. இவங்க டீவி. பார்க்கறது எனக்குத் தொல்லை. வினாடி வினா பார்க்கணும்னு என்னவோ துரை துடிக்கிறானே? இரண்டாவது சுற்றில் கூட வராம தோற்று விட்டானே? அந்த அழகை டீவில வேற பார்க்கணுமா? இப்படிக் கேட்கவே வெட்கமா இல்லே?" என்றபடி கத்திய ராகுலை அம்மா வேதனையுடன் பார்த்தார்.

"ராகுல்! ஜெயிக்காட்டி என்னடா? கலந்துக்கிட்டதே பெருமைதானே" என்று இடைபுகுந்து வெட்டினார் அம்மா. அவ்வளவுதான்!

"அவள்தான் உனக்கு உசத்தி. நான் மட்டம்தான். உங்க எல்லாருக்குமே நான் வேண்டாதவன்தான். இல்லாட்டி என்னை மட்டும் பாட்டி வீட்டுல விட்டிருப்பீங்களா? என் மேலே உனக்குப் பாசமே இல்லை. நான் படிச்சா என்ன, படிக்காட்டி என்ன? அவனுக்கு ஐ.க்யூ இருக்கற அளவுக்கு எனக்கு இல்லேன்னுதானே இப்படியெல்லாம் மட்டம் தட்டறீங்க? நான் தேர்வுக்குப் படிக்கலை. இதுங்களே நல்லா ஜாலியா டீவி. பார்க்கட்டும். எனக்குப் படிப்பும் வேண்டாம்; இனிமே சாப்பாடும் வேண்டாம்!" - என்றபடி புத்தகம் நோட்டை வீசியெறிந்து விட்டு அழத் தொடங்கினான்.



அம்மாவின் வேதனை கலந்த முகத்தைப் பார்க்க நரேனுக்குப் பாவமாக இருந்தது. "பரவாயில்லை அம்மா! அண்ணன் தேர்வுக்குப் படிக்கட்டும். என்னால டீவி. பார்க்க முடியாமல் போனால் பரவாயில்லை. என்ன நடந்ததுன்னு நாளைக்கு விக்ரமைக் கேட்டுக்கறேன். வா ஸ்ருதி! அண்ணனுக்குத் தொல்லை தராமல் நாம ரெண்டு பேரும் மாடிக்குப் போகலாம்" என்று கூறிய நரேன் ஸ்ருதியையும் அழைத்துக் கொண்டு போய் விட்டான்.

இது இன்றல்ல, நேற்றல்ல. தினமும் நடைபெறும் நிகழ்ச்சிதான். ராகுலின் ருத்ரதாண்டவம் நடக்காத நாளே கிடையாது. கடைசியில் விட்டுக் கொடுப்பது நரேனாகத்தான் இருக்கும். ஒரு புயல் அடித்து ஓய்ந்த மாதிரி இருக்கும்.

வேதனை தாங்காமல் அம்மா அப்பாவிடம் கூறிச்

கண்ணீர் விடுவார். அப்பாவால் மட்டும் என்ன செய்ய முடியும்? ஏற்கெனவே ராகுலை அடித்துப் பார்த்தார்; திட்டிப் பார்த்தார். ஆசிரியர்களிடம் கூட புகார் செய்தார். எதற்கும் பலனில்லை. ராகுல், வளர வளர அவன் பிடிவாதமும் வீண் வம்பும் வளர்ந்ததே தவிர கொஞ்சம் கூட அவன் மாறவேயில்லை. தம்பியையும் தங்கைகளையும் வேண்டுமென்றே வம்புக்கு இழுத்து அழ வைப்பான். தான் அண்ணன் என்ற அதிகாரத்தைக் காட்டுவான்.

ராகுலின் ப்ளஸ் டூ தேர்வுகள் முடிந்து விட்டன. ஆனாலும் தேர்வெழுதுவதற்குள் அவன் அனைவரையும் படுத்திய பாட்டை எண்ணி இன்னமும் கூட நரேனும், ஸ்ருதியும் நடுங்கினார்கள்! அவன் தேர்வுகள் முடிந்தபோது ஒரு பயங்கரப் புயலே வீசி முடிந்தது போன்று இருந்தது அம்மாவுக்கு.

ஆயிற்று. ராகுலுக்குக் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது. வெளியூரில் விடுதியில் தங்கிப் படித்தாக வேண்டும். அவன் கிளம்ப வேண்டிய நாள் நெருங்கி விட்டது.

''டேய் நரேன்!'' என்று தம்பியை அழைத்தான் ராகுல்.

''என்னண்ணா! என்று நடுங்கியபடி வந்தான் நரேன். "உன் பேனா செட்டைக் கொடு" என்று உரிமையுடன் கேட்டான் ராகுல். "வந்துண்ணா...." என்றபடி இழுத்தவனை கண்களால் முறைத்தான் ராகுல்.

"இல்லண்ணா! அது போன தடவை முதல் ராங்க் வாங்கியதற்காக பள்ளியில் கொடுத்த பரிசு. உன்னிடம்தான் நிறையப் பேனா இருக்கிறதே....?" என்றவனை, மேற்கொண்டு பேச விடாமல் விழுந்தது ஒரு அறை. பொறி கலங்கினது போல் நின்ற நரேனை அம்மாதான் அணைத்துக் கொண்டார்.

"அம்மா! என்றபடி வந்த ஸ்ருதியை கேள்வியோடு பார்த்தாள் அம்மா.

''அண்ணா கல்லூரியில படிக்க வெளியூருக்கு எப்பம்மா போவான்?"

அம்மா அதிர்ந்து போனாள்.

"அண்ணா கல்லூரில படிக்க வெளியூருக்குப் போனால்தான் எனக்கும் தங்கைக்கும் நிம்மதி. இல்லாவிட்டால் தினமும் எங்களுக்கு அடிதான். இப்படி இரக்கமே இல்லாமல் அடித்து எப்படிச் சிவந்து போய் விட்டது பார்த்தீர்களா? அண்ணன் கிளம்பிப் போனால்தான் எங்களால நிம்மதியா தூங்கக் கூட முடியும். ஹோம்-ஒர்க் செய்ய முடியும். ராத்திரி பாதி நேரம் அவன் சத்தமா டீ.வி. பார்க்கறான். நாங்க பார்த்தா திட்டறான். எங்களை விளையாடக் கூட விடறதில்லை. அண்ணன் சீக்கிரமா வெளியூர் போயிடுவான் இல்லே? என்ற குழந்தைகளை தவிப்போடு பார்த்தார் அம்மா. தம்பி தங்கைக்கு எத்தனை பீதி தரும் அண்ணனாகி விட்டான் ராகுல்! இவன் மாறுவானா? பிரிவும் விடுதி வாழ்க்கையுமாவது இவனை மாற்றுமா?

''கடவுளே! இவங்களே கேக்கற அளவுக்கு ராகுலுக்குப் பாசமே இல்லாமல் போயிடுத்தே?'' என்றபடி நொந்து கொண்டார் அம்மா.

ராகுல் ஒருவழியாகக் கல்லூரியில் படிக்க வெளியூர் சென்றான். விடுதி வாழ்க்கை அவனுக்குப் புதிது. ஒரு அறையில் நான்கு பேர்.

முதல் நாளே குளிப்பதில் பிரச்சனை. அறைத் தோழன் சங்கர் முந்திக் கொண்டான் குளிக்க.

''டேய் சங்கர்! என்னடா இது? இன்னிக்கு எனக்குச் சீக்கிரம் வகுப்பு ஆரம்பித்து விடும். நீ அப்புறமா குளிக்கக் கூடாதா?" - கேட்டது ராகுல்தான்.


துரை எட்டு மணி வரை தூங்குவாரு. இவர் குளிச்ச பிறகுதான் நாங்க குளிக்கணுமா? முடியாதுடா" என்று காட்டமான பதில் வந்தது சங்கரிடம் இருந்து.

ராகுலால் என்ன செய்ய முடியும்.

''ஒரு மணி நேரத்துக்கு எத்தனை நிமிஷம்டா?''

''படிக்கும்போதா? விளையாடும் போதா?''

— சீர்காழி வி. ரேவதி



அவனை விட சிறியவனாயிருந்தால் அடிக்க முடியும். அப்படித்தானே செய்து வந்திருக்கிறான்?


இரவு படிக்கும் நேரம்.

"சங்கர்! கொஞ்சம் மெதுவாகப் படியேன். என்னால் படிக்க முடியவில்லை" – இது ராகுல்.

"போடா! நீ படிக்கணும் என்றால் நான் என்ன செய்யணும்? நான் சத்தம் போட்டுத் தான் படிப்பேன். அப்பத்தான் எனக்கு மண்டையில் ஏறும். வேண்டுமென்றால் நீ எங்கேயாவது போய்ப் படி" என்றபடி உரக்க பாடத்தைத் தொடர ஆரம்பித்தான் சங்கர். தேர்வு நேரத்தில் டீ.வி. சத்தத்தைக் குறைத்து வைக்கும்படி கெஞ்சிய ஸ்ருதியின் முகம் ராகுலின் நினைவுக்கு வந்தது! அதோடு, அந்தக் கெஞ்சலுக்குக் கொஞ்சம் கூட இரங்காமல் மூர்க்கத்தனமாகத் தான் நடந்து கொண்டதும் அவன் நினைவுக்கு வந்தது.

"கோபால்! கொஞ்சம் விளக்கைப் போடு. நாளைக்கு எனக்குத் தேர்வு இருக்கு. படிக்கணும்" என்று நண்பனைக் கெஞ்சினான் ராகுல். போடா! நேற்றெல்லாம் படிக்காமல் இருந்துவிட்டு இன்று இப்படிக் குதிக்கிறாய்! உன் இஷ்டத்துக்கு நான் நடந்துக்கணுமா? அது முடியாது. வேண்டுமானால் அறைக்கு வெளியில் விளக்கைப் போட்டுக் கொண்டு படி. எனக்குத் தூங்கணும்," என்று நறுக்குத்தெறித்தது போல் பேசிவிட்டு விளக்கை அணைத்து விட்டு படுத்துக் கொண்டு விட்டான் கோபால். இது ராகுல் மாற்றிக் கொண்டு வரும் நான்காவது அறை. விடுதி வார்டன் கண்டிப்பாக, இனிமேல் வேறு அறைக்கு மாற்ற முடியாது என்று கூறிவிட்டார்.

இப்போதுதான் ராகுலுக்குப் புரிந்தது. அவசியமான சமயங்களை விட அனாவசியமான விஷயங்களுக்கு தான் பிடித்த பிடிவாதம் அவனுடைய நினைவுக்கு வந்தது. ஒவ்வொரு முறையும் தன்னுடன் அவதிப்பட்ட அம்மாவின் முகமும் அவன் முன் தோன்றி, அவனை உருக வைத்தது. அவர்களைப் படுத்திய பாவத்திற்குதான் தனக்கு இந்தக் கதி ஏற்பட்டது என்று அவன் எண்ணினான். மற்றவர்களுக்கு ஏற்றபடி நாமும் விட்டுக் கொடுத்து அனுசரித்துக் கொண்டு போக வேண்டும் என்பதை அவன் கட்டாயமாகப் புரிந்து கொண்டான்.



"Fக்கும், Iக்கும் விபத்து நடந்தா கவலையே இல்லை..."

"ஏன்?"

"அதான் G.H பக்கத்துலயே இருக்கே!"

—கோ. சீனிவாசன்.

விடுமுறைக்கு வீட்டிற்கு வந்திருந்தான் ராகுல்.

"அம்மா! இன்றைக்கு என் நண்பன் முகுந்த் என்னோட சேர்ந்து படிக்க நம் வீட்டுக்கு வரேன்னான்," என்ற நரேன் தயங்கியபடி ராகுலைப் பார்த்து, "அண்ணா! நாங்க இரண்டு பேரும் மாடியிலே போய்ப் படிக்கிறோம். உனக்கு அதனால தொல்லை வராதே?" என்று கேட்டுவிட்டுத் தன் கன்னத்தில் கைவைத்துக் கொண்டான் முன்னெச்சரிக்கையாக!

ராகுலுக்கு சுரீரென்றது. நரேனின் அருகில் போய், "டேய் நரேன்! உன் நண்பன் வந்தவுடன் சொல்லு. நீங்க இரண்டு பேரும் என் அறையிலேயே படிக்கலாம். ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க. நானே சொல்லித் தரேன். அப்புறம் சாயங்காலம் நாம் எல்லோரும் கடற்கரைக்குப் போகலாம். இந்த அண்ணனுடன் நீ வருவாய் இல்லையா?" என்றான் ராகுல். அண்ணனை வியப்போடு பார்த்த நரேன் "சரிண்ணா" என்றான். அவனுக்கு மகிழ்ச்சியில் தலைகால் புரியவில்லை!

நடந்ததையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அம்மாவுக்கு சொல்ல மாளாத வியப்பு! ராகுல் மாறி விட்டான். வெளியூர் விடுதி வாழ்க்கை அவனை மாற்றி விட்டது என்று தாயுள்ளம் துள்ளியது. அண்ணனின் மனமாற்றத்திற்கு என்ன காரணம் என்பது ஸ்ருதிக்குப் புரியவில்லை. ஆனால் உங்களுக்குப் புரிந்திருக்குமே!

முட்டைகள்!


உலகில் இதுவரை ஒன்பதாயிரம் பறவை இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன. பனிப் பிரதேசமாக இருக்கும் வட, தென் துருவங்கள் நீங்கலாக மற்ற நாடுகளில் இக்கணக்கெடுப்பு நிகழ்ந்துள்ளது. ஆப்பிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் அதிக அளவில் பறவை இனங்கள் வாழ்கின்றன.

பறவைகளைப் பற்றிச் சொல்வதென்றால் இங்கே இடம் போதாது. ஆகவே பறவைகளின் களைப் பற்றி பார்ப்போமா?

நமக்கெல்லாம் நன்கு அறிமுகமானது கோழி தான்! சிலருக்கு கோழி யை விட பெரிதான வாத்து களையும் சின்னச் சின்ன புறா களையும் பார்க்கும் வாய்ப்பு கிடைத்திருக்கலாம்!

எல்லா பறவைகளின் களும் கோழி யின் வடிவத்திலேயே காணப்படுகின்றன. ஆனால் பருமனிலும், நிறத்திலும், எடையிலும் வேறு பட்டு இருக்கின்றன. பெரிய பறவைகள் பெரிய களையும், சிறிய பறவைகள் சிறிய களையும் இடுகின்றன.


பறவைக்குப் பறவை யின் நிறம் வித்தி




யாசப்படுகிறது. நிற வேற்றுமையினால் எதிரிகளிடமிருந்து எளிதில் தப்ப முடிகிறது.

கள் வெளிர் நீலம், பழுப்பு, வெள்ளை, சாம்பல், வெளிர் பச்சை போன்ற நிறங்களில் பொதுவாகக் காணப்படுகின்றன.


வெகு சில பறவைகளின் கள் சிவப்பு, இளஞ்சிவப்பு ஏன் ஆரஞ்சு வண்ணத்தில் கூட இருக்கின்றன.

சில களின் மேல் சிறு சிறு புள்ளிகளும், திட்டுத் திட்டாய்க் கறைகளும் உள்ளன.

யின் ஓடு கால்சியம் கார்பனேட் என்ற சுண்ணாம்புப் பொருளால் ஆனது.

 ஓட்டில் மிக மிகச் சிறிய துளைகள் உள்ளன. இவற்றின் வழியே காற்று உள்ளே சென்று வெளியே வருகிறது.

தேன் சிட்டு (Humming bird) பறவை மிக மிகச் சிறியது. இவற்றின் கள்தான் களிலேயே மிகச் சிறியவை. அரை இன்ச் நீளம்தான் இருக்கும்.

நெருப்புக்கோழி (Ostrich) பறவைதான் மிகப் பெரிய பறவை. இவை மணலில் பள்ளம் தோண்டி தம் உருவத்திற்கு ஏற்றவாறு பெரிய களை இடுகின்றன. இந்த கள் எட்டு இன்ச் நீளம் உடையவை; எடை நான்கு பவுண்டுகள். 250 பவுண்ட் எடையுள்ள ஒரு விலங்கு யின் மேல் உட்கார்ந்தாலும்  உடையாது. இதற்கு யின் வடிவம்தான் காரணம்! நெருப்புக் கோழி ஒன்றில் நாற்பது ஆம்லெட்டுகள் போடலாம் என்றால் அதன் அளவை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்களேன்!

இம் ஓடுகளை ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் பாத்திரங்களாகப் பயன்படுத்துகின்றனர்!

கண்டுபிடியுங்கள்!

1. உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சி எது?

2. வெறி நாய்க் கடிக்கு மருந்து கண்டு பிடித்தவர் யார்?

3. நிலநடுக்கத்தைக் கண்டறியப்படும் கருவி பெயர் என்ன?

4. நம் உடலில் எத்தனை சதவீதம் நீர் உள்ளது?

5. சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு எது?

6. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் யார்?

7. தொலை நோக்கியைக் கண்டு பிடித்தவர் யார்?

8. இந்தியாவின் உயரமான நீர்வீழ்ச்சி எது?

பி. பிரசாத், பத்தாம் வகுப்பு,
திருமோகூர், மதுரை மாவட்டம்.

விடை : 1. தென் அமெரிக்காவில் உள்ள ஏஞ்சல் நீர் வீழ்ச்சி. 2. லூயி பாஸ்ட்டர் 3. நில அதிர்ச்சி மானி (Seismograph) 4. 70% 5. கியூபா 6 ரவீந்திர நாத் தாகூர் 7. கலிலியோ 8. மைசூரில் உள்ள ஜோக் நீர்வீழ்ச்சி

கண்டு பிடித்தவர்களைக் கண்டுகொள்ளுங்கள்!



அச்சு இயந்திரம் - கூட்டன் பர்க்

கிராம போன் - தாமஸ் ஆல்வா எடிசன்

டீசல் எஞ்ஜின் - ருடால்ப் டீசல்

தந்தி - சாமுவேல் மோர்ஸ்


வானொலி - மார்கோனி

விமானம் - ரைட் சகோதரர்கள்

பாரமானி - டாரிசெல்லி

மைதிலி, ஏழாம் வகுப்பு,
அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
மானாமதுரை.

குறுக்கெழுத்துப் புதிர் - விடை



வேதவாசகப்படி...

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்



காட்சி 1

(ஜேம்ஸ் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் செய்து கொண்டிருக்கிறான்.)

மேரி: அண்ணா, வழிவிட்டு உட்காரு!

ஜேம்ஸ்: ஏய், நீதான் பார்த்துப்போ! நான் என்ன செய்துக்கிட்டிருக்கேன்னு தெரியுது இல்லே?

மேரி: நீ கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை தயார் பண்ணிக்கிட்டிருக்கேன்னு தெரிஞ்சுதான் சொல்றேன்... போக வர வழிவிட்டு உட்கார்ந்தா நல்லாயிருக்கும் இல்லே...

ஜேம்ஸ்: எல்லாத்தையும் பரப்பிக்கிட்டு உட்கார்ந்தாச்சு. என்னால நகர முடியாது. நீயே பார்த்துப் போய்க்கோ!

அப்பா: மேரி!

மேரி: என்னப்பா?

அப்பா: குடிக்கத் தண்ணி கொண்டு வாம்மா!

மேரி: இதோ கொண்டு வரேன்பா!

(மேரி டம்ளரில் தண்ணீர் கொண்டு வர, அது தவறி கீழே விழுந்து, வாழ்த்து அட்டைகளை நனைக்க)

ஜேம்ஸ்: அச்சச்சோ... சொன்னா கேட்டியா? என்ன ஆச்சு பார்த்தியா?... எத்தனை வாழ்த்து அட்டை பாழாயிடுச்சு!

மேரி: 'சாரி' அண்ணா.

அப்பா: மேரி, அங்கே என்னம்மா சத்தம்? தண்ணி கேட்டேனே என்ன ஆச்சு?

மேரி: இதோ வரேன்பா! ரூமுக்கு வர வழியிலே ஜேம்ஸ் உட்கார்ந்துகிட்டிருக்கான்... கை தவறி தண்ணி கொட்டிடுச்சு... வாழ்த்து அட்டைகள் நனைஞ்சு போச்சுப்பா... இங்கே வந்து பாருங்க!

அப்பா: அடேடே, என்ன ஜேம்ஸ், ஓரமா வச்சுக்கிட்டு செய்யக் கூடாது?

மேரி: நானும் அப்பவே சொன்னேன். கேட்கலே.

ஜேம்ஸ்: போடி... அப்பா இவ கை தவறி ஒண்ணும் கொட்டலே... வேணும்னுதான் கொட்டியிருக்கா!

மேரி: ஐய்யய்யோ... இல்லேப்பா!

ஜேம்ஸ்: இல்லேப்பா!... வேணும்னுதான் செய்திருக்கா! வழியில உட்கார்ந்து செஞ்சுக்கிட்டிருக்கேன்னு கோபம்!

மேரி: ஜேம்ஸ் அண்ணா அப்படி ஒண்ணும் இல்லே... கை தவறிதான் கொட்டிட்டேன். இரு... நனைஞ்ச அட்டைகளை நானே துடைச்சு வெளியிலே நல்லா காய வைச்சு கொண்டு வரேன்!

ஜேம்ஸ்: ஒண்ணும் வேணாம்!... போடி... பொறாமைக்காரி!

மேரி: அப்பா பாருங்க, என்னென்னமோ சொல்றான்! இல்லாததெல்லாம் சொல்றான்! (அழுகிறாள்)

அப்பா: ஜேம்ஸ்!... மேரியைப் பாரு

எப்படி அழறா... ஏன் அப்படியெல்லாம் சொல்றே?

ஜேம்ஸ்: நான் அப்படித்தான் சொல்வேன். அப்பத்தான் இன்னொருமுறை தப்பு செய்ய மாட்டா...

மேரி: நீ வழியிலே உட்கார்ந்தது தப்பு தானே... சரி நான் செய்தது தப்பா இருந்தா என்னை மன்னிச்சுடச் சொல்லுங்கப்பா...

ஜேம்ஸ்: ம்ஹூம் நான் மன்னிக்க மாட்டேன்.

மேரி: ஜேம்ஸ் அண்ணா, என்னை மன்னிச்சேன்'னு ஒரு வார்த்தை சொல்லலேன்னா அப்புறம் நான்...

ஜேம்ஸ்: என்ன செய்வே?

மேரி: கிறிஸ்துமஸ் பண்டிகையன்னிக்கு எந்த இனிப்பும் சாப்பிட மாட்டேன்...

ஜேம்ஸ்: சாப்பிடாட்டா போ!

அப்பா: ஜேம்ஸ், மேரி பாவம்டா, மன்னிச்சுடுடா!

ஜேம்ஸ்: போங்கப்பா, உங்களுக்கு எப்பவும் அவமேலதான் ரொம்ப செல்லம், நகருடி!

காட்சி 2

இடம்: டேவிட் வீடு

ஜேம்ஸ்: டேவிட்! டேவிட்!

டேவிட்: வா ஜேம்ஸ்!... உன் வாழ்த்து அட்டை கிடைச்சது... ரொம்ப நல்லாயிருந்தது. உனக்கும் என் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்.

ஜேம்ஸ்: நன்றி! என்ன செய்துகிட்டிருக்கே?

டேவிட்: இதெல்லாம் என்னோட பரிசுப் பொருட்கள்! ஒரே தூசு படிஞ்சிருந்தது. எல்லாத்தையும் எடுத்துத் துடைச்சு பளபளப்பா பாலிஷ் போட்டுக்கிட்டிருக்கேன்.


டேவிட்: ஜேம்ஸ், இந்த 'சர்ச்' பொம்மை உனக்கு ஞாபகமிருக்கா...?

ஜேம்ஸ்: ம்! இருக்கே... நாம் கலந்துக்கிட்ட டிராயிங் போட்டியிலே உனக்குக் கிடைச்ச பரிசுதானே?

டேவிட்: ஆமாம்! உனக்கு எந்தப் பரிசும் கிடைக்கல்லேன்னு நீ அன்னிக்கு அழுதது இப்போகூட எனக்கு நினைவிருக்கு – அதுக்கப்புறம் நீ ரொம்ப நாளா எங்கிட்டே பேசக் கூட இல்லே...

ஜேம்ஸ்: நானும் துடைச்சு தரேன்... துணி கொடு!

டேவிட்: ரொம்ப மகிழ்ச்சி ஜேம்ஸ்! (உள் அறையில் போன் அடிக்கிறது) ஜேம்ஸ், நீ துடைச்சுக்கிட்டிரு, நான் 'போன்' பேசிட்டு



வரேன்! இந்தா துணி!

ஜேம்ஸ்: (தனக்குள்) "ஆகா! இந்த சர்ச் எவ்வளவு அழகாயிருக்கு... எனக்குக் கிடைச்சிருந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்... எப்பவும் இவனுக்கே எல்லா பரிசும் கிடைச்சுடறது...

(டேவிட் போன் பேசி விட்டு திரும்பி வரும்போது, 'சர்ச்' பொம்மை கீழே விழுந்து உடைந்திருப்பதைக் கவனிக்கிறான்)

டேவிட்: என்ன ஆச்சு ஜேம்ஸ்?

ஜேம்ஸ்: துடைச்சுக்கிட்டேயிருந்தபோது கை தவறிக் கீழே விழுந்துட்டுது டேவிட்!

டேவிட்: ஜேம்ஸ்!... நல்லவேளைடா... சர்ச் உடைஞ்சாலும், உள்ளே இருந்த இந்த கர்த்தருக்கு எதுவும் ஆகலேடா! இந்தா, இந்த கர்த்தரை உன் உள்ளங்கையிலே வச்சு பாரேன்... பார்த்துக்கிட்டே இருக்கலாம் போல இருக்கும்!

ஜேம்ஸ்: டேவிட் என் மேல கோபமா?


டேவிட்: இல்லேடா! (என்றபடி பைபிளை எடுத்துப் புரட்டுகிறான்)

ஜேம்ஸ்: என் மூஞ்சியைப் பார்த்து சொல்லுடா! என் மேலே கோபமாடா!

டேவிட்: இல்லைடா! கொஞ்சம் இரு, ஜேம்ஸ்! இந்த பைபிள்ளே ஒரு வாசகத்தைப் பத்தி எட்வின் சந்தேகம் கேட்டான்... போன்லே சொல்லிட்டு வந்துடறேன். மத்த பரிசுகளையும் துடைச்சுக்கிட்டிரு, வரேன்!

டேவிட்: (திரும்பி வரும்போது ஜேம்ஸ் கண்களில் கண்ணீர் வருவதைக் கவ





''அவனுக்கு ரொம்ப தமிழ்ப்பற்று...!''

''அதுக்காக ஆங்கிலப் பரீட்சையைக் கூட தமிழ்ல எழுதுவேன்னு பிடிவாதம் செஞ்சா எப்படி?''

— கே. சோமசேகர்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

னித்துவிட்டு) ஏ... ஜேம்ஸ்! என்ன இது?... ஏன் அழறே?

ஜேம்ஸ்: டேவிட், என்னை மன்னிச்சுடுடா! கிறிஸ்துமஸும் அதுவுமா, உன் பரிசுப்பொருளை அதுவும் 'சர்ச்சை' உடைச்சுட்டேன் - என்னை மன்னிச்சுடுடா!

டேவிட்: நீ என்னடா பெரிசா தப்பு செஞ்சுட்டே? தன்னை சிலுவையிலே அறைஞ்சவங்களோட தவறை ஏசு மன்னிச்சார்! தன்னைத் துப்பாக்கியால சுட்டவனை காந்திஜி மன்னிச்சார்! ஆனா எந்தத் தவறும் செய்யாத உன்னை நான் எதுக்குடா மன்னிக்கணும்! நீ வேணும்னா போட்டு உடைச்சே?... இல்லையே... கை தவறிதானே விழுந்திருக்கு!

ஜேம்ஸ்: இல்லேடா டேவிட்! நீ நினைக்கறபடி இந்த 'சர்ச்' என் கை தவறி விழலே...

டேவிட்: பின்னே...?

ஜேம்ஸ்: இந்தப் பரிசு உனக்குக் கிடைச்சுட்டுதேங்கிற பொறாமை என் மனசுக்குள்ளேயே இவ்வளவு நாளா இருந்தது. அந்தப் பொறாமையாலதான், நான் வேணும்னே இதைக் கீழே போட்டு உடைச்சுட்டேன்டா! என்னை மன்னிச்சுடுடா! 'சர்ச்'க்குள்ளே இருந்த இந்த கர்த்தர் என்னையே பார்க்கற மாதிரி இருக்குடா! என்னை மன்னிச்சுடுடா! 'ப்ளீஸ்'!

டேவிட்: மன்னிச்சுட்டேன் ஜேம்ஸ். மன்னிச்சுட்டேன் - கண் கலங்காதே! இந்தக் கர்த்தருக்குப் பிரியமானவங்களா நாம இருக்கணும்னா ஒருவருக்கொருவர் மன்னிக்கவும் தெரிஞ்சுக்கணும் ஜேம்ஸ்! ''கிறிஸ்துவுக்குள் 'தேவன்' உங்களுக்கு மன்னிப்பு வழங்குவதைபோல, நீங்களும் மற்றவர்கள் தவற்றை மன்னித்து விடுங்கள்!'' - எபேசியருடைய (எபேசியர்: 4:32) இந்தப் பொன்மொழி எனக்கு ரொம்பப் பிடிக்கும் ஜேம்ஸ்! உண்மையிலே நான் தான் உனக்கு ரொம்ப நன்றி சொல்லணும் ஜேம்ஸ்!

ஜேம்ஸ்: எதுக்கு டேவிட்?

டேவிட்: இந்த கிறிஸ்துமஸ் நன்னாளிலே ஒரு வேத வாசகப்படி நடந்துக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சுட்டுது. இந்த சந்தர்ப்பத்தை நீதான் எனக்குத் தந்திருக்கே! வேதவாசகப்படியே உன்னை மன்னிச்சது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு, உனக்கு...?

ஜேம்ஸ்: (மௌனம்)

டேவிட்: ஏன்டா ஜேம்ஸ், நான்தான் மன்னிச்சுட்டேனே - உனக்கும் மகிழ்ச்சி தானே? ஏன் கவலையா இருக்கே?

ஜேம்ஸ்: டேவிட்! தவறு செய்த என்னையே நீ மன்னிச்சுட்டே! ஆனா நான், தவறே செய்யாத என் தங்கை மேரியை கோபிச்சுக்கிட்டேன்... அவ மேல அனாவசிய பழி சுமத்தினேன்.... அவ மன்னிப்பு கேட்டுங்கூட நான் கடுமையா நடந்துக் கிட்டேன். அதனால மேரி இந்தக் கிறிஸ்துமஸ் நாள்ளே எந்த இனிப்பையும் சாப்பிட மாட்டேன்'னு வருத்தமா வீட்டுல இருக்கா... நான் இப்பவே வீட்டுக்குப் போய், அவளை மன்னிக்கணும்போல இருக்கு!

டேவிட்: அப்படீன்னா உடனே கிளம்பு ஜேம்ஸ்! இந்தா உங்களுக்கு கிறிஸ்துமஸ் இனிப்பு. மேரியை 'மன்னிச்சேன்'னு அன்பா சொல்லிடு. இந்த கர்த்தர் உருவமும் உங்கிட்டேயே இருக்கட்டும்! - முடிஞ்சா நீயே புதுசா 'சர்ச்' கட்டி வை!

ஜேம்ஸ்: நன்றி டேவிட்! நான் ஒரு வேளை சர்ச் கட்டிட்டா, நீதான் திறந்து வைக்கணும்!

(சிரித்தபடி செல்கின்றனர்.)



ஒரு ரூபாய்..!

பெரிய செல்வந்தரின் ஒரே மகன் கோபி.

அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்தார். ஒழுங்காகப் படிக்காமல் நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, அரட்டை அடிப்பது என்று பொழுதைக் கழித்தான் கோபி.

செல்வந்தரும் அவனுக்கு எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லிப் பார்த்தார். ஆனால், அவனோ அதை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. தன் இஷ்டப்படி ஊதாரித்தனமாக செலவு செய்து கொண்டும் பொழுதை வீணாக்கிக் கொண்டும் இருந்தான்.

வருடங்கள் ஓடின. அவனைப் போன்ற மாணவர்கள் பள்ளி இறுதிக்கு வந்திருந்தனர். மகனின் செயலால் செல்வந்தர் படுத்த படுக்கையாக இருந்தார்.

செல்வந்தர் தன் மகனை அழைத்தார். "கோபி! இதுநாள் வரைக்கும் உன் இஷ்டப்படியே வாழ்ந்திட்டே. நானும் எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லிப் பார்த்தேன். ஆனா அதையெல்லாம் நீ கேட்கலே. இப்ப நான் சொல்ற ஒரே ஒரு புத்திமதியையாவது கேட்பியா?" என்றார் கோபியின் கைகளைப் பிடித்தபடி.

அவனும், "சரி! சொல்லுங்கப்பா" என்றான். "நீ எப்பவும் போல நான் சேர்த்து வச்ச பணத்தை எடுத்து செலவு பண்ணிட்டு இரு. ஆனா நீ அப்படி பணத்தை எடுக்கறப்ப ஒரே ஒரு ரூபாயை சொந்தமா உழைச்சி சம்பாதிச்சி அதுல போட்டுட்டு, வேண்டிய பணத்தை எடுத்துக்க"

என்றார்.

அப்பா சொன்னது கோபிக்கு விசித்திரமாகப் பட்டது. ஆனாலும் அப்போதைக்கு "சரி" என்று தலையாட்டி வைத்தான். சில நாட்களில் செல்வந்தர் இறந்து போனார்.

கோபியின் வாழ்க்கையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. வழக்கம் போல ஊர் சுற்றுவது, செலவு செய்வது என உல்லாசமாக வாழ்ந்து வந்தான்.

ஒருநாள் பணம் எடுக்கும் போது திடீரென்று கோபிக்கு அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது.

"அப்பா எவ்வளவோ புத்திமதி சொன்னார். அதையெல்லாம் நான் கடைசி வரைக்கும் கேட்கவே இல்லை. அப்பா கடைசியா என்கிட்டச் சொன்னதையாவது கேட்டுத்தான் பார்ப்போமே?" என்று நினைத்த உடனே செயல்படுத்தத் துவங்கினான்.

ஒரு கடைக்காரரிடம் சென்று, "எவ்ளோ நேரம் வேலை செஞ்சா ஒரு ரூபா கூலி தருவீங்க?" என்று கேட்டான்.

"ஒரு ரூபா வேணும்ன்னா ஒரு மணி நேரம் வேலை செய்யணும்" என்றார் கடை முதலாளி.

ஒரு ரூபாய் சம்பாதித்து வந்து தன் அப்பா சம்பாதித்து வைத்திருந்த பணத்தில் போட்டு விட்டு, தனக்குத் தேவையான பணத்தை எடுத்துச் செலவு செய்தான். இந்தப் பழக்கம் தொடர்ந்தது.

இப்படி ஒரு தடவை பணத்தை எடுக்கும் போது அவனுக்கு ஒரு சிந்தனை தோன்றியது.

"ஒரு ரூபா சம்பாதிக்கறதுக்கே, ஒரு மணி நேரம் நான் கஷ்டப்பட வேண்டியிருக்கே? அப்படின்னா இவ்வளவு பணத்தையும், சொத்தையும் சம்பாதிக்க அப்பா எத்தனை நாள், எத்தனை வருஷம், ராத்திரி, பகலா கஷ்டப்பட்டிருப்பாரு? நான் ஒரு ரூபாய் சம்பாதிச்சி போட்டுட்டு ஆயிரக்கணக்குல பணத்தை எடுத்து செலவு பண்றது எந்தவிதத்துல நியாயம்?" என யோசிக்கத் தொடங்கினான்.

அன்று முதல் சொந்தமாக சம்பாதிக்க ஆரம்பித்தான். அப்பா சம்பாதித்து வைத்திருந்த பணத்தையும், சொத்தையும் பல மடங்காக்க உழைக்கத் தொடங்கினான்.

- போளூர். எல். பாபு



அரும்பெரும் காரியங்களைச் சாதிக்கக்கூடியவர்களே எப்போதும் அமைதியாக இருக்க முடியும் என்பதற்கு திலகரும் ஓர் உதாரணம். சுதந்திரப் போராட்டத்தின்போது ஒரு நாள் இரவு 12 மணிக்கு போலீசார் அவரது வீட்டிற்கு வந்து அவரைக் கைது செய்து வண்டியில் ஏற்றிக் கொண்டு கிளம்பினார்கள். வண்டி தெருவைக் கூடத் தாண்டியிருக்காது. திலகர் நிம்மதியாக உறங்க ஆரம்பித்து விட்டார்!

– திலகரின் வாழ்வில் நூலிலிருந்து

தகவல் : எஸ். கார்த்திகேயன்

சிரிப்..!

"வாழைப்பழம் ஒரு சீப்பு கொடுப்பா?"

"வாழைப்பழம் மட்டுந்தான் விக்கி றோம். சீப்பு விக்கறதில்லைங்க!"


— ஏழ்வரைக்கடியான்



"பை கேட்டா இந்தக் கடைக் காரன் என்னாட்டம் மூஞ்சியை வைச்சுக்கிறான்."

எனக்கு அந்தக் கவலையே இல்லை!"

— சுப்பு வேதையா சித்தரவேலு, கருப்பம்புலம்.




"அந்த போட்டோ கடைக்காரர் தொழிலுக்கு புதுசு போல இருக்கு!"

"எப்படிச் சொல்றே?"

"ஸ்டாம்ப் சைஸ் போட்டோ தேவைன்னா ஒரு ரூபா ஸ்டாம்ப் சைஸா இல்லே பத்து ரூபா ஸ்டாம்ப் சைஸான்னு கேட்கிறாரு!"

— நரேந்திரன், திருப்போரூர்.






"இந்த செய்தித் தாளை கரண்ட் இல்லாட்டி படிக்க முடியாது போலிருக்கே?"

"ஏன்?"


"இதில் 'கரண்ட் நியூஸ்' மட்டும்தான் வரு தாம்!"

— எ. ராகவேந்திரா, திருக்கண்ணங்குடி.



"குறும்பு பண் ணாதே பாம்பாட்டி வர் றான். பிடிச்சுக் கொடுத்திடு வேன்!"

— இரா. உதயகுமார், முழையூர்



சாக்ரட்டிஸ்

சாக்ரட்டிஸ் ஒரு பெரும் தத்துவ ஞானி. வாழ்க்கையின் சிறு நிகழ்ச்சிகளின் வாயிலாகவும், சாதாரண உரையாடல்கள் மூலமாகவும், மக்களுக்கு அறிவு புகட்டியவர். ஒருமுறை அவருடைய நண்பர், சாக்ரட்டிஸுடன் உரையாட வந்தார்.

நண்பர் : "சாக்ரட்டிஸ் அவர்களே, உங்களுக்கு ஒரு செய்தி தெரியுமா?"

சாக்ரட்டிஸ் : "ஒரு நிமிடம் நண்பரே. நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி உண்மைதான் என்று நிச்சயமாகத் தெரியுமா?"

நண்பர் : "அது... தெரியாது. மற்றவர்கள் பேசியதைத்தான் நான் கேட்டேன்."

சாக்ரட்டிஸ் : "சரி. அது ஒரு நல்ல செய்திதான் என்று சொல்ல முடியுமா?"

நண்பர் : "இல்லை. சொல்லப்போனால், அதற்கு நேர் மாறானது."

சாக்ரட்டிஸ் : "இதைத் தெரிந்து கொள்வது பயனுள்ளது; அதனால் மற்றவர்களுக்குத் துன்பம் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என்றாவது சொல்ல முடியுமா?"


நண்பர் : "அப்படியும் சொல்ல முடியாது."


சாக்ரட்டிஸ் : "நண்பரே, அப்படியானால் அதை நாம் மறந்து விடுவோம். அதைப் பற்றி நினைக்கவும், பேசவும் வேண்டாம். வாழ்வில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள செய்திகளும், உண்மைகளும் பல உள்ளன. அப்படியிருக்கையில், எந்த செய்தி உண்மையானதாகவோ, நல்லதாகவோ, பயனுள்ளதாகவோ இல்லையோ, அதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?"

எஸ். லக்ஷ்மி,
ஏழாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
நங்கநல்லூர் - 61

வண்டுகள்

ஆழி






○ உலகில் பூக்கும் தாவரங்கள் தோன்றுவதற்கு 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே, வண்டு இனங்கள் தோன்றிவிட்டன என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். அமெரிக்க மண்ணியல் ஆராய்ச்சியில், சுமார் 390 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய வண்டுத் துளைகளை பூமிக்கு அடியில் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

○ உலகில் சுமார் 30 லட்சம் பூச்சி இனங்கள் இருக்கின்றன என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். உலகம் முழுவதும் உள்ள விலங்கு இனங்களின் எடையை விட, பூச்சி இனங்களின் எடை 3 மடங்கு அதிகம். இவற்றில், வண்டுகளில் ஏராளமான இனங்கள் இருக்கின்றன. ஒருவர் தினந்தோறும் வண்டுகளைப் பற்றிப் படித்து வந்தாலும் முழுமையாகத் தெரிந்து கொள்ள சுமார் 60 ஆண்டுகள் ஆகும்!

○ இதுவரை சுமார் 2,50,000 வண்டுகளுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். வண்டுகளின் தோற்றம், நிறம், பழக்க வழக்கங்கள் இவற்றைக் கொண்டு பெயர் வைக்கிறார்கள்.



கலைமான் கொம்பு வண்டு




நான்கு புள்ளி வண்டு




சீப்புக்கொம்பு வண்டு

ஒரு வண்டின் உருமாற்றம்:





பொதுவாக, முட்டையிலிருந்து உருமாற்ற மடைந்து வண்டாக வெளிவருவதற்கு இனத்திற்குத் தகுந்தவாறு 5 மாதங்கள் முதல், 5 ஆண்டுகள் வரை ஆகும்.

○ வண்டுகளுக்கு மூன்று ஜோடி கால்களும், இரண்டு ஜோடி சிறகுகளும் இருக்கின்றன. கால்களின் நுனி கூரிய நகங்கள் போல் இருக்கும். இதன் உதவியால் மரத்தின் இலைகளையும் கிளைகளையும் பற்றிக் கொள்ளும்.




வண்டின் மூச்சுத் துளைகள் வயிற்றுப் பகுதியில், பக்க ஓரங்களில் இருக்கின்றன. அவற்றின் வழியாகவே மூச்சு உறுப்புகளுக்குக் காற்று புகுகிறது.






○ வண்டுகளின் சிறகு ஓடுகள் கெட்டியான இழைகளின் அடுக்குகளால் ஆனவை. இழைகள் ஒருவிதப் புரதப் பசையால் பிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஓடுகள் ':.பைபர் கிளாஸ்' பேனல்களைவிட கெட்டியானவை. இந்த அமைப்பைப் போலத்தான் விமான உடல் அமைப்பை உருவாக்குகிறார்கள்.




○ வண்டின் இரண்டு ஜோடி சிறகுகளில், மேலே உள்ள சிறகுகள் கடினமும் உறுதியும் கொண்டவை. இவை 'சிறகு மூடிகள்' எனப்படும். இவை பாதுகாப்புக்கு. பறப்பதற்கு உதவுகிறவை அடியில் உள்ள சிறகுகளே.


○ வண்டுகளின் இரை, மரத்தின் இலைகள், மரப் பட்டைகள், மரத்தின் உள்ளே உள்ள சாற்றுப் பகுதி, சிலவற்றிற்குப் பழங்கள், பூக்களின் தேன்.




○ வண்டுகளுக்குப் பார்வையைக்காட்டிலும் மோப்ப சக்தியே அதிகம். சில வண்டுகள் சுமார் 1 கி.மீ. தொலைவில் உள்ள தன் இரையைக்கூட, மோப்ப சக்தியால் கண்டுபிடித்து விடுகின்றன.




○ வண்டின் வாயுறுப்புகளின் மேல், 'தொடுகொம்புகள்' என்னும் கணுக்களைக் கொண்ட உறுப்புக்கள் உள்ளன. இவற்றால் வண்டு தன் இரையைத் தொட்டு அறிகிறது.





○ வண்டுகளில் மிகவும் கனமானது ஆப்பிரிக்காவில் உள்ள 'கோலியத்'. இதன் எடை சுமார் 100 கிராம்! 11. செ.மீ. நீளம் இருக்கும்! இதன் லார்வா பருவ நிலையில், ஆப்பிரிக்க ஆதிவாசிகள் சூப் செய்து சாப்பிடுவார்கள். இது பறக்கும்போது பலத்த சத்தம் கேட்கும். 'கோலியத்' என்பது, பைபிளில், பழைய ஏற்பாட்டில் வரும் ஒரு ராட்சசனின் பெயர்!




○ கோலியத் வண்டின் தலையில் உறுதியான இரு கொம்புகள் உண்டு. மரங்களின் பட்டைகளை இந்தக் கொம்புகளால் குடைந்து தாவர ரசத்தை உறிஞ்சும். ஓர் உயிர்க் காட்சி சாலையில் இருந்த ஒரு கோலியத் வண்டு, தன் கொம்புகளாலேயே வாழைப் பழத்தின் தோலை உரித்துச் சாப்பிட்டது!

○ உலகில் மிகவும் பலம் பொருந்திய வண்டு ரைனோசெரஸ் என்னும் காண்டா மிருக வண்டு. அது தன் உடலின் எடையை விட 30 மடங்கு எடையைத் தாங்கும்!









○ வண்டு இனங்களில் நீண்டகாலம் உயிர் வாழக்கூடியது 'விட்டில் வண்டு'. சுமார் 30 ஆண்டுகள் உயிர்வாழும். கெட்டியான எந்த மரத்தையும், உலோக டின்களையும் கூட துளையிட்டு விடும்!

○ வண்டுகளில், 'லேடி பேர்ட்' என்று ஓர் இனம் இருக்கிறது. அழகாக இருக்கும். இது தனக்கு ஆபத்து என்று தெரிந்தால், தன் கால்களின் வழியே கெட்ட நாற்றமுடைய இரத்தத்தைப் பீச்சி, எதிரிகளை விரட்டி விடும்!




○ அமெரிக்க ஹெர்குலிஸ் வண்டுதான், வண்டு இனங்களிலேயே மிக நீளமானது. இதன் நீளம் சுமார் 18 செ.மீ. இதன் கொம்புகள் பயங்கரமாக இருக்கும். பெண்வண்டுகளைக் கவர்வதற்காக, ஆண் வண்டுகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொள்ளும். இதில் நீளமான கொம்புடைய வண்டே வெற்றி பெறும்! சில சமயம் ஏதாவது ஒரு வண்டு இறக்கும் வரை இந்தச் சண்டை நீடிக்கும்!

○ 'ஸ்கேரப்' என்பது எகிப்தில் உள்ள சாணி வண்டுகளில் ஒரு வகை. பழங்காலத்தில் இந்த வண்டுகளை எகிப்தியர்கள் புனிதமாகக் கருதினார்கள். இவை சாணிகளைச் சிறு சிறு உருண்டைகளாக உருட்டியபடி சென்று, பூமிக்கு அடியில் வைக்கும். இந்தச் சாணி உருண்டைக்குள் தான் முட்டையிடுகின்றன. உலகில் சுமார் 20,000 வகை சாணிவண்டுகள் இருக்கின்றன.



நோபல் பரிசு



பல்வேறு துறைகளில் அரிய சாதனை புரிந்தவர்களுக்கு சில சர்வதேச நிறுவனங்கள் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கி வருகின்றன. இவற்றுள் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவது 'நோபல் பரிசு'.

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஆல்பிரட் பென்ஹாட் நோபல் என்ற அறிஞர் வெடிமருந்துகளைக் கண்டறிந்து பெரிய பணக்காரர் ஆனார். தான் ஆக்க வேலைகளுக்காகக் கண்டுபிடித்த வெடிமருந்து போர் போன்ற அழிவு வேலைகளுக்கு பயன்படுவதைக் கண்டு மனம் வருந்தினார். அதனால் மக்களின் நன்மைக்காக உழைப்பவர்களுக்கு உற்சாகப்படுத்தி பரிசுகளை வழங்க முடிவெடுத்தார். இப்பரிசுகளுக்காக தாம் சம்பாதித்த பெரும் பகுதி பணத்தை நோபல் நிறுவனத்துக்கு உயில் எழுதி வைத்தார்.

இந்நிதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு 1901ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இயற்பியல், வேதியியல் பரிசுகளை ஸ்வீடன் விஞ்ஞானக் கழகமும், மருத்துவப் பரிசை அந்நாட்டு கரோலின் மருத்துவக் கழகமும் முடிவு செய்கின்றன. ஸ்வீடன் நாடாளுமன்றம் நியமிக்கும் ஐவர் கொண்ட குழு சமாதானப் பரிசுக்குரியவரைத் தேர்ந்தெடுக்கிறது.


இந்த ஆண்டு மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம், இயற்பியல், வேதியியல், அமைதி ஆகிய துறைகளில் சாதனை புரிந்தவர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் இலக்கியத்திற்காகவும், சர் சி.வி.ராமன் இயற்பியலுக்காகவும், வெளிநாட்டில் வசித்த இந்தியர் சுப்ரமணியன் சந்திரசேகர் கருந்துளை பற்றிய வான் ஆராய்ச்சிக்காகவும், அன்னை தெரசா அமைதிக்காகவும் இந்தியாவின் புகழ் ஓங்கும் வகையில் நோபல் பரிசு பெற்றுள்ளனர்.

— கோ. சதீஷ்குமார்,
திருவல்லிக்கேணி,
சென்னை.

டென்னிஸ்

◆ டேவிஸ் கோப்பை உலகக்குழுவில் நுழையும் தகுதியை சிலியை வென்ற இந்தியா பெற்றது. லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடி இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தனர். இது வரையில் இவர்கள் இருவரும் விளையாடிய 59 போட்டிகளில் 50 போட்டிகளை வென்றிருக்கிறார்கள். உலகில் உள்ள மிகச் சிறந்த டென்னிஸ் இரட்டையர்களில், இவர்



கள் முதல் பத்து பேர்களுக்குள் அடங்குகிறார்கள். லியாண்டர் பயஸ் 24 வயது ஆனவர். மகேஷ் பூபதிக்கு வயது 23 தான். இளம் வயதிலேயே டென்னிஸ் உலகில் சிறப்பான இடத்தைப் பிடித்தது பெரிய விஷயம் தான். லியாண்டர் பயஸ் ஒலிம்பிக் விளையாட்டில் பங்கேற்று, வெண்கலப் பதக்கத்தைப் பெற்றபோது இந்தியாவே பெருமையடைந்தது. தொடர்ந்து இந்த இந்திய இரட்டையர்கள் தொடர் வெற்றிகளால் நம்மைப் பிரமிக்க வைப்பார்கள் என எதிர்பார்ப்போம்.

கிரிக்கெட் டேட்டா

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே இன்னிங்ஸில் 300 ரன்களுக்கு மேல் எடுத்தவர்கள் இதுவரை 14 பேர். அதில் பிரியன் லாரா, ஜெயசூர்யா ஆகியோரை நாம் நன்கறிவோம். இதோ முழுமையான பட்டியல்.

யார்?	எந்த நாடு?	யாருடன்?	எவ்வளவு?	எந்த ஆண்டு?
1. ஆண்டி சாந்தம்	இங்கிலாந்து	மேற்கிந்தியத்தீவு	325	1929-30
2. பின் பிராட்மேன்	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	334	1930
3. வால்டர் ஹாம் மோண்ட்	இங்கிலாந்து	நியூசிலாந்து	336*	1932-33
4. பின் பிராட்மேன் (இரண்டாவது முறை)	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	304	1934
5. லென் ஹட்டன்	இங்கிலாந்து	ஆஸ்திரேலியா	364	1938
6. ஹனிப் மொஹமத்	பாகிஸ்தான்	மேற்கிந்தியத்தீவு	337	1957-58
7. கேரி சோபர்ஸ்	மேற்கிந்தியத்தீவு	பாகிஸ்தான்	365*	1957-58
8. பாப்பி சிம்ஸன்	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	311	1964
9. ஜான் எட்ரிச்	இங்கிலாந்து	நியூசிலாந்து	310*	1965
10. பாப் கவுபர்	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	307	1965-66
11. லாரன்ஸ் ரோவ்	மேற்கிந்தியத்தீவு	இங்கிலாந்து	302	1973-74
12. கிரகாம் கூச்	இங்கிலாந்து	இந்தியா	333	1990
13. பிரியன் லாரா	மேற்கிந்தியத்தீவு	இங்கிலாந்து	375	1993-94
14. சனத் ஜெயசூர்யா	ஸ்ரீலங்கா	இந்தியா	340	1997

* ஆட்டமிழக்காதவர்கள்

— விளையாட்டுப் பையன்

எது? எப்படி?

பார்ப்பது எது? கண்ணா? மூளையா?



நாம் பலப்பல காட்சிகளைப் பார்த்து ரசிக்கிறோம் அல்லவா? நாம் காணும் காட்சியை நமது கண் எப்படிப் பார்க்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? நாம் கண்ணால் மட்டுமல்ல, மூளையாலும் கூட பார்க்கிறோம். என்ன? ஆச்சரியமாக இருக்கிறதா! நம் கண் பார்ப்பது எப்படி என்று சொல்லட்டுமா?

உலகிலுள்ள எல்லாப் பொருள்களுமே ஒளியைப் பிரதிபலிக்கும் தன்மை கொண்டவை. ஆனால் பிரதிபலிப்புத்திறன் வெவ்வேறானவை. முதலில் நாம் பார்க்கும் உருவத்திலிருந்து வெளிப்படும் ஒளி (அதாவது பிரதிபலிக்கும் ஒளி) கண்ணிலுள்ள 'லென்ஸின்' வழியே ஊடுருவி, விழித்திரையை அடைகிறது. அங்கு 'பிம்பம்' தலை கீழாக விழுகிறது. உருவத்தின் ஒளி விழித்திரையைத் தாக்கியவுடன், அங்கிருக்கும் சிறப்பு செல்கள், அந்த 'படத்தகவலை' மூளைக்கு அனுப்புகின்றன.

தலைகீழ் பிம்பத்தைப் பார்த்த மூளை, "கண்ணே! உருவங்களை இப்படியெல்லாம் கன்னா பின்னாவென்று, உன் இஷ்டப்படி தலைகீழாகப் பார்க்கக் கூடாது. இதோ பார் இப்படிதான் நேராகப் பார்க்க வேண்டும்" என்று கூறி, உருவத்தின் தலைகீழ் பிம்பத்தை, சரி செய்து நேர் பிம்பமாக்கித் தருகிறது. அதனால்தான் நாம் காணும் பொருள்களையெல்லாம் நேராகப் பார்க்கிறோம்! இதில் மூளை தலையிட்டு, நம் விழித்திரையின் பிம்பத்தை நேர் செய்யாவிடில், எல்லாமே தலைகீழாகத்தான் தெரியும். மூளை இந்த வேலையைச் செய்யாவிட்டால், உருவத்தை நேராகப் பார்க்க நாம்தான் தலைகீழாக நிற்க வேண்டும். அல்லது பொருள்களை தலைகீழாக வைத்துப் பார்க்க வேண்டும். நம் பத்திரிகையின் பெயரைக் கூட மலகுகோ, என்றுதான் அச்சடிக்க வேண்டும். இந்த நிலைமையை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன்! வேடிக்கையாக இருக்கிறதல்லவா!

நாம் ஒரு பொருளின் காட்சியைக் காண, அதன் உருவம் விழித்திரையில் விழ, பின்னர் அது மூளையை அடைய நிறைய நேரம் ஆகாது. விழித்திரையில் விழும் உருவம் மணிக்கு 280 கி.மீ. வேகத்தில், மூளைக்கு அனுப்பப்பட்டு நாம் காட்சியைப் பார்க்க முடியும்.

இதயம் எப்படி ஓய்வு எடுக்கிறது?

உங்கள் இதயம் ஒரு வருடத்தில் எத்தனை முறை துடிக்கிறது? பதில் ரொம்ப சுலபம்தான். ஒரு நிமிடத்திற்கு ஏறக்குறைய 70 முறை துடிக்கிறது. ஒரு வருடத்தில் எத்தனை முறை துடிக்கிறது என்று கணக்கிட்டுக் கண்டு பிடித்து விடலாம்.

70 X 60 X 24 X 365 = 3, 67, 92,000 முறைகள்! உங்கள் வாழ்நாளில் எத்தனை முறை துடிக்கிறது என்றால், இப்போது இந்தியாவில் மனிதனின் சராசரி வாழ்நாள் 65 வருடங்கள். மேலே குறிப்பிட்ட எண்ணிக்கையுடன் 65ஐ பெருக்கினால் போதும்.

3, 67, 92,000 X 65 = 239, 14, 80,000 முறைகள்.

எதனால்?



அது சரி! ஒருவரது இதயம் முதன் முதலாக எப்போது வேலை செய்யத் தொடங்குகிறது தெரியுமா? மனிதக் கரு உருவான *48* மணி நேரத்திலேயே இதயம் உருவெடுத்து விடுகிறது. அப்போது துவங்கிய இதயத் துடிப்பு, மனிதன் இறக்கும் வரை நிற்பது இல்லை. ஒரு நிமிடம் கூட 'ஓய்வெடுக்காத கடுமையான உழைப்பாளி' என்று எல்லோராலும் உழைப்புக்காகப் பாராட்டப்படும் உறுப்பு இதுதான்!

இதுதான் உண்மை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படியெல்லாம் இல்லை! உண்மையிலேயே அயரா உழைப்பாளி மூளைதான். தூங்கும் போதும் அது வேலை செய்கிறது. இதயம் ஒரு துடிப்புக்கு ஒரு முறை ஓய்வு எடுத்துக் கொள்கிறது. இரு துடிப்புகளுக்கு இடையே சிறிது நேரம் இருக்குமல்லவா! அந்தக் கொஞ்சுண்டு நேரத்தில் இதயம் அவசரமாக ஒரு குட்டி ஓய்வு எடுத்துக் கொள்கிறது! இந்த 'சூப்பர் மினி ரெஸ்ட்' இன் நேரம் எவ்வளவு தெரியுமா? *0.0382* நொடி!

ஆணின் குரல் உடைவது எதனால்?

நம் எல்லோருக்கும் தொண்டையில் குரல்வளைப் பெட்டி (Voice Box) இருக்கிறது. இதில் குரல் நாண்கள் உள்ளன. நாம் சுவாசிக்கும் காற்று, குரல் பெட்டியைக் கடந்து நுரையீரலுக்குள் செல்லும் போது, குரல் நாண்களில் மோதுவதால் 'ஒலி' உண்டாகிறது. வீணை அல்லது வயலினில் கட்டியுள்ள நாண்களை, விரலால் சுண்டி விடும்போது, எப்படி ஒலி உண்டாகிறதோ, அதே போலவே குரல் பெட்டியைக் காற்று தீண்டும் போது ஒலி உண்டாகிறது.

ஆண்களுக்கு நீளமான குரல் நாண்களும், பெண்களுக்கு குட்டையான குரல் நாண்களும் உள்ளன. எனவே ஆண்களுக்கு கட்டைக் குரலும், பெண்களுக்கு கீச்சுக்குரலும் உருவாகிறது. ஒலியின் தன்மை குரல் நாணின் நீளத்தையும், தடிமனையும் பொறுத்தே அமைகிறது.

ஆண் குழந்தை இளைஞனாக மாறும் போது, உடலில் இனப் பெருக்க ஹார்மோன்கள் சுரந்து, பலவித மாற்றங்களை உண்டு பண்ணுகின்றன; அத்துடன் குரலும் மாறத் துவங்குகிறது. மென்மையான குரல் போய் அந்தப் பையன் தன் குரலைக் கட்டுப்படுத்தி பேச முடியாததால், 'குரல் உடைந்து போகிறது' என்று சொல்கிறோம். நாளாவட்டத்தில் குரல் கட்டையாகி விடுகிறது.

— எஸ். மோகனா



பியானோ

சென்ற மாதம் காகித டம்ளர் செய்து பார்த்தீர்களா? நன்றாக வந்ததா? சுலபமாக இருந்ததா? இந்த மாதம் செய்யப் போவது பியானோ. சதுர வடிவத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள். (காகிதத்தை மடிக்கும்போது தரையில் வைத்தோ அல்லது மேஜையில் வைத்தோ மடிக்கவும். அப்போது தான் மடிப்பு சரியாக வரும்.)

1. தாளை மேலிருந்து கீழ் நோக்கி பாதியாக மடிக்கவும்.

2. இடது பக்க முனை வலது பக்கத்தை தொடும்படி மடித்து, மீண்டும் பழைய நிலையிலேயே வைக்கவும். இப்போது நடுவில் கோடு ஏற்பட்டிருக்கும்.

3. வலது பக்க முனையை நடுக் கோட்டில் தொடும்படி மடிக்கவும். அதே போல இடது பக்க முனையையும் மடிக்கவும்.

4. இரண்டு பக்கமும் மடித்த பின் இது போன்ற வடிவம் கிடைக்கும்.

4A. படத்தில் காட்டியபடி மடித்த பகுதியை விரித்து மடிக்கவும். அதே போல் இடதுபுறத்தையும் மடிக்கவும்.


5. படம் 5-ல் உள்ளபடி உருவம் கிடைக்கும். கீழுள்ள பகுதியை மேல் நோக்கி மடிக்கவும்.

6. படம் 6-ல் உள்ளது போல் மேல் மடிக்கப்பட்ட பகுதியை மட்டும் பாதியாக மடித்து விடவும்.

7. வலது பக்க முனையையும், இடது பக்க முனையையும் அம்புக்குறி போட்டபடி மடிக்கவும்.

8. படம் 8-ல் உள்ளது போன்ற உருவம் கிடைத்து விட்டதா?


9. இப்போது வலது, இடது புறத்தை விரிக்கவும். அழகான பியானோ கிடைத்திருக்கும்.



வண்ணக் காகிதத்தில் செய்து வீட்டு அலமாரியில் வைக்கலாம். அழகாக இருக்கும். உங்கள் அனுபவத்தை எழுதுங்கள். டம்ளர், பியானோ அடுத்தது என்ன? ஜனவரி கோகுலத்திற்காகக் காத்திருங்கள்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription — (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

ஐஸ்கிரீம் யாருக்குக் கிடைக்கும்?



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/97 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

